
# தாயகம்

ஒக்ரோபர் - டிசம்பர் 2009



50/=

கலை இலக்கிய சமூக விஞ்ஞான காலாண்டிதழ்

 மணி

# புரட்சியின் பாட்டு...

புரட்சியின் பாட்டொன்றை எனக்காக
புரட்சியின் பாட்டொன்றை நீ பாடு


உலகம் முழுவதும் பெருந்தீ போல்
பரவிட விரியும் புரட்சியது
மண்ணில் இருந்தொரு செங்கொடியை -
கைகளில் விரிந்திடச் செய்திடுமோர்
(புரட்சியின் பாட்டொன்றை)

முடிந்ததோர் காலம் அமிழ்ந்தழிய
இளமையுஞ் சிரிப்பும் வலிமை தர
ஐயத்தின் சாயல் அறவொழிய
இடியென ஒலிமிகக் கூவியெழும்
(புரட்சியின் பாட்டொன்றை)

பன்னூற்றாண்டின் போர் அழிவும்
மன்னர்கள் பொய்யர்கள் வஞ்சனையும்
புதுநல வாழ்வின் நகையிலினை
முடிவுறப் பேரலை யாய் உயரும்
(புரட்சியின் பாட்டொன்றை)

கருநிற இனத்தவர் தளை அகல
பிணித்திடும் விலங்குகள் உடைந்து அற
மனிதரைப் பிரிக்கும் மதில்கள் விழக்
கொடுமையின் தெய்வங்கள் கதிகலங்க
(புரட்சியின் பாட்டொன்றை)

மானுடப் பிறவியின் சிறுவயதோர்
மகிழ்வுடன் முடிவினில் விழித்தெழவும்
மருத்துவர் கையிற் கத்தியைப் போல்
பயங்களை அறுக்கும் தீச்சுடராம்
(புரட்சியின் பாட்டொன்றை)



(லாங்ஸ்ற்றன் ஹ்யூஸ் (Langston Hughes) எழுதிய பாட்டொன்றை ஒட்டித் தமிழில் - மணி)

உள்ளே...

**கவிதைகள்**


புரட்சியின் பாட்டு... - தமிழில் மணி — முன் உள்பக்க அட்டை
சுதந்திரம் - நி.பிரதீபன் — 08
வையப் பொது நீதி பேணி.... - சோ.பத்மநாதன் — 09
போராடல் பற்றி - மாக்ஸ் பிரபாஹர் — 12
குறையினைக் 'கூறிடும்' குறை - இதயராசன் — 17
தாய் நாட்டுக்கு - தமிழில் வே.தினகரன் — 25
முருகையன் எங்கள் பிள்ளை - சோ.தேவராஜா — 26
அந்த அந்தி நேரம் இன்றும் வருமா...? - க.செந்தில்குமார் — 31
எங்களது தெய்வங்கள் - த.ஜெயசீலன் — 32
பித்தராய் அலைகின்றார் - புசல்லாவை குறிஞ்சி நாடன் — 38
மாண்டவர் யாரோ..? - அழ.பகீரதன் — பின் உள்பக்க அட்டை


**கட்டுரைகள்**


கவிஞரும் கவிஞருக்குக் கவிஞரும் - சி.சிவசேகரம் — 05
அவுஸ்ரேலிய ஆதிவாசி எழுத்து - சோ.ப — 07
பாட்டும் பயனும் - சி.சிவசேகரம் — 10


**நடைச்சித்திரம்**


மண்ணும் மாந்தரும் - 01, பொன்னாத்தை - புவனாசுவரன் — 13


**பின் வரலாற்றியல் தொடர்கதை**


ஆங்கிலேயனின் பரிசு - 12, சந்தேகப் படலம் - ஜெகதலப் பிரதாபன் — 18


**சிறுகதைகள்**


இன்னொரு ஹிரோஷிமா - பதுளை சேனாதிராஜா — 33
யாருக்காக அழுதாள் - ஆனந்தி — 42
செந்நீரும் கண்ணீரும்... - 'சமரபாகு' சீனா - உதயகுமார் — 47


**விந்தை மனிதர்**


தமிழ்த் துரோகி எண்டா என்ன? - ஆதவா அ.சிந்தாமணி — 39


**விமர்சனம்**


ஓசை எழுதும் கவிதை -
கொமன் மான்களும் கோவேறு கழுதைகளும் - ஊர்சுற்றி — 52

புதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு

தாயகம்

கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ்

ஒக்ரோபர் - டிசம்பர் இதழ் இல. 76

பிரதம ஆசிரியர்
க.தணிகாசலம்

ஆசிரியர் குழு
சி.சிவசேகரம்
குழந்தை ம.சண்முகலிங்கம்
கல்வயல் வே.குமாரசாமி
சோ.தேவராஜா
அழ. பகீரதன்
ஜெ.சற்குருநாதன்

கணனி பக்க வடிவமைப்பு
எஸ்.அனுர்ஜன்
டிசைன் லப் - 0112 431 531

கணனி அச்சு
கு.மதுராளினி

ஓவியங்கள்
எஸ்.டி.சாமி

முன் அட்டையில்
மாவை வரோதயன்

தொடர்பு
ஆசிரியர், ஆடியபாதம் வீதி,
கொக்குவில்
021 - 2223629
மின்னஞ்சல் - thayakam_1@yahoo.com

அச்சுப்பதிவு
கௌரி அச்சகம் - 011 2432477

விநியோகம்
இல. 152- 1/6, ஹல்ஸ்டோப் வீதி,
கொழும்பு 12, 011 2381603

வெளியீடு
தேசிய கலை இலக்கியப் பேரவை

# பேரழிவும் பட்டறிவும்

இலங்கையில் இனத்துவ முரண்பாட்டின் தீர்வற்ற நிலையால் நீண்டு தொடர்ந்த போர் முடிவுக்கு வந்து பல மாதங்களாகின்றன. ஆனால் போரால் மக்களுக்கு திணிக்கப்பட்ட உயிர் இழப்புகள, அவலங்கள், அழிவு களின் பாதிப்புகளில் இருந்து மக்கள் இன்னும் மீண்டு எழவில்லை இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதி முகாம்களில் அடையுண்டு அல்லலுறுவதும் சரண டைந்தோர் கைதானோர் காணாமறபோனோர் என பெரும் எண்ணிக்கையானோரின் வாழ்வு மீளாத் துயரிருளில் மூழ்கடிக்கப்பட்டு உள்ளமையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள முஸ்லிம் மலையக மக்கள்கூட இந்நீண்ட போரால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போரின் வெற்றிக்கு உரிமை கொண்டாடுவதி லும் அதனை தத்தமது அரசியல் இலாபங்களுக்காக பயன்படுத்திக் கொள்வதிலும் அரசும் எதிரணிகளும் காட்டி வரும் தீவிர அக்கறை அதனால் பாதிக்கப்பட்ட மக் களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதிலும், மீள் குடியேற்றம் மறுவாழ்வுப் பணிகளை முன்னெ டுப்பதிலும் காட்டப்படவில்லை என்பது வெளிப்படை யானது. போருக்கு காரணமான அரசியல் தீர்வை முன்வைப் பதிலும் கடந்த காலத்தின் இழுபறி நிலையே இன்னும் தொடர்கிறது. அனைத்து இனங்களும் புரிந்துணர்வுடன் வாழவேண்டும் எனில் விரும்பாத யுத்தத்தின் வெற்றி தோல்விகளை முன் வைத்து பெருமிதம் அடைவது தவிர்க்கபட வேண்டும். யுத்தத்தால் தன் இன்னுயிர்களை இழந்த இலட்சக் கணக்கான அனைத்து இன மக்களதும் இழப்புக்கள் கணிப்பில் எடுக்கப்பட வேண்டும். அதன் பாதிப்புக்களில் இருந்து மீள முடியாமல் இன்னும் துயருற்றுக் கொண்டிருக்கும் பல லட்சக்கணக்கான மக்களின் துயர்வாழ்விலி ருந்து மக்கள் தமது எதிர் காலத்துக்கான விழிப் புணர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நடந்து முடிந்த யுத்தத்தின் கர்த்தாக்கள் யார்? இதன் வரலாற்று நகர்வில் அரசியலில் பங்கு கொண்ட தலை வர்கள் உட்பட ஒவ்வொருவரும் யுத்தத்துக்கான சூழலை ஏற்படுத்தி வந்ததில் எத்தகைய பாத்திரத்தை வகித்து வந்துள்ளார்கள் என்பது விமர்சன சுயவிமர்சன அடிப்படையில் அணுகப்படவேண்டும். இதில் அன்னிய சக்தி களின் பங்கு என்ன, அவர்கள் தாம் கால் பதிக்க எத்தகைய சூழலை எவரெவர் துணையோடு ஏற்படுத்திக் கொண்டனர் என்பதும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

விடுதலைப்புலிகள் வானத்தில் இருந்து வந்தவர்கள் அல்ல. ஜனநாயக வழிமுறைகளுக் குள் எட்டப்படாத தீர்வுகளின் தவறான எதிர் விளைவுகளின் உருவாக்கமே அவர்கள். மக்க ளாட்சி அமைப்பை ஏற்றுக் கொண்டபோதும் முடி மன்னர்களின் கால கனவுகளுக்குள் தாமும் வாழ்ந்து, மக்களையும் பின்தள்ளிச் செல்லும் இரு இனங்களின் மத்தியிலும் இருந்து வரும் பழமைவாத அரசியலின் தொடர் விளைவே இந்தப் பேரழிவு யுத்தம். நாட்டுக்கும் மக்களுக் கும் எத்தகைய கேடுகள் அழிவுகள் வந்தாலும் தமது ஆதிக்க வர்க்க அரசியலில் இலாபங்கள் நலன்களைப் பேண முனைகின்ற பேரினவாத, குறுந்தேசிய இனவாத அரசியலுக்கு வாய்ப்பான இக்கருத்தியல் தளமே இன்றும் இந்த நாட்டில் வலிமையாக உள்ளது. இவர்களது இத்தகைய அரசியலின் படுபாதகமான விளைவுகளே பல இலட்சக் கணக்கான மக்களின் உயிர்களைப் பலிகொண்டு, யுத்தத்தின் கொடூர விளைவுகளை ஏதும் அறியாத மக்களின் தலைமேல் சுமத்தியுள் ளது என்ற உண்மை அனைத்து மக்களாலும் உணரப்படவேண்டும்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாகப் போரினால் மக்கள் பட்டுவந்த இன்னல்கள் முடி வுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இப்பேரிழப் பின் பட்டறிவிலிருந்து - இரத்தம் தோய்ந்த அனு பவங்களிலிருந்து - மக்கள் உண்மைகளைக் கண்டறிய முனைய வேண்டும். இந்த நாட்டின் இன்றைய புவிசார் அரசியற் சூழலில் மீண்டும் சாத்தியமற்ற பிரிவினைக் கோரிக்கையை முன் வைப்பது பேரினவாத அரசை முன்போலவே தொடர்ந்தும் முட்டுக் கொடுத்து பலப்படுத்து வதாகவே அமையும். அத்துடன் துயர் சூழ்ந்த யுத்தச் சூழலை மேலும் தொடர வைக்கவும், மீளாத அடிமைத்தனத்துக்குள் மக்களைத் தள்ளி விடவுமே அது துணை புரியும்.

தமிழ் மக்களின் உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதைக் கண்டறிவதற் கான நடைமுறை அனுபவத்தை முப்பது ஆண்டு களுக்கு மேலான போர்ச்சூழல் மக்களுக்குத் தந்துள்ளது. "மண்குதிர்களை நம்பி ஆற்றில் இறங்கியது போல" அன்னிய சக்திகளை, அயலவர்களை நம்பி அழிவடைந்த அனுபவத் திலிருந்து ஆழமான படிப் பினைகளை மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். முதலில் புறத்தே நண்பர்களைத் தேடும் நிலையை மாற்றி, எங்களைப் போலவே எமக்கு அருகில் - இந்த மண்ணில் - தமது நாளாந்த வாழ்வுரிமை களுக்காய்ப் போராடும் அனைத்தின மக்களை யும் நண்பர்களாகக் கருதும் நிலை எம்மிடம் உருவாக வேண்டும். நாம் எல்லோரும் இந்த மண்ணின் மைந்தர்கள் என்ற உணர்வுடன் ஒன்றுபடும்போது, இதுவரை மக்களைப் பிரித்து வைத்த பேரினவாதமும், குறுந்தேசிய இனவாத மும் தாமாகவே பல மிழந்துவிடும். இது சிரமத் தின் மத்தியில் செய்யப்பட வேண்டிய பணி. எனினும் இன, மொழி, பிரதேச, மத, சாதி வேறு பாடுகளைக் கடந்து மக்களை நேசிக்கக் கற்பதே விடுதலை வாழ்வின் முதற்படி ஆகும். இப் பட்டறிவின் மூலமே பேரழிவின் பெரும் இழப்புக் களை மக்கள் தமது முழுமையான உரிமை களைப் பெறுவதற்கான பலமாக்கிக் கொள்ள முடியும்.

# ஒரு நல்ல தொடக்கம்

யாழ்ப்பாணம் அரசியலில் அக்கறையற்றுக் கிடக்கிறது என்று தான் மாநகரசபைத் தேர்தல் முடிவுகளின் பின்பு சிலர் சொன்னார்கள். ஐந்தில் நாலு பேர் வாக்களிக்காததற்கு வேறு விதமான விளக்கங்களும் சொல்லப்பட்டன. ஆனால் இந்த விதமான ஆய்வாளர்கள் யாருமே ஏற்கவோ எண்ணவோ துணியாத ஒரு சனநாயகச் சுதந்திரத்தை யாழ் நகரத்து மக்கள் நடைமுறைப் படுத்தியுள்ளார்கள்.

எந்த மதத்தையும் பின்பற்றுவதற்கான சுதந்திரம் மதச் சுதந்திரம் என்கிறோம். எந்தக் கருத்தையும் சொல்லுவதற்கான சுத்திரத்தைக் கருத்துச் சுதந்திரம் என்கிறோம். இப்படிப் பல வகையான சுதந்திரங்களைப் பற்றிச் சொல்லலாம். ஆனால் நாம் கவனிக்க வேண்டிய ஒரு சுதந்திரம் ஏதென்றால் ஒருவர் தனக்கு ஏற்புடைய மதம் இல்லாத இடத்து ஒரு மதத்தையும் பின்பற்றாமலிருப்பதற்கான சுதந்திரமும் அவருக்கு இருக்க வேண்டும். அந்தச் சுதந்திரம் மதங்களை ஏற்காமலிருக்கும் சுதந்திரம் மட்டுமே. அது பிறருடைய மத நம்பிக்கைகளைத் தடுக்கவோ நிந்திக்கவோ பயன்படுகிற சுதந்திரமல்ல. அது போலவே, கருத்துச் சுதந்திரம் என்பது, ஒருவர் ஒரு விடயம் பற்றிய சுதந்திரமான கருத்து எதையும் கொள்வதற்கு இடமில்லாத போது கருத்துக் கூற மறுப்ப தற்கான சுதந்திரமும் ஆகும்.

எவருக்குமே வாக்களிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்பதற்கு எவருக்கும் சனநாயகத்தில் உரிமை இருக்க வேண்டும். அப்படியான உரிமையில்லாத சனநாயகம் சர்வாதிகாரமே. ஆனால் எகிப்து போன்ற சில நாடுகளில் வாக்களிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அது சனநாயகமல்ல. அது சனநாயகப் போலித்தனமான நாடகம்.

வாக்களிக்கும்படி கட்டாயப்படுத்துவது சனநாயக விரோதம் என்றால் வாக்களிக்க விரும்புவோரை வாக்களிக்கவிடாது மறிப்பதும் சனநாயக விரோதமானதே. தமக்கு எதிரான கட்சியின் ஆதரவாளர்களை மறிப்பது, கடத்திச் செல்வது, மிரட்டுவது போன்ற செயல்கள் நாம் அறியாதவையல்ல. பகிஷ்கரிப்பு என்ற கோரிக்கையை ஏற்காதவர்களை வன்முறையால் தடுப்பது சனநாயக விரோதமானது. தமிழ் மக்கள் இந்த விதமான வன்முறையை 1980களிலிருந்து கண்டுள்ளனர். வேட்பாளர்கள் வேட்புமனுக் கொடாதபடி தடுக்கப்பட்டுள்ளனர். மீறினோர் கொல் லப்பட்டிருக்கிறார்கள். அனேகமாக யாருமே வாக்களிக்காதிருக்கக் கூடிய ஒரு சூழலில் ஆணையை மீறி வாக்களிக்க முயன்றோர் வன்முறைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இது மக்கள் விரோத அரசியல். அராஜகமுங் கூட.

வடக்கும் கிழக்கும் அரசாங்கத்தின் அராஜகத்துக்கு மட்டுமன்றி அதனை எதிர்த்துப் போராடுவதாகச் சொன்னவர் களது அராஜகத்திற்கும் முப்பது ஆண்டுகட்கு மோலாக முகங் கொடுத்து வந்துள்ளது. வாக்களிப்பது என்பது எதிர்பார்ப்பின் அடிப்படையில் இல்லாமற் போய்ப் பலகாலமாகிவிட்டது. தமிழீழக் கோரிக்கை பற்றிய பொது விவாதங்களை 1975க்குப் பிறகு முடக்கிய ஒரு சனநாயக மறுப்புச் சூழல் இன்றைய அவலத்திற்கு முக்கிய பங்களித்தது என்பதை மக்கள் இன்று விளங்கிக் கொள்ளத் தொடங்கிவிட்டனர். அதன் பிரதிபலிப்பே யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் முடிவுகள். யாருடைய வற்புறுத்தலும் இல்லாமல் ஒரே ஒரு இடதுசாரிக் கட்சி மட்டுமே பகிஷ்கரிக்கக் கோரியது ஆனால் பரவலாகப் பிரசாரம் மேற்கொள்ள இயலாத ஒரு சூழ்நிலையில் மக்களாகத் தெரிந்து எடுத்த முடிவு அது. அதைவிட வாக்குச் சீட்டுக்களைப் பழுதாக்கினோரின் தொகை தெரிவு செய்யப்பட்ட ஒரு குழு பெற்ற வாக்குக்களைவிட, வென்ற பல வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குக்களைவிட அதிகம் என்பதும் கவனிக்க உகந்தது.

இது ஒரு நல்ல அடையாளம். அதன் உட பொருளை தமிழ் அரசியல்வாதிகள் அறிவார்கள். ஆனால் வெளியே சொல்லிக் கொள்ளமாட்டார்கள். எனவே தமது அரசியல் நம்பகத் தன்மையை மீட்டு மறுபடியும் தேர்தல் அரசியலுக்கு

உயிரூட்டித் தங்களுடைய அரசியலுக்கு உயிரூட்டவும் பலவேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். யாருக்கு இலக்கு வைக்கப்படுகிறது என்பதற்கமைய சாம, பேத, தான, தண்ட உத்திகள் கையாளப்படும். இதில் நாலாவது கொடுமையானது. ஆனால் மக்கள் விழித்துக் கொண்டாற் பயனில்லாதது. மூன்றாவது பற்றியே மிகவுங் கவனமாயிருக்க வேண்டியுள்ளது. ஏனெனில் நொந்து கிடக்கிற ஒரு மக்களிடையே அரசியலில் சோர்வுற்றுச் சுய ஈடேற்றத்திற்கு வழிதேடுகிற ஒரு பிரிவினரிடையே சலுகைகளின் அரசியல் வலுவாகப் பயன்படும்.


அவ்வாறாக மனிதரைச் சீரழித்துத் தம்வசமாக்குகிற சந்தர்ப்பவாத அரசியலின் காரணமாகவே மலையகத்தின் படித் தவர்கள் பலர் தமது மக்களுக்காகச் செயற்படாமல் தம்மை வளர்த்துக் கொள்ளப் பார்க்கிறார்கள். முஸ்லிம்களால் ஒற்றுமைப்பட இயலாத விதமாகச் சலுகை அரசியல் தலைவர்கள் முதல் தொண்டர்கள் வரை பலரை விலைக்கு வாங்குகிறது.

தமிழ் மக்கள் வடக்கிலும் கிழக்கிலும் பட்டு அனுபவித்தது மிகுதி. அதன் பாடங்களை மறக்கக் கூடாது. இனிப்புப் பூசிய தோட்டாக்களுக்கு இரையாகக் கூடாது. தேர்தல் பகிஷ்கரிப்பு ஒரு முதலாவது படி. அது மேலும் வளர்த்தெடுக்கப்பட்டு அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுச் சிறைக்கம்பிகட்கும் முள்ளுக் கம்பி வேலிகட்கும் பின்னால் உள்ள மூன்று லட்சம் பேருக்கும் இடம் பெயர்ந்த லட்சக் கணக்கானோருக்கும் தமது மண்ணிலேயே சுதந்திரமாக நடமாட முடியாதவர்கட்கும் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டமாக வளர்ச்சி பெற வேண்டும்.

அரசாங்கமும் அதன் முகவர்களும் தருகிற பிச்சை வேண்டாம். உரிமைகள் கேட்டுப் பெற வேண்டியவை. மறுக்கப்பட்டால் மக்கள் ஒன்றுபட்டுப் போராடி வெல்லப்பட வேண்டியவை.

**- ஆசிரியர் குழு**

## *கவிஞர் மாவை வரோதயனுக்கு அஞ்சலி*



தேசிய கலை இலக்கியப் பேரவையின் செயற்குழு உறுப்பினராக எம்மோடிணைந்து செயலாற்றிவந்த கவிஞருங் கட்டுரையாசிரியரும் விமர்சகரும் நாடகாசிரியரும் ஆர்வலருமான ஈழத்தின் முக்கிய இலக்கியவாதிகளுள் ஒருவருமான மாவை வரோதயன் எனும் பேரால் இலக்கிய உலகம் அறிந்த சி.சத்தியகுமாரன் அவர்களது பிரிவுச் செய்தி தேசிய கலை இலக்கியப் பேரவையை மிகுந்த துயரில் ஆழ்த்தியுள்ளது. செயலூக்கமிக்க ஒரு உறுப்பினராகத் தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் நீண்ட காலம் இணைந்து அதற்கு ஆதரவாயிருந்து அதன் நிகழ்ச்சிகட்கு உறுதுணையாய்ச் செயற்பட்டு ஊக்குவித்ததில் அவரது பங்களிப்பு மிக முக்கியமானது. தேசிய கலை இலக்கியப் பேரவையின் சஞ்சிகையான தாயகத்தின் ஆசிரியர் குழுவில் உறுப்பினராக அயராது செயற்பட்டு வந்ததுடன் தனக்கேயுரிய பண்பான நகைச்சுவையுணர் மிகும் ஆக்கங்களாற் தாயகத்துக்கு வளமூட்டினார்.

அவரது கவிதைகளும் உரைச் சித்திரங்களுங் கட்டுரைகளும் நாடகப் பிரதிகளும் தெளிவும் ஆழமும் சமூகப் பயனுமுடையவவை. தனது பல்வேறு தனிப்பட்ட துன்ப துயரங்கட்கிடையிலுங், குறிப்பாகக் கடந்த சில மாதங்களாகக் கடுமையான நோய்க்கு உட்பட்டிருந்த போதுந், தன்னாலியன்றளவுக்கு தாயகத்திற்குத் தனது பங்களிப்பைத் தொடர்ந்தும் வழங்கிவந்தார். சமூக சிந்தனை மிக்க சீரிய படைப்பாளிகள் பிறபோக்காளராற் காழ்ப்புணர்வுடன் நிந்திக்கப்பட்ட வேளைகளில், நிதானந்தவறாது உண்மைகளை விளக்கி அவதூறுகளை நிராகரித்துப் புதிய கலை இலக்கியப் பண்பாட்டை நிலைநிறுத்தும் ஓர்மம் அவரிடம் இருந்தது. அவரது பிரிவு தமிழ் இலக்கிய உலகிற்கும் சமூக விடுதலைச் சிந்தனையாளர்கட்கும் ஒரு பேரிழப்பாகும். அவரது பிரிவால் வருந்தும் அவரது மனைவியார் அவர்கட்கும் பிள்ளைகட்கும் குடும்பத்தினருக்கும் தேசிய கலை இலக்கியப் பேரவையும் தாயகமும் தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவருக்கான இறுதி அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதில் அவருடைய நண்பர்களுடனும் உறவினர்களுடனும் இணைந்து, தமது ஆழ்ந்த துயரை அவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றன.

# கவிஞரும் கவிஞருக்குக் கவிஞரும்



சி.சிவசேகரம்

முருகையன் தன்னைக் கவிஞர் என்று பிரகடனப் படுத்தவே கூசுகிற அளவுக்குத் தன்னடக்கமாக இறுதிவரை வாழ்ந்த ஒருவர். அவரைக் கவிஞருக்குக் கவிஞர் என்று பேராசிரியர் கைலாசபதி சொன்னதை நமக்கு நினைவூட்டி யவர் பேராசிரியர் நு.ஃமான். ஆனால் நு.ஃமானின் நோக்கம் கைலாசபதியினது நோக்கத்தினின்று வேறுபட்டது.

பாரதி மகாகவியா என்ற விவாதம் தமிழ்நாட்டில் நடந்த போது பாரதி உயிருடன் இல்லை. இருந்திருந் தால் அந்த விவாதம் அவருக்கு எரிச்சலூட்டியிருக்கும். ஏனெனில் இவ்வாறான அங்கீகாரங்களைப் பற்றி அக்கறைப்படுகிற நிலையை அவர் தன் கவிதை வாழ்வின் முற்பகுதியிலேயே கடந்துவிட்டார். எனினும் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி தீவிரமாக முன்னெடுத்த வாதம் வென்றது. பாரதி மகாகவி சுப்பிரமணியபாரதி என்று அழைக்கப்பட்டார். இப்போது பாரதி என்றாலே வேறெவரையுங் குறியாதளவுக்கு அவரது முக்கியத் துவம் உயர்ந்துள்ளது. அதன் பொருள் சுத்தானந்த பாரதியோ கோபால கிருஷ்ணபாரதியோ நல்ல கவிஞர்களும் அறிஞர்களுமல்ல என்பதல்ல. அதைவிட மகாகவி என்கிற பதம் ஒருவரது கவித்துவத்தைக் குறிக்கப் பயன்படுவது அரிதாகி விட்டது. கவிப்பேரரசு, கவிக்கோ என்கிற விதமான காகிதக் கிரீடங்கள் மலிந்துள்ளமை அதற்கொரு காரணமாயிருக்கலாம்.

கவிஞருக்குக் கவிஞர் என்ற பதம் ஆங்கில இலக்கிய வழக்கிலிருந்து தமிழுக்கு வந்த ஒன்றெனக் கொள்ள நியாயமுண்டு. அது மன்னாதி மன்னன், வீராதி வீரன் என்கிற பதங்கள் போன்று மன்னருள் மன்னன், வீரருள் வீரன் என்கிற கருத்துக்களை யொட்டியதாக இருந்தாலும் கைலாசபதி முருகை யனை அவ்வாறு போற்றுவதற்கு முன்னரே அப்பதம் பலகாலமாக ஆங்கில இலக்கிய மரபில் இருந்துள்ளது என நினைக்கிறேன். எனினும் அப்பதம் தமிழ் இலக்கிய மரபுக்கு உடன்பாடான ஒன்று என்பதில் எனக்கு ஐயமில்லை.

சுப்பிரமணியபாரதி மகாகவி என்பதை ஏற்காதவர் கள் எல்லாரும் பகைமையாலோ பொறாமையாலோ அதை ஏற்கவில்லை என்பது நியாயமானது. 'மகாகவி' என்பதற்கு அவர்கள் பயன்படுத்திய அளவுகோல்கள் அவ்வாறான ஒரு நிலைப்பாட்டிற்குக் காரண மாயிருக்கலாம். விவாத முடிவிலும் அவர்கள் அந்த நிலைப்பாட்டில் இறுதிவரை மாறாமலே இருந்திருக்க லாம். அது அவர்களது கருத்து. அதை நாம் ஏற்காவிடி னும் மதிக்க நியாயம் உண்டு.

முருகையன் "கவிஞருக்குக் கவிஞர" என்பதனைக் கைலாசபதி தனது மதிப்பீடாகச் சொன்னரே ஒழிய அதை ஒரு கிரீடமாகவோ பட்டமாகவோ வழங்க முயல வில்லை. எனினுந் தன் கூற்றுக்குச் சான்றாக முருகை யனின் கவிதைகளிலிருந்து ஆதாரங்களை முன் வைத்து எழுதியிருந்தார். "கவிஞருக்குக் கவிஞர்" என்றால் எல்லாக் கவிஞர்கட்கும் முன்மாதிரியான ஒருவர் என்றும் கவிஞர்கட்கு வழிகாட்டியாக அமையக்

கூடிய கவிஞர் என்றுங் கொள்ளலாம். கவிதை பற்றி ஒருவர் கொண்டிருக்கிற பார்வையை முன்வைத்தே இவ்வாறான விடயங்களிற் கருத்துக் கூறப்படுகிறது. பாரதி மகாகவியல்ல என்பதற்குத் தரப்பட்ட வாதங்கள் போன்று முருகையன் கவிஞருக்குக் கவிஞரல்ல என்று சொல்வதற்கான வாதங்களையும் யாரும் முன் வைக்கலாம். அது நல்ல விடயமே ஒழியத் தீயதல்ல. என்னுடைய கருத்தில், அவ்வாறான நேர்மை யான மாற்றுக் கருத்துக்கள் முருகையனின் கவித்துவத்தின் மேம்பாட்டை உணர்த்த உதவும் வாய்ப்புண்டு.

நு:.மான் கிளப்பிய சர்ச்சைக்கான காரணம் 'கைலாசபதி முருகையனைக் கவிஞருக்குக் கவிஞர் என்கிறார். நட்சத்திரன் செவ்விந்தியன் முருகையன் கவிஞனே அல்ல என்கிறார். நான் இரண்டையும் ஏற்க வில்லை; என்ற பொருளில் அவர் தெரிவித்த கருத்தாகும். இங்கு நம்முன்னுள்ள பிரச்சனை கைலாசபதி என்கிற பேரறிஞரின் கூற்றுடன் நட்சத்திரன் செவ்விந்தியன் என்கிற வெகு சராசரியான ஒரு எழுத்தாளரின் கூற்றை ஒப்பிட இயலுமா என்பதல்ல. நட்சத்திரன் செவ்விந்தியன் ஒரு உலகமாமேதையாயும் கைலாசபதி ஒரு பாடசாலை மாணவராயும் இருந்திருந்தாலும் பிரச்சனை இருவருங் கூறிய கருத்துக்கள் என்னவிதமான ஆதாரங்களின் அடிப்படையில் முன்வைத்தனர் என்பதை ஒப்பு நோக்குகிற இடத்திலேயே எழுகிறது. முன்னவர் ஆதாரங்களுடனும் தர்க்க ரீதியான வாதங்களூடும் ஒரு நிலைப்பாட்டை வந்தடைகிறார். மற்றவர் தனது அரசியல் நிலைப்பாடு சார்ந்த வன்மத்தை வெளிப் படுத்துகிறார். இரண்டையும் ஒப்பிட்டு இரண்டையும் நான் ஏற்கவில்லை என்பது, "டார்வின் ஒரு சீரிய இயற்கை விஞ்ஞானி என்று கார்ல் மாக்ஸ் கருதினார். டார்வின் ஒரு விஞ்ஞானியே அல்ல என்று ஒரு கிறிஸ்துவ அடிப்படைவாதி சொன்னார். இரண்டை யுமே நான் ஏற்கவில்லை" என்று ஒருவர் சொல்வதை விடவும் அபத்தமானது. ஏனெனில் கிறிஸ்தவ அடிப்படைவாதி தனது கூற்றுக்கான வாதங்களை அவை எவ்வளவு குளறுபடி யானவையாயினும், முன் வைத்திருப்பார். நட்சத்திரன் செவ்விந்தியன் வாயில் வந்த எதையோ உளறினார். சரிநிகரில் வந்த அந்த மூர்க்கத்தனமான கூற்று கண்டனத்திற்குங் கேள்விக் கும் உள்ளானபோது அவர் தனது பிழையை ஏற்கவு மில்லை. மாறாகத் தனது தவறை நினைவூட்டி எழுதிய ஒருவரை நொந்து கொண்டார். இத்தகைய ஒருவரது அபத்தமான கூற்றைத் தெளிவான தர்க்க நியாயங் களுடன் முன்வைத்து இன்னொருவர் கூறியதனுடன் ஒப்பிட்டு இரண்டுக்கும் நடுவிலே தான் நிற்பதாகக் கூறுவது நு:.மானுக்குப் பெருமை சேர்ப்பதல்ல.

கைலாசபதியின் கூற்றை மறுப்பதற்கான தனது வாதங்களை நு:.மான் முன்வைத்திருப்பின் அது அவ ருடைய நிலைப்பாட்டிற்கு வலிமை சேர்த்திருக்கும். அவர் அதைச் செய்யவில்லை. ஆனால் முருகையன் இருந்தபோது அவர் சொன்ன அதே சொற்கள் முருகை யனுடைய மறைவின் பின்பும் கூறப்பட்டமை அவருக் குத் தனது தர்க்கத்தின் அபத்தம் விளங்காமையையே குறிக்கிறது. அதுவும் போதாமல் முருகையனைப் பற்றிய நினைவுக் குறிப்பொன்றை ஒரு சிறு சஞ்சிகை யில் எழுதிய ஒருவர் முருகை யனுடைய கவித்துவம் பற்றி எதையுமே எழுதாமல் முருகையனுடனான ஒரு சந்திப்பை நினைவு கூர்ந்து, எழுதியதோடு முருகை யனைப் பற்றி நு:.மான் சொன்ன கருத்தையிட்டு நண்பர்களுடன் பேசிக் கொண்டதாகவும் கூறி வைத்திருக்கிறார். இவ்விதமான ஆழமும் அக்கறை யுமற்ற விமர்சகர்களுக்கு கைலாசபதி ஏன் சொன்னார் என்பதைவிட நு:.மான் அதை ஏற்கவில்லை என்பதும் நட்சத்திரன் செவ்விந்தியனைச் சாட்சிக்கு அழைத்ததும் முக்கியமானவையாகி விடுகின்றன.

நு:.மான் விமர்சகர் மட்டுமல்ல. கவிஞருங் கூட. அவரது விருப்பு வெறுப்புக்கள் அவரது உலக நோக்குக்கு ஏற்ப அவர் எதையும் எழுதலாம். எனினும் கைலாசபதியினதும் நட்சத்திரன் செவ்விந்தியனதுங் கூற்றுக்களை மீண்டும் ஒப்பிட்டுப் பேசியதன் மூலம் அவரது திறனாய்வின் தரம் கேள்விக்குள்ளாகிறது என்பதை அவர் விளங்கிக் கொள்வாரென்று நம்பு கிறேன்.

முருகையன் கவிஞர்கட்குக் கவிஞர் என்பதற்கு அவரது கவிதைகளின் செய்நேர்த்தியுங் கருத்தாழமும் தெளிந்த சிந்தனை வெளிப்பாடும் போதிய சான்றுகள் என்பதே என் மதிப்பீடு. ஆயினும் அவர் மக்கள் கவிஞர் என்ற அடையாளம் அனைத்திலும் முக்கியமானது.



# அவுஸ்ரேலிய ஆதிவாசி எழுத்து

ஒருபோதும் மறைக்கமாட்டேன் அம்மாவின் தோல் கறுப்பு. நல்லது நான் நாட்டுப்புறத்திலிருந்து வந்தவன் – நகரத்து மின் விளக்குகளால் கவரப்பட்டு ஏதும் கிடைத்தால் என் குடும்பத்துக்கு உதவும் என்று நினைத்தேன். ஆனால் அதெல்லாம் தலைகீழாய்ப் போனது. குடிவெறியில் கைகலப்பு ஏற்பட்டு நான் இரவோடிரவாக காவலில் வைக்கப்பட்டேன். விடியற காலை சுற்றி வந்த சார்ஜன்ற் என் கொலரைப் பிடித்த படி சொன்னான்: "நீ என்னோடு பட்டினத்துக்கு வரு கிறாய்!" என்று. ஆக என்னை அந்நியர்கள் சூழ, ஓர் அவலட்சணமான வழக்கறிஞரோடு நான் நீதிமன்ற வளாகத்தில் நின்றேன்

அவர் சொன்னார்: "நீ குற்றத்தை ஒப்புக்கொள், என்னால் என்ன செய்ய முடியுமென்று பார்க்கிறேன். ஆனால் உனக்கு நம்பிக்கை தரக்கூடியதாகப் பெரி தாக ஒன்றுமில்லை. ஏனெனில் உன் நிறமே உன் னைச் சிறைக்கு அனுப்பப் போதுமானது"

நான் நீதி மன்றில் நின்ற பொழுது நீதிவான் சுற்று முற்றும் பார்த்தார். குற்றச் சாட்டுக்களைத் தொகுத்துக் கூறிய பின் முகஞ் சுழித்தபடி என்னைக் கேட்டார்: "நான் கதவை அடித்துச் சாத்து முன் நீ ஏதாவது சொல்ல விரும்புகிறாயா?"

"சொல்ல ஏராளம் உண்டு அதற்கும் அதிகமாக, ஐயா, நல்ல நோக்கத்துடன் அதாவது வேலை தேடி — நான் இங்கு வந்தேன். ஆன்ால் போன இடமெல்லாம் என்னை ஓர் அழுக்குப் பொருளாக நடத்தினார்கள். இந்தத் தொழிலுக்கு நானே பொருத்த மாவேன் எனப் பலவாறு விளக்க முயன்றேன். ஆனால் யாரும் செவிசாய்க்கத் தாயாரில்லை. "நீ உன் கூட்டத்தோடு போய்ச் சேர்ந்துகொள்." என்றார்கள். ஆக, தகர்ந்து போன கனவுகளோடும், காயப்பட்ட தன்மானத் தோடும் நான் தாக்குப் பிடித்தேன். ஆனால் இந்த அமைப்பின் மனப் பாங்கு இருக்கிறதே அது எப்பொழுதும் பிழை கண்டு பிடிக்கும். நான் கறுப்பு – வெள்ளைச் சட்டம் பற்றி வாதிடு பவன் அல்லன். ஆனால் எனக்கு அநீதி இழைக்கப்படும் போது, நான் என் உரிமைக்காக எழுவேன். ஆகவே, இன்று முன்வைக்கப்பட்ட சாட்சியத்தை ஒருகால் மீள் பரிசீலனை செய்வீர்களாயின், நான் குற்றமற்றவன் எனக் காண்பீர்கள்".

நீதிவான் தலையைக் குனிந்து, சாட்சியத்தை மீள வாசித்துப் பார்த்தார். "இஞ்சை பாரும் மிஸ்ரர். வேண்டு மென்றே சேதம் விளைவித்தது, களவெ டுத்த பொருள்களைப் பெற்றுக்கொண்டது, உரிமம் இல்லாது வாகனம் ஓட்டியது, இக்குற்றச் சாட்டுக்கள் தெளிவாக விளங்குகின்றன. ஆனால் நீர் சொன்ன வற்றை நான் கருத்தில் எடுக்கவே வேண்டும். ஆனால் உமது வழக்கறிஞருக்கு ஈடுகொடுக்க என் னால் முடியாது. அவருக்கு இரவும் பகலும் ஒன்று தான்" எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள். வழக் கறிஞரின் முகம் சிவந்தது. அவர் தலை கவிழ்ந்தார்.

நீதிமன்றத்தில் அமைதி. நீதிவான் தொடர்ந் தார். குற்றச்செயல்கள் மலிந்துள்ளதொரு நகரத்தில் – பொலிஸார் கையூட்டை எதிர்பார்க்கும் நிலையில் – உம்மால் தாக்குப்பிடிக்க முடியாது என்பதை நான் அறிவேன். ஆனால் அதற்காக, நீர் குற்றம் செய்ய வில்லை என ஆகாது என்பதை அறிவுறுத்தக் கட மைப்பட்டிருக்கிறேன்."

குற்றச் சாட்டுக்களை எதிர்கொள்ளும் நிலை யில், என் துணிவையும் கண்ணியத்தையும் பெரு மிதத்தையும் என்னுள்ளே தேடலானேன். சில நிமிட அமைதி. நீதிவான் நேரே என் கண்ணைப் பார்த்தார். பிறகு சொன்னார்.

"சாட்சியங்கள் யாவற்றையும் வாசித்தேன். உன் வேண்டுகோளையும் கேட்டேன். இதற்கு முன் தண்டனை பெற்றிருக்கிறாயா எனப் பார்த்தேன், ஒன்றுமில்லை. உன் வாழ்க்கை வரலாற்றையும் படித்துப் பார்த்தேன். நீ வேலை செய்ய விரும்புகிறாய் என்பது நல்லதொரு மனப் பதிவை ஏற்படுத்துகிறது. ஆகவே உன்னை விடுதலை செய்து உன்பாட்டில் போக விடுவதை விட எனக்கு வேறு வழியில்லை சோதனைகளை எதிர்கொண்டு முன்னேறு.

ஆனால் போகுமுன் உன்னிடமிருந்து ஒன்றை அறிந்து கொள்ளவிரும்புகிறேன். உனக்கும் உன் மக் களுக்கும் வலிமை தருவது எது?"

நான் அவரைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டி னேன். "வலிமையும் மனவுறுதியும், கண்ணியமும், பெரு மிதமும், என் தாயின் தோலின் நிறமும் நான் ஒருபோதும் மறைக்க விரும்பாதவை!"

**ஆங்கில மூலம்: ஜோன் மோர்கன்**

**தமிழாக்கம்: சோ.ப**



# சுதந்திரம்

சுதந்திரம் சுதந்திரம்
இலங்கைத் திருநாட்டுக்கு இன்னுமொரு சுதந்திரம்
அள்ளி அளித்திருக்கிறார் ஆளும் வர்க்கத்தார்.

நாட்டை உயர்த்திட உழைத்திடும்
பல்லினத்துப் பாட்டாளியும் விவசாயியும்
நடுத் தெருவில் அடிமைகளாய்த் திண்டாட
ஆளும் வர்க்கத்து எஜமானர்
அள்ளிக் கொடுக்கின்றார் சுதந்திரத்தை.

உழைக்கும் மக்கள் ஐக்கியம் வரை
ஆளும் வர்க்கத்துப் பிசாசு
அள்ளித் தெளிக்கும் சுதந்திரம்!
ஆளும் வர்க்க ஆசாமியே
ஓர் வாசகத்தை மட்டும் நினைவில் கொள்.

நீ
எங்களைத் தினமும் கூர்மைப்படுத்துகின்றாய்
எங்கள் வறுமை கூடக் கூட
ஆயிரமாய் லட்சமாய் ஐக்கியப்படுவோம்.

ஏனெனில்
இழப்பதற்கு எதுவுமே இல்லாத
ஸ்பாட்டகஸ்சின் வழித் தோன்றல்களாய்
இப்போதும் நாம் இருப்பது தான்.
அப்போது
செவ்வொளி வீசிய புதிய பரிதியாய்
பூகோளம் நிலைமாறும்
உழைப்பவனுக்கே உலகென்பது மெய்ப்படும்.

அதுவரை
வெடி பிடி கொடி
ஆடு பாடு கொண்டாடு!
ஆஹா! ஆஹா!

–நி. பிரதீபன் –
20–05–2009

# வையப் பொது நீதி பேணி...

– சோ. பத்மநாதன்



( சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் 19-09-2009ல் நடைபெற்ற முருகையன் நினைவுநாள் கவியரங்கக் கவிதையில் ஒரு பகுதி )

நிறைவான வையப் பொது நீதி
நெறி பேணி நின்ற திருவாள
அறிவான செல்வம் அதுதேடும்
அயராத ஆர்வ விசுவாசி
பெறுமான முள்ள பணிசூழ்ந்த
பிரயாசி பண்புக் கொருவேலி
அறிவாளர் நெஞ்சில் உறைவோனே
அறவாழ்வு வாழ்ந்த பெருமானே!

கவிபாட வந்த அறிவாள
கலையாழம் கண்ட சுழியோடி
நவமான சொற்கள் புனைவோனே
நயநா டகங்கள் தருவோனே
சுவைநாடு வோருக் குபகாரி
துவளாத தொண்டுக்கு அடையாளி
தவவாழ்வு பூண்ட பெருமானே
தமிழோடு வாழ்ந்த முருகோனே.

இனிதான சொல்லும் எவரோடும்
இயல்பான பாங்கில் உறவாடும்
கனிவான பார்வைக் குரியாய் நீ
கரவாடும் நெஞ்சர்க் கரியாய் நீ
மனிதாபிமானம் உடையோய், கல் –
வயலூர, நீர்வைப் பதிமேவி
முனிபோல வாழ்ந்த பெருமானே
முழுஞானம் வாய்ந்த முருகோனே.

# பாட்டும் பயனும் 05

## பிரசாரப் பாடல்கள் (2)

- சி.சிவசேகரம்

**தமிழ்த் தேசியவாதம் இலங்கையில் ஒரு வலுவான அரசியற் சக்தியாக மேலெழுந்தபோது பிரசாரப் பாடல்கள் அதன் முக்கியமான ஒரு அம்சமாகின. தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாநாடு, சிங்களம் மட்டுமே சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில் நடத்தப்பட்டது. அம் மாநாட்டுக்குப் பாத சாரிகளாக வந்தவர்கள் சிங்கள மொழிச் சட்டத்தை மட்டுமன்றிச் சிங்கக் கொடி, தேசிய கீதம் போன்றவற்றையும் விமர்சிக்கிற உள்ளடக்கங் கொண்ட பாடல்களையும் பாடிப்பாடியே நடந்து வந்தார்கள். அதிற் தமிழ் மேன்மை கூறுகிற பாடல்களும் இருந்தன. அவை பலராலும் இயற்றப்பட்டிருந்தன.**

எனினும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தோரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது. 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்தின் போது உச்சத்தை எட்டிய தமிழரசுக் கட்சியின் பிரசாரப் பாடல்கள் அதன் பின்பு தமிழீழப் போராட்டம் வரை சோர்வு நிலையிலேயே இருந்தன. எவ்வாறாயினும் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசார மேடைகளில் பாடல்கட்கு ஒரு முக்கியத்துவம் இருந்து வந்தது. இத்தனைக்கும், ஒரு முக்கியமான பலவீனம், ஈழத்திற்கான ஒரு மெல்லிசைப் பாடல் பாரம்பரியத்தை இந்த இயக்கப் பாடல்கள் உருவாக்க உதவவில்லை என்பது தான். அது அரசியலுக்கு வெளியிலே தனி மனித முயற்சிகளாகவும் சில சமயம் வெறுமனே இசைக்கு மட்டுமே முக்கியத்துவம் வழங்கியும் அமைந்தது.

தமிழகத்தில் போராட்ட அரசியலுக்கும் கூத்து மேடைகட்கும் இருந்த உறவு பின்னர் இசைக் குழுக்களின் உருவாக்கத் திற்கு வழி செய்தது எனலாம். காங்கிரஸ் சார் பான இயக்கப் பாடல் மரபு சுதந்திரப் போராட்டக் காலத்தில் வலுவாக இருந்து வந்தன. திராவிட இயக்கத்திற்குரிய மரபும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற காலங்களில் வலு வாகத் தன்னை வெளிக்காட்டியது. எனினும் சினிமாவில் திராவிட முன்னேற்றக் கழகம் ஊக்குவிக்கப்பட்டு வளர்ச்சி கண்ட பின்னணியில் சினிமாத் துறையில் இடதுசாரிச் செல்வாக்குச் சரிந்து விட்டது. எனினும் தேர்தல் கூட்டங்கள் உட்பட்ட பிரசாரக் கூட்டங்களிலும் தொழிலாளர் போராட்டங்களிலும் கலை நிகழ்ச்சிகட்கும் இசைப் பாடல்கட்கும் ஒரு இடம் இருந்து வந்துள்ளது.

இந்த இசைப் பாரம்பரியம் கடந்த கால் நூற்றாண்டில் நாட்டார் இசை மரபையும் உள் வாங்கி மக்களின் உணர்வுகளை வெளிப் படுத்துகிற முனைப்பை வலுவாக்கியுள்ளது. சாதியத்திற்கும் நிலவுடைமைக் கொடுமைகட்கும் எதிரான போராட்டங்கள் மட்டுமன்றி இன்றைய உலகமய மாக்கல் வரையிலான விடயங்களைக் கிராமத்து மக்களும் அறியும் வகையிலான பிரசாரப் பாடல்கள் ஒலிப் பேழைகளாகவும் குறுந் தட்டுக்களாகவும் பரவலாக்கப்படுகின்றன. பலவேறு அரசியல் நோக்கங்களும் அரசியற் கட்சிகளும் இயக்கங்களும் இதில் ஈடுபட்டுள்ளதால், இசைப் பாடல்கள் சமூக அரசியல் விடயங்கள் தொடர்பான விவாதங்களையும் அடையாளப்படுத்தி வருகின்றன.

இதன் சாதகமான ஒரு பக்கம் என்னவென்றால் தமிழக சினிமாவும் தொலைக்காட்சியும்

மக்களின் பண்பாட்டுச் சீரழிவைத் தீவிரமாக முன்னெடுத்துச் செல்கையில் சமுதாயச் சார்பான கலை நிகழ்ச்சிகளும் இசைப் பாடல்களும் ஒரு நல்ல மாற்றுப் பாதையை முன்வைக்கின்றன. இவை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் சீரழிவுக் கலாசாரத்தின் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் மறுத்து நிற் கின்றதுடன் ஒரு விடுதலைப் பரிமாணத்தையும் கொண்டு நிற்பது தான்.

தென்னிந்தியாவைப் பொறுத்தவரை ஆந்திர மாநிலம் தனக்கேயுரிய ஒரு மக்கள் போராட்டப் பாரம்பரியத்தையுடையது. அந்தப் போராட்டம் பிறர் காட்டுகிற மாதிரி வெறுமனே ஆயுதக் கிளர்ச்சியும் நிலவுடைமைகட்கும் பொலிஸ், இராணுவ அட்டு ழியத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதும் மட்டுமல்ல. இந்திய விடுதலைக் காலத்தையொட்டி எழுந்த மகத்தான போராட்ட மரபு நக்சல்பாரி இயக்கத்தின் எழுச்சியோடு எழுந்து இந்திரா காந்தியின் அரச அராஜகத்தின் போது சரிந்து மீண்டும் எழுந்து வந்துள்ளது. அதன் முக்கியமான பண்புகளில் ஒன்று விடுதலைப் போராட்டத்தைப் புதிய பண்பாட்டுச் செயற்பாடுகளுடன் இணைத்து முன்னெடுப்பதாகும். ஆந்திர மாநிலம் தந்த முக்கியமான கவிஞர்களான ஶ்ரீஶ்ரீ, வரவர ராவ் போன்றோர் நல்ல பாடலாசிரியராகவும் இருந்து வந்துள்ளார். மாஓவாதப் போராட்ட இசைக் கலைஞர் கத்தார் எந்தச் சினிமாப் பாடகரையும் விட மக்களால் விரும்பிக் கேட்கக் கூடியவராக இருந்து வந்துள்ளார்.

இந்தியாவிலாகட்டும், நேபாளத்திலாகட்டும், பிலிப்பீன்சிலாகட்டும் விடுதலைப் போராட்டம் கைகளில் ஆயுதங்களோடு மட்டும் உலா வரவில்லை. அது அரசியற் சிந்தனையை உயர்த்திப் பிடித்தே முன்னேறுகிறது. அந்தச் சிந்தனைகளை மக்கள் மத்தியிற் கொண்டு செல்வதிற் கலை இலக்கியங்கள் முக்கியமான பங்களிக்கின்றன. இசைக்கு அதில் ஒரு வலுவான பாங்கு உள்ளது.

நமது இடதுசாரி இயக்கங்களிற் பெரும் பகுதி பாராளுமன்றப் பாதையிற் சீரழிந்து போய்க் குறுகிய தேசியவாதம் ஓங்கிய நிலையில் தமிழில் இடதுசாரிச் சிந்தனை இலக்கியத்தில் இன்னமும் தன்னைத் தக்கவைத்துக் கொண்டிருந்தாலும் இசை, நாடகத் துறைகளில் அது தன்னை மீளவும் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. மலையகத்தில் இவ் விடயத்திற் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்கள் இருந்தாலும் போக வேண்டிய தூரம் பெரிது.

நமது இளங் கலைஞர்கள் தமது ஆற்றல்களை விருத்தி செய்ய வேண்டும். சரியான கருத்துக்களைச் சொன்னால் மட்டும் போதாது. அவை மக்களைச் சென்றடைய வேண்டும். இசை அதற்கேற்ற சக்தி மிக்க வாகனம். நாடும் சமூகங்களும் மக்களும் முகங்கொடுக்கிற பிரச்சினை ஒவ்வொன்றிலும் மக்களுக்குச் சொல்ல வேண்டிய செய்திகள் உள்ளன. எந்தக் கலை வடிவத்தையும் விட நேரடியாக மக்களை எட்டக் கூடிய ஆற்றல் இசைக்கு உள்ளது. அதை மக்களும் மாநிலமும் பயன்படும் விதமாகப் பங்காற்ற நாம் துணிய வேண்டும்.

பிரச்சாரம் என்பது தன்னளவிற் பிழையானதல்ல. உண்மையையும் மக்களுக்கு நன்மையானதையும் செய்வதற்குச் சரியானதையும் நெஞ்சுக்குப் பொய்யாமல் எடுத்துச் சொல்வது மெச்சத்தக்கது. அது நல்ல பிரசாரம். பொய்யும், சமூகத் தீங்கானதும் தவறானதும் பிரசாரப்படுத்தப்படுமாயின் அது தீய பிரசாரம்.

நல்ல இலக்கியம் பிரசாரம் செய்யும். உரிய போது செய்யவும் வேண்டும். இசையும் அவ்வாறானதே.

# போராடல் பற்றி...!

- மாக்ஸ் பிரபாஹர் -

*உயிரழியும் வலியுணர்ந்து பார்!*
*உறவுகள் பிரியும் பொழுதுகளின்*
*உணர்வுகளில் வீழ்ந்து பார்!*

*உடன் பிறப்புகளைத் தொலைத்த*
*மனதொன்றின்*
*உடைந்த நிலையேகிப் பார்!*

*உன் மகன் அல்லது மகள்*
*கடத்தப்படும் க(ன)ணங்களின் மேல்*
*கிடந்து பார்!*

*இணையதைப் பிரிந்த*
*இழவு வீட்டின்*
*வெறுமை தின்று பார்!*
*அம்மையப்பரை இழந்த*
*அநாதைக் குழவிகளின் - ஆற்றுயர்*
*மொழிகளில் வாழ்ந்து பார்!*

*நன்மை, தீமை, இன்ப துன்பமென*
*நாள்தோறும் உடனிருந்த*
*தோழனைத் தொலைத்துருகும்*
*நிமிடங்களில் நின்று பார்!*

*கொடும் வதைகள் தரும்*
*அவசர சட்டங்களின் கொடுமைகளில்*
*சிக்குண்டு சிதைந்து பார்!*

*எறிகணைகள் ஏவிவிடப்பட்ட*
*நிலத்திடை நின்று - அவைதரும்*
*அசுர வலிகளை அனுபவித்துப் பார்!*

*கைகளை, கால்களை - அன்றேல்*
*உடலதன் வேறு உறுப்புக்களை*
*"ஷெல்" வீச்சிலிழந்து*
*செத்துப் பிழைத்துப் பார்!*



*சமநிலைபெறா சமூகமொன்றில்*
*உரிமைகள் இழந்தவனாய் - சில*
*சமயங்களில் ஓரங்கட்டப்பட்டவனாய்*
*சஞ்சரித்துப் பார்!*

*அகதி வாழ்வதில்*
*ஆகாரமின்றி முடங்கி*
*அவதியுற்றுப் பார்...!*

*நொருங்கிய வாழ்வின்*
*நோவுகள் தானாது - நீயுங்கூட*
*இருப்புக்கான போராட்டத்தில்*
*இறங்கியாடுவாய்!*

## மண்ணும் மாந்தரும் - 01

மிகவும் வரவேற்கப்பட்ட வலிகாமம் மண்ணின் மைந்தர்கள் தொடரை வழங்கிய மாவை வரோதயனின் நினைவுக்கு அஞ்சலிகளுடன் இத் தொடரைத் தொடங்குகிறேன். இதை ஒரு ஊரின் வாழ்க்கைச் சித்திரிப்பாக இல்லாமல், நான் இருந்த வெவ்வேறு ஊர்களில் நான் சந்தித்த சாதாரண மனிதர்களின் கதைகளைச் சொல்லுகிறேன்.

- புவன ஈசுவரன்

பொன்னாத்தை என்பது ஊரில் அவர் அறியப்பட்ட பேரில்லை. அவர் அறியப்பட்ட பேர் அவருடைய சொந்தப் பேருமல்ல. ஊரில் இருந்தவர்கள் பலரும் நன்கறிந்த ஒருவர் பொன்னாத்தை. ஆனால் எவருக்கும் அவரைப் பற்றி எல்லாமுந் தெரியாது. எனக்குத் தெரிந்த ஒரு சிறு பக்கத்தை நான் சொல்லுகிறேன்.

# பொன்னாத்தை...



பொன்னாத்தையை எனக்குப் பதினைந்து ஆண்டுகட்கும் மேலாகத் தெரியும். எங்கள் அயலில் ஓரிரு வீட்டுக்கு மா இடிக்க வருவார். அவருடைய வருமானம் முழுவதும் அதன் மூலம் தான். அனேகமாக மாதத்தில் ஒவ்வொரு நாளும் அவரை ஊரில் யாராவது மா இடிக்க அழைப்பார்கள்.

பொன்னாத்தை பத்துக் கொத்துக்குக் குறைந்தளவு அரிசியை இடிக்க மறுத்து விடுவார். விசேடங்களுக்குத் தேவை என்றால் இருபது கொத்து வரை கூட இடித்துக் கொடுக்க உடன் படுவார். அந்தளவுக்குக் காத்திரமான தேகம்.

மா இடிக்கிறதென்றால் அது ஒரு சடங்கு. முதல் நாள் மாலை அரிசியை ஊறப் போட வேண்டும். ஒரு பெரிய வாளியிலோ அண் டாவிலோ ஊறப் போடுவார்கள். அரிசியில் கலந் திருக்கக் கூடிய உமி மிதக்கும். அதை விலக்கு .வார்கள். சிலபேர் கவனமாகப் பெரிய அரிக்கஞ் சட்டியைப் பாவித்துக் கற்கள் இருந்தால் அவற் றைக் களைவார்கள். களையாவிட்டால் மா இடித்து அரிக்கும் போது தூளாகாதது அரிதட்டில் அகப்படும். பொன்னாத்தை வருவதற்கு முன்னா லேயே ஊறவைத்த அரிசியை மா இடிக்கிற கொட்டிலில் வைத்துவிட வேண்டும். அரிசி ஊறிய தண்ணீரைக் கழனி என்று சொல்லுவார்கள். அயலில் மாடு கன்று வைத்திருக்கிறவர்கள் வேளைக்கே வந்து கழனித் தண்ணீரைக் கொண்டு போய் விடுவார்கள்.

எங்கள் ஊரில் சாதிமுறை இருந்தாலும் கெடுபிடிகள் குறைவு. கோயில்களில் தீண்டாமை கடைப்பிடிக்கப்படும். வீடுகளுக்குள் யார் யார் வந்து போகலாம் என்பதிலெல்லாம் கட்டுப்பாடு கள் உண்டு. ஆனால் பட்டணமாகிக் கொண் டிருந்த ஊரிற், பலவேறு சமூகத்தவர்களும் வந்து குடியேறிய பிறகு, பொது இடங்களிற் சாதியத் தீண்டாமையைக் கடைப்பிடிப்பது நின்று விட்டது. ஆனாலும் கல்வி, தொழில் என்று வருகிற போது பிற்படுத்தப்பட்ட சாதி மக்கள் அதிகம் முன்னேறி யிருக்கவில்லை.

பொன்னாத்தையின் சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிலர் எப்படியோ படித்து முன்னேறி ஓரிருவர் பாடசாலை ஆசிரியர்களாக இருந்தனர். சிலர் சொந்தமாகக் கடை நடத்தினர். பொன்னாத்தை அவர்களைப் பற்றி பெருமைப்பட்டுக் கொண்டா லும் அவர்களுடன் உறவு கொண்டாடுவ தில்லை. அவர்களும் தமது சமூகத்தவர்களில் வறுமைப்பட்டவர்களுடன் கொண்டாடுவது குறைவாகவே இருந்தது.

எனக்குப் பொன்னாத்தையைத் தெரிந்த போது, ஐந்தாறு வயது இருக்கும். அப்போது பொன்னாத்தைக்கு நாற்பது வயது தாண்டி யிராது. "வாழ்விழந்த மனிசி. எண்டாலும் ஒர்மமான ஆள்" என்று அம்மா இடையிடையே சொல்லுவது நினைவில் இருக்கிறது.

பொன்னாத்தை காலை ஏழு மணிக்கெல் லாம் மா இடிக்கத் தொடங்கி விடுவார். பொன் னாத்தை உரலில் இடித்ததை ஒரு பெரிய கட கத்திலே கொட்டுவார். கடகத்தில் இருப்பதை இன் னொரு கடகத்துக்குள் பின்னரையால் அரித்து பின்னரையில் மிஞ்சுவதை வேறொரு சிறு கட கத்திற் போட வேண்டும். சில வீடுகளில் பொன் னாத்தை இடிக்க இடிக்க யாராவது அரிப்பார்கள். வீட்டில் வேலைக்காரர் இருந்தால் அவர்கள் அரிப்பார்கள். குடும்பத்தில் உள்ளவர்களும் அரித்துக் கொடுப்பதுண்டு. உதவிக்கு ஆளில்லா விட்டால் பொன்னாத்தைக்கு மேலதிகமாகக் கொடுக்க வேண்டும். என்றாலும் பொன்னாத் தைக்கு உதவிக்கு யாரும் இருந்தால் நல்ல விருப்பம். கதைத்துக் கதைத்துக் கொண்டே இடிப்பார். ஒரு அரிசி கூட உரலிலிருந்து வெளியே சிந்தாது. அரித்து மிஞ்சிய அரிசிக் குறுணலை எல்லாம் ஒன்றாகக் கடைசியில் இடிப்பார்.

பொன்னாத்தைக்கு மா இடிப்பின் நடுவே தண்ணீர் தேவைப்படும். சில சமயம் "தேத்தண்ணி கொஞ்சம் தர ஏலுமா பிள்ளை?" என்று அம்மாவைக் கேட்பார். பொன்னாத்தை க்குச் சில வீடுகளில் ற்றின் பால் தகரத்தில் தேனீரும் தண்ணீரும் கொடுப்பார்கள். சில வீடுகளில் வேலைக்கு வருகிறவர்கட்கு என்று

வேறாக 'இனமல்' தேக் கோப்பை சோற்றுக் கோப்பை வைத்திருப்பார்கள். வீட்டில் எனமல் பாத்திரந்தான்.

பொன்னாத்தைக்குச் சில நேரம் நான் பானையில் தண்ணீர் கொண்டு போவேன். அப்போது "மோனே, என்ன படிக்கிறாய்? இங்கிலீசு படிக்கிறாயா?" என்கிற மாதிரியான விசாரணைகளும் "நல்ல பிள்ளை" என்கிற மாதிரியான ஆசீர்வாதங்களும் கிடைக்கும்.

வயதிற் குறைந்த யாரும் பொன்னாத் தையை நீ, வா, போ என்றெல்லாம் அழைத்தாற் பிடியாது. நாங்களும் அதைத் தவிர்த்துக் கொள்ளுவோம். மற்றப்படி தன்னையொத்த வயதுள்ள எல்லாரோடும் உரையாடல் நீ, நான் என்று தான் அமையும். வா, போ வோடு சேர்ந்து மோனை, பிள்ளை என்று சொற்கள் சேருவதால் எந்த விதமான மரியாதைக் குறைவும் இராது. சிலபேரை மட்டும் வயதுக்கும் தகுதிக்கும் ஏற்றபடி ஐயா, அம்மா என்றும் பன்மையிலும் குறிப்பிடுவார். ஆனால் நெருங்கிப் பழகுகிற எல்லாருமே அவருக்கு நீ தான்.

மா இடித்து முடிந்தவுடன் போய் முகங்கை கழுவி விட்டு வந்து சோறு சாப்பிடுவார். சோறு தட்டில் அல்லது வாழையிலையிற் பரிமாறப்படும். சாப்பிட்டு முடிந்த கையோடு கொட்டிலின் மூலையோடு இருக்கிற மூன்று கல் அடுப்பைப் பற்ற வைத்து பெரிய சீனாச் சட்டித் தாச்சியை அதில் வைப்பார். அது சூடேறச் சிறிது நேரம் பிடிக்கும். அடுப்பிலிருந்து மூன்றடி தொலைவில் ஒரு சின்ன வாங்கு வைத்து அதில் அமர்ந்தபடி மாவை வறுக்கத் தொடங்குவார்.

மா வறுக்கும் போது பொன்னாத்தைக்கு வேர்த்து வழியும். மா இடிக்கும் போது கதைக்கிறதற்கு இருந்த உற்சாகம் மா வறுக்கிற போது இருக்காது. சில சமயம் காற்று வீசுகிற திசையைப் பொறுத்துக் கண்ணுக்குள் புகை போகப் பார்க்கும். புகையைத் தவிர்க்கிற விதமாகத் தலையைத் திருப்பியபடி மா வறுக்கும் இரும்பு அகப்பையால் விடாமல் தாச்சியைத் துழாவிக் கொண்டேயிருப்பார்.

மா சரியான பதத்திற்கு வெந்து விட்டதைப் பொன்னாத்தை எப்படிக் கண்டு பிடிக்கிறாரோ தெரியாது. ஒரு நாளும் மா அடிப்பிடித்ததாகவோ சரியாக வறுபடவில்லையென்றோ அம்மா சொன்னது கிடையாது. போக முன்னம் மா வறுத்த அடுப்பின் தணலில் ஏதாவது கிழங்கும் சுட்டுத் தருவார். பொன்னாத்தை இடித்துத் தருகிற மா மூன்று நான்கு கிழமைக்காவது போது மானதாக இருக்கும்.

பொன்னாத்தையுடன் ஊர்க்கதைகள் பல வும் விசாரணைகள் பலவும் நடந்தாலும் பொன்னாத்தையுடைய குடும்பத்தைப் பற்றியோ உறவுகளைப் பற்றியோ பொன்னாத்தை அதிகம் பேசுவதில்லை. இளவயதிலேயே பொன்னாத் தையின் புருசன் இல்லாமற் போய் விட்டார். ஒரு மகன் மட்டுமே இருந்ததாகத் தெரியும். வேறு பிள்ளைகள் பிறந்து இறந்திருக்கலாம். மகனைக் காப்பாற்றி வளர்ப்பதற்காகத் தான் பொன்னாத்தை அவ்வளவு பாடும் பட்டார் என்று மட்டும் அம்மாவுக்குத் தெரியும்.

மகன் பள்ளிப் படிப்பை வெகு காலத்திற்குத் தொடரவில்லை. பாடசாலையை விட்டு மேசன் ஒருவரிடம் வேலைக்குத் துணையாகப் போய் விட்டான் என்றும் பிறகு மாறி மாறி எங்கோ கூலி வேலை செய்து வந்தான் என்றும் தெரியும். பொன்னாத்தைக்கு அது திருத்தியில்லை. தொடர்ந்தும் மா இடித்து வந்தார். என்றாவது தலையிடி காய்ச்சல் என்று வேலைக்குப் போகாமலிருந்ததாகத் தெரியாது.

ஐம்பது வயது தாண்டிய பிறகும் பொன் னாத்தை தொடர்ந்தும் மா இடிப்பார். முன்னைப் போல இருபது கொத்து இடிக்காவிட்டாலும் பத்துக் கொத்து என்ற கணக்குக்குக் கீழே போகாது.

ஊரிலே படிப்புப் போதாது என்று என்னை வெளியூருக்கு உறவினர்களிடம் தங்கியிருந்து படிக்க அனுப்பிய காலத்தில் விடுமுறைகட்குத் தான் ஊருக்கு வருவேன். அப்போது நண்பர் களுடன் ஊர் சுற்றுவதற்கு அனுமதி இருந்தது.

தெருவில் ஓரிரு தடவை கண்டிருக்கிறேன். மாலையிற் கள்ளுக் கடைக்குப் போய்ப் போத் தலிற் கள் வாங்கிப் போவார். வீட்டில் வைத்துத் தான் குடிப்பார். போத்தலை எப்போதும் சேலைத் தலைப்புக்குள் மறைத்தபடியே தான் போவார். என்னைக் காணுகிற போதெல்லாம் படிப்பைப் பற்றிய விசாரணை தவறாது.

பொன்னாத்தை கள்ளுக் குடிப்பதைப் பற்றி யாரும் குறையாகப் பேசுவதில்லை. அவருடைய கடும் உழைப்பிற்குப் பிறகு அவருக்குக் கள் இல் லாமல் இயலாது. என்றாலும் குடித்து வெறித்துச் சண்டையிடுவதாக யாரும் சொன்னதில்லை.

மகன் தன்னுடைய விருப்பத்திற்கு ஒரு பெண்ணைத் தனது சமூகத்துக்குள்ளேயே கலியாணம் செய்து கொண்டான். பொன்னாத் தைக்கும் மருமகளுக்கும் சண்டை வருவதற்கு அதிக நாட்கள் எடுக்கவில்லை. மகனும் மரு மகளும் பொன்னாத்தை இருந்து வந்த வளவுக் குள்ளேயே வேறு ஒரு வீடு கட்டிக் கொண்டார் கள். பொன்னாத்தைக்கு மருமகளுடன் பேச்சு வார்த்தை இல்லாவிட்டாலும், மகனுக்கும் பேரப் பிள்ளைகளுக்கும் செலவுக்கு உதவி செய்தே வந்தார்.

மகன் திடீரென்று, வேலை செய்த இடத்தில் ஏற்பட்ட ஒரு விபத்தில் இறந்த பின்பு பொன் னாத்தை குடிப்பது கொஞ்சங் கூடிவிட்டது. ஆனா லும் மா இடிப்பது வழமை போலத் தொடர்ந்தது. பேரப்பிள்ளைகட்கு உதவுவதும் தொடர்ந்தது.

வெளியூரில் வேலை பார்க்கத் தொடங்கிய பிறகு ஊருக்கு எப்போதாவது அருமையாகத் தான் ஊருக்குப் போவேன். போனாலும் ஆக மிஞ்சி இரண்டு நாள் தங்கல். ஊர் சுற்ற நேரமும் இருப்பதில்லை.

ஒரு நாள் என்னை ஒரு வயதான பிச்சைக்காரி வழி மறிந்து, "மோனே... எப்பிடி?" என்று திக்கித் தடுமாறிக் கேட்ட போது அது பொன்னாத்தை தான் என்று விளங்கச் சிறிது நேரமெடுத்தது. கையிலே இருந்த இரண்டு ரூபாத் தாளை நீட்டிய படியே "என்ன நடந்தது? எப்படி..." என்று தொடரு முன்பே பொன்னாத் தையின் கண்களில் இருந்து கண்ணீர் ஆறாக வழிந்தது. தொடர்ந்து ஒரு உரையாடலும் நடக்கவில்லை. கொடுத்த காசை இடது கையால் வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு பொன்னாத்தை போய் விட்டார்.

வீட்டுக்குப் போய் விசாரித்த போது தான் ஒரு வருடம் முன்பு பொன்னாத்தைக்குப் பக்க வாதம் வந்து வலது கை வழங்காமற் போய் விட்டது என்றும் காலும் பாதிக்கப்பட்டு இப்போது தான் உலாவித் திரியக் கூடியதாக இருக்கிறது என்றும் உறவினர்களுடைய உதவி ஒன்றும் இல்லாததால் முன்பு மா இடித்த இடங்களில் போய் உதவிக்கு ஏதாவது பெற்று வந்தார் என்றும், இப்போது அதுவும் வற்றிப் போய்ப் பிச்சை எடுத்துத் திரிகிறார் என்றும் சொன்னார்.

உயரமான, வாகான உடற்கட்டுடைய பொன்னாத்தையின் தோற்றம் என் கண்முன் வந்து போனது. அவருடைய அளவான சிரிப்பும் மிடுக்கான தோற்றமும் சன்னமான குரலும் எங்கே போயின? ஒரு நாளேனும் கூலிக்கு மேலாக ஒரு சதம் பெருநாளுக்குக் கூடக் கேட்ட றியாத, தன்னுடைய உழைப்பின் மீது நம்பிக்கை யும் பெருமையும் கொண்ட பொன்னாத்தைக்கு என்ன நடந்தது?


பொன்னாத்தையின் சமூகமும் உறவும் பொன்னாத்தையைக் கைவிட்டனவா? யாருக் கும் சுமையாக இருக்கக் கூடாது என்று பொன் னாத்தையே எல்லாரிடமிருந்து விலகிப் போனாரா? என்னால் நிச்சயமாக ஒன்றுஞ் சொல்ல முடியாது.

அடுத்த முறை நான் ஊருக்குப் போன போது பொன்னாத்தை இறந்து விட்டார்.

பொன்னாத்தை என்கிற தன்மானமும் தன்னம்பிக்கையும் உள்ள ஒரு பெண்மணி மட்டும் என் மனதில் உயிரோடு இருக்கிறார்.

# குறையினைக் 'கூறிடும்' குறை

- இதயராசன் -



துன்பமே உனக்கொரு துன்பம் இல்லையோ!
இன்பத்தை எண்ணியே இன்பத்தைத் தொலைத்திடும்
துன்பமே உனக்கொரு துன்பம் இல்லையோ!

தொல்லை சூழ்ந்திடும் தொல்லையே!
உன்னையொரு தொல்லை சூழாதோ!
எல்லை இல்லாக் கவலையே!
உன்னையொரு கவலை கவ்வாதோ!

குப்பென்று நாறும் குப்பையைக்
கிளறிக் கிளறியே – நாளும்
குப்பையாய் நாறும் குப்பைக் குணமே!
உன்னையொரு குப்பை மூடாதோ!
குப்பை மேட்டிலொரு வடலி
முளை கொள்ளாதோ! – அந்த
வடலி வளர்ந்து பாளை சிரிக்காதோ!

பாரதி சொன்ன பாவியர் போலென்றும்
'பாழ்பட்ட' கதைபேசி பள்ளத்தில் வீழ்வாயோ!
'நா ரதமேற' நானிலம் செழிக்க
நல்லதைச் செய்து வாழ்வாயோ! – இல்லை
காறி உமிழ்ந்திடக் கழிவினிற் சேர்வாயோ!
ஏறு நிகர்த்து ஏற்றமுற உழைத்திடுவாயோ!
கூறுபட்ட மனமே! கூறிடு – உன்
குறையினைக் குறையொன்று 'கூறிடுமே!'

## முன் வரலாற்றுச் சுருக்கம்

கண்ணன் என்கிற ஆங்கிலேய இளைஞன் வவுனியாவிலுள்ள எருதுக்கடவைப் பல்கலைக்கழகப் படிப்பை இடைநிறுத்தி இங்கிலாந்து திரும்பிச் சில ஆங்கில மொழிப் பற்றாளர்களைச் சந்திக்கிறான். அதன் பிறகு ஆங்கிலப் பற்றுடைய தமிழரான வவுனியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவரது ஆதரவால் ஆங்கில ஆராய்ச்சி மாநாடொன்றிற் பங்கு பற்றிய வேளை அவனும் பேராசிரியரும் ஒரு ஆங்கில இளைஞர் இயக்கத்தினராற் கடத்தப்பட்டு விசாரணைக்குப் பின் பேராசிரியர் விடுவிக்கப்படுகிறார். எனினுங் கண்ணன் விடுவிக்கப்படவில்லை. அவனை விசாரிப்பதற்காக மறித்து வைத்தவர்கள் அவனைத் துன்புறுத்தினார்களா என்று அறிய ஆவலாயிருப்பீர்கள். எனவே கண்ணன் துன்புறுத்தப்பட்டானா என்று அறியத் தொடர்ந்து வாசியுங்கள்.

ஜெகதலப் பிரதாபன்

# ஆங்கிலேயனின் பரிசு – 12

## சந்தேகப் படலம்


தன்னைக் கடத்தியவர்கள் மேற்கொண்டு தீவிரமாக விசாரிப்பதற்கான தங்களது வழமை யான சடங்குகளை ஆயத்தப்படுத்திக் கொண் டிருப்பதைக் கண்ணன் உணர்ந்தான். கண்ண னுடைய தமிழறிவு, ஒரு தமிழ்ப் பேராசிரியருடன் அவனது நட்பு, புலமைப்பரிசிலில் தமிழரின் தாயகத்துக்குப் போனது, தமிழரிடம் சலுகைகள் பெற்றது, ஆங்கில ஆராய்ச்சி மாநாட்டில் ஒரு தமிழறிஞருடன் காணப்பட்டது என்று ஏற்கனவே அவனை ஒரு தமிழ் ஏகாதிபத்திய அடிவருடி என்று அடையாளப்படுத்துவதற்குப் போதுமான விடயங்கள் இருந்தன.

அதைவிட உண்மையை வரவழைப்பதற் கான பலவேறு தொழில்நுட்பங்களும் எல்லா நாடுகளிலும் விருத்தி செய்யப்பட்டிருந்தன என்று நீங்கள் அறிவீர்கள். கண்ணன் அவற்றை அறிய மாட்டான். அவற்றிற் சிலவற்றை அவனுக்கு அறியப்படுத்துவதற்காக வெய்யில் தாழ்ந்த பிறகு அவனைச் சிறை வைத்திருந்த கட்டிடத்திலிருந்து மூன்று கூப்பிடு தூரத்தில் இருந்த ஒரு பாதாள அறையை நோக்கி அவனை இருவர் நடத்திச் சென்றனர். கண்ணனின் கால்கள் கயிற்றாற் கட்டப்பட்டிருந்ததால் அவனால் வேகமாக நடக்க இயலவில்லை. கண்ணனுக்குப் பின்னால் நடந்தவனுக்குப் பொறுமை போதாது. "உனக் கென்ன கால் முடமா? கொஞ்சம் வேகமாக நட!" என்று அதட்டினான். "என்னுடைய காற் கயிற்றை அவிழ்த்துவிடு. பிறகு நான் ஓடுகிறேன். முடியுமானாற் பிடி!" என்று சொல்ல நினைத் தான். ஆனாற் சொல்லவில்லை. ஏனென்று நான் உங்களுக்கு விளக்க வேண்டியதில்லையே.

முன்னால் நடந்தவன் ஏதோ சிந்தனையில் முப்பது நாற்பது கவடுகள் முன்னாற் போய் விட்டான். கண்ணனுக்குப் பின்னால் ஏதோ அரவங் கேட்டது. யாரோ முனகிற ஓசை தொடர்ந் தது. கண்ணனுடைய வாயை ஒரு கை அழுத்திப் பொத்தியது. இரண்டு கைகள் துரிதமாகக் காற் கயிறுகளை அவிழ்த்தன. என்ன நடந்தது என்று கண்ணனுக்கு விளங்குவதற்கு முன்னமே இரு வர் கண்ணனின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பக்கத்திலிருந்த ஒரு பள்ளத்திற்குட் பாய்ந்தனர். அதன் பின்பு தான், முன்னாற் போன வனுக்கு ஏதோ பிழையாக நடப்பதாகத் தோன்றி யது. அவன் திரும்பிப் பார்க்க முன்னமே அவ னும் நிராயுதபாணியாக்கப்பட்டுவிட்டான். கண் ணனை விசாரணை மண்ட பத்துக்குச் (சிலர் அதைச் சித்திரவதைக் கூடம் என்று அழைப்

பார்கள்) கொண்டு சென்ற இருவரையும் முதுகோடு முதுகாக நிற்கும் படி அவர்களது கைகளைப் பின்புறமாகக் கட்டி இருவரையும் மண்ணில் அமரச் செய்தார்கள். இருவரதும் வாய்கட்குள் முழு உருளைக் கிழங்குகளைத் திணித்து விட்டுக் கண்ணனைக் காட்டு வழியாக நடத்தி அடுக்குக் கடவை மின் பேரூந்து நிலை யத்திற்கு அருகே கொண்டு சென்றனர்.

அவர்கள் தங்களுக்குட் பேசிக் கொண்டதைக் கேட்ட கண்ணனுக்கு அவர் களும் ஒரு போட்டி இயக்கத்தைச் சேர்ந்த வர்களாக இருக்க வேண்டும் என்றே தோன்றியது. நிச்சயமாக அவர்கள் ஆங்கில அதிரடிக் காவற் துறையின ரல்ல.



"யாரைக் கடத்துகிறது என்று தெரியாமல் ஆட்களைக் கடத்துகிற தும் பிறகு என்ன செய்கிறது என்று தெரியாமல் இல்லாமலே செய் கிறதும்தான் எங்களுடைய இயக்கங்கள் சிலவற் றிலுள்ள பெரிய பல வீனம்" என்றான் ஒருவன்.

"ஆ.வி.பு.சிக்காரர் போன மாதம் அடகுக் கடையைக் கொள்ளையடிக்கப் போன கதை தெரியுமா?;;

"எந்தக் குழு? மூனாக் குழுவா, பீனாக்குழுவா?"

"இரண்டுமில்ல வீனாக் குழுக்காரர். பசுவம் மரமும் (ப.பெ.கவென்றி) பட்டணத் தில் உள்ள ஒரே அட குக் கடையை வீனாக் குழுவிலையுள்ள இரண்டு அணிகள் இலக்கு வைத்துப் போனார்கள். ஒரு அணி ஆங்கில அதிரடிக் காவற் துறைக் காரர் போல

உடுத்துக் கொண்டும் மற்றது உள்ளூர்க் காவற்துறைக்காரர் போலவும் உடுத் துக் கொண்டு போய் ஒரு பகுதி முன் வலது புற வாசலாலும் மற்றப் பகுதி பின் இடதுபுற வாச லாலும் உள்ளே போய் ஆளையாள் பார்த்துக் வெருண்டு ஓடுகிற போது அந்த வழியாக வந்த உள்ளூர்க் காவற்துறை வாகனத்தில் இருந்தவர் கள் தங்களுடைய ஆட்கள் ஏன் தலை தெறிக்க ஓடுகின்றனர் என்று யோசித்து அவர்களைப் பின் தொடர்ந்து போய் வாகனத்தில் ஏற்ற ...."

"வீனாக்காரர் காவற்துறையிடம் அகப்பட் டார்களா?"

"நல்லவேளை, எங்களுக்கு அனுதாபமான ஒரு மேலதிகாரி வாகனத்தில் இருந்தார். ஒரு விதமாகச் சமாளித்து ஆட்களைத் தப்பிப் போக வழி செய்தார்"

"இதெல்லாஞ் சின்னச் சின்ன இயக்கங்கள் திட்டமிடாமல் வேலை செய்கிறதால் ஏற்படுகிற சிக்கல்கள்"

"உலகப் புகழ்பெற்ற கொள்ளைகளை எல்லாம் நடத்தின ஆங்கிலேயர் பரம்பரையில் இப்படிப்பட்ட முட்டாள்கள் வந்திருப்பதை நினைக் கவே அவமானமாய் இருக்கிறது!"

ஆங்கிலேயரின் பழம் பெருமைகளிற், கொள்ளையடிப்பும் ஒன்று என்பது அப்போது தான் கண்ணனுக்கு நினைவுக்கு வந்தது. பெரிய கடற் கொள்ளைக்காரர்கட்கு எல்லாம் பிரித் தானிய அரசர்களும் அரசியரும் பட்டமளித்துக் கவுரவித்ததை நினைவு கூரும் போது அவனுக்குப் பெருமைப்படுவதா வெட்கப்படுவதா என்று நிச்சயமாகத் தெரியவில்லை. ஆங்கில நாட்டார் பாடல் ஒன்றை ஆதாரமாக வைத்து ஆங்கில மக்கள் கவிஞன் என்று பேர் பெற்ற சில்க் ஃபோர்ட் பாடிய

"நாட்டுக்கு ஒரு வீரன் - நோவுட்
காட்டுக்கு அதிகாரன் - அந்த
நாளில் பிரபுமாரைக் கொள்ளையடித்த
றொபின் ஹுட் கதையுண்டு - அதனை
நாம் சொல்வோம் இங்கு"

என்று தொடங்குகிற "றொபின் ஹுட் சரித்திரம்" என்ற ஆங்கில நாட்டார் கூத்துப் பாட்டு நினைவுக்கு வந்ததும் போதாமல், ஓரிரு வரிகளை வாய்விட்டுப் பாடியும் விட்டான்.

"ஏய் சிமித்து உனக்குப் பாடவும் தெரி யுமோ?"

அவனுக்கு எப்படித் தன்னுடைய பேர் தெரியும் என்று கண்ணனுக்கு விளங்க வில்லை.

"என்ன முழிக்கிறாய்? என்னைத் தெரிய வில்லையா?" என்று கேட்டபடி தன்னுடைய தலையை சுற்றிக் கட்டியிருந்த முண்டாசுத் துணியையும் கண்ணாடியையுங் கழற்றினான். யோவான் பாவேல்! கண்ணனுடைய நினைவு கள் எட்டு ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றன.

தன்னுடைய பாடசாலையில் ஆறாம் ஆண்டிற் புதிதாக வந்து சேர்ந்த யோவானைக் கண்ணன் பரிவோடு நடத்தினான். யோவான் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். எப்படியாவது அவன் படித்து முன்னேற வேண்டும் என்ற ஆவலில் அவனுடைய குடும்பத்தார் மிகவுஞ் சிரமப்பட்டு அவனுடைய கல்விக்குரிய செலவு களைப் பொறுத்தனர். ஆனாலும் அவனைச் சாதிப் பேர் சொல்லியும் அவனுடைய வறுமை யைச் சுட்டிக் காட்டியும் கொஞ்சம் வசதியான குடும்பத்துப் பிள்ளைகள் கேலி செய்தனர். சில பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை வேறு பாடசாலைக்கு மாற்றவதாகவும் பாடசாலை அதிபரை மிரட்டினர். அப் பாடசாலை அரசாங் கத்திற்குரிய சைவப் படசாலை என்பதாலும் அதிபர் தமிழரிடையே சில காலம் வாழ்ந்து வந்ததால் சாதி முறை தவறு என்று நினைப்ப வராக இருந்ததாலும் மிரட்டல்கள் பலிக்க

வில்லை. எனினும் யோவானாற் சக மாண வர்களின் கேலிகளைத் தாங்க முடியவில்லை. கண்ணன் வற்புறுத்தித் தடுத்த போதும் இரண்டு ஆண்டுகள் முடிய முன்னரே பாடசாலையை விட்டு விலகி விட்டான். அதன் பின்பு தற்செயலாக உள்ளுவராமிட்டனில் ஒரு தடவை கண்ணன் யோவானைச் சந்தித்தான். அப்போது கூலி வேலை செய்து குடும்பத்துக்கு உதவுவதாக யோவான் சொன்னான்.

"யோவான்! நீ எப்படி...?" என்று கண்ணன் கேட்கத் தொடங்கு முன்னரே, "சிமித்து. இப்போதைக்கு நீ வீட்டுக்குப் போகிற வழியைத் தேடு. உன்னிடம் சில அலுவல்களை விசாரிக்க வேண்டி வரும். அப்போது தொடர்பு கொள்ளு கிறேன். நடந்தவற்றைப் பற்றி யாரிடமும் சொல் லாதே" என்று கண்டிப்பான குரலில் யோவான் சொன்னான்.

பிறகு என்ன நினைத்தானோ "உன்னு டைய ஊர், பேர், முகவரி எல்லாவற்றையும் அந்தக் கழுதைகளிடம் சொன்னாயா?" என்று கேட்டான். கழுதைகள் என்று குறிப்பிட்டது கண்ணனைக் கடத்திய இயக்கக்காரர்களை என்று உங்களுக்கு விளங்கியிருக்கும். கண் ணனுக்கும் விளங்கியது. "சொன்னதாக நினை வில்லை. அவர்கள் என்னை விசாரிக்கக் கொண்டு போகிற வழியில்தான்..." என்று கண்ணன் சொல்லி முடிப்பதற்கு முன்னரே யோவான் "நல்லது. இங்கிருந்து ஒரு கூப்பிடு தொலைவில் ஒரு சத்திரம் இருக்கிறது. விடியும் வரை அதற்கு வெளியே நின்றுவிட்டுப் போகலாம். மோட்டுக் கழுதைகள் அங்கே வராது... யோசனை என்றால் உள்ளே போய்த் தங்குவதற்கு நூறு நூற்றைம்பது ஊரோ (பழைய பேர் யூரோ. புதிய பெறுமதி மிகவுங் குறைவு) போதும்" என்று சொல்லி வேட்டியில் முடிந்து வைத்திருந்த காசை அவிழ்த்து எடுக்கத் தொடங் கினான். கண்ணனின் கையிற் போதியளவு பணம் இருந்ததால் "நன்றி. என்னிடம் பணம் உள்ளது" என்று மறுத்து விட்டான்.

"சரி. இனி நாங்கள் புறப்பட வேண்டும்" என்று சொல்லி விட்டு யோவானும் சூசை தச் சரும் (ப.பெ. ஜோசப் காப்பென்ற்றர்) போனார்கள். சூசையை யோவான் கண்ணனுக்கு அறி முகப்படுத்தவில்லை என்பதை நீங்கள் கவ னித்திருப்பீர்கள். ஆ.வி.போ.சி இயக்கத்தவர்கள் தேவையில்லாமல் ஒரு காரியமுஞ் செய்யமாட் டார்கள். தேவையில்லாமல் ஒரு கதையுங் கதைக்க மாட்டார்கள் என்று நீங்கள் இப் போதைக்கு அறிவீர்கள்.

ஆங்கிலேய விடுதலை இயக்கத்தின ரிடையே மிகவும் வலிமை கொண்ட இயக்கம் ஆ.வி.போ.சி என்று ஒருவேளை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்களை மக்கள் சிங்கங்கள் என்றும் சிறு நரிகள் என்றுங் குறிப்பிடுவர். அவர்கள் பயன்படுத்துகிற சொல்லை வைத்து அவர்கள் ஆ.வி.போ.சியை விரும்புகிறார்களா வெறுக்கிறவர்களா என்று அறிய முடியும். அரசாங்கம் அவர்களைக் காட்டுமிராண்டிகள் என்றே குறிப்பிடும். எந்த விடுதலை இயக்கத்தின் பேரையும் அரசாங்க ஊடகங்கள் சொல்லக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்தது. எனி னும் ஈழப் பெருநிலத்திலும் குமரிக் கண்டமென அறியப்படும் இன்றைய பாக்கிஸ்தான் முதலாக மியான்மார் வரையிலான நிலப்பரப்பிலும் சிற்சில வேளைகளில் இயக்கங்களில் பேர்கள் குறிப்பிடப் படுவதுண்டு. உலகத் தமிழ்ச் செய்தி ஏடுகளைப் படிப்போருக்கு மட்டுமே அந்த விவரங்களைத் தெரியக் கிடைக்கும்.

கண்ணன் வீட்டிற் போய்ச் சொல்லுவதற் கான தனது புனைகதையையும் தகப்பனார் சிவாவின் குறுக்கு விசாரணைக் கேள்விகட்கான மறுமொழிகளையும் ஆயத்தப்படுத்தினான். ஆனாலும் தங்கை மேகலைக்குள் ஒளிந்திருக் கும் ஒரு துப்பறியும் புலியை அவன் எதிர்பார்த்

திருக்கவில்லை.

பேராசிரியர் பெருமுடிக்கோவைக் கடத்திய விடயம் செய்திகளிற் சொல்லப்படவில்லை. எனவே கண்ணன் பேராசிரியருடன் சேர்ந்து தானும் ஊரைச் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பி வந்ததாகச் சொன்ன கதை வீட்டிற் பொதுவாகவே ஏற்புடையதாக இருந்தது. மேகலை கண்ண னிடம் மாநாட்டு இறுதி நாட் கலவரம் பற்றிக் கொஞ்சம் துருவி விசாரித்த போது கண்ணன் அரச ஊடகங்கள் சொன்னதற்கு உடன்பாடாக விளங்கினாலும் அந்த நிகழ்ச்சிக்குப் பொறுப் பானவர்கள் சிங்கங்களா என்று மேகலை கேட்ட போது அவன் முன்பின் யோசியாமல் "நிச்சயமாக இல்லை" என்றான்.

"உன்னால் எப்படி நிச்சயமாகச் சொல்ல முடியும்?"

"சிங்கங்கள் இப்படிப்பட்ட முட்டாள் வேலைகளைச் செய்ய மாட்டார்கள்?"

"யாருமே இதுவரை செய்யத் துணியாத ஒரு வேலை எப்படி முட்டாள் வேலையாகும்?"

"கடைசியாக எதைச் சாதித்தார்கள்? ஆட்களைக் கடத்திக் கொண்டு போய் எதைக் கண்டு பிடித்தார்கள்?;;

"யாரைக் கடத்தினார்கள்?"

கண்ணனால் உடனேயே மறுமொழி சொல்ல இயலவில்லை. "தெரியாது என்றாலும் மாநாட்டிற் சந்தித்தவர்கள் சொன்னார்கள்"

கண்ணனுடைய தயக்கத்தை மேகலை கவனிக்கத் தவறவில்லை. ஆனால் அவள் மேற்கொண்டு எதையும் விசாரிக்கவில்லை.

அவள் பேசிய தோரணையிலிருந்து. அவள் சிங்கங்களின் அனுதாபியாக இருக்க லாமோ என்ற எண்ணம் கண்ணனின் மனதில் ஓடியது. வவுனியாவுக்குப் போகு முன்பு கண்ண னுக்குச் சிங்கங்களின் மாணவர் சங்கமொன்று டன் தொடர்பிருந்ததை நான் சொல்லாமலே சிலர் ஊகித்திருப்பீர்கள். அவனிடமிருந்த செகப்பிரியர் படத்தின் அடியிற் பொறித்திருந்த ஆ.வி.போ.சி என்ற எழுத்துக்களை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

திரும்பி வந்த பிறகு கண்ணன் மாணவச் சிங்கங்களுடன் தனது உறவுகளைப் புதுப்பிக்க முயலவில்லை. அதற்கான நேரமும் வாய்க்க வில்லை. எனினும் விடுதலை இயக்கங்களின் பொதுவான போக்குக்களைப் பற்றி அவன் கவனித்து விசாரித்து வந்தான். ஈழ மாநிலப் படிப்பைக் குழப்பி விட்டு வந்த சூழ்நிலையில் அரசியலில் ஈடுபடுவதாக அறிந்தால் அவனை அவனுடைய தந்தை சிவா வீட்டை விட்டே விரட்டி விடக் கூடும். எனவே அவன் கொஞ்சங் கவனமாகவும் இருக்க வேண்டியிருந்தது.

மேகலைக்குச் சிங்கங்களுடன் அனுதாபம் இருந்தாலும் சிங்கங்களிடையே இரண்டு முரண் பட்ட போக்குக்கள் இருந்த சூழ்நிலையில் அவள் எந்தத் தரப்பில் நின்றாள் என்பதும் நிச்சயமற்ற தாக இருந்தது. ஆ.வி.போ.சி. (ம) ஆ.வி.போ.சி. (கு) என்கிற அமைப்புக்களாகப் பிரிந்து போன வர்கள் சிங்கங்களின் தலைமையின் சர்வாதி காரப் போக்கை எதிர்ப்பதாகச் சொல்லியே பிரிந்து போனார்கள். அந்தப் பிளவுகட்குப் பின்னால் ஐரோப்பியப் பணம் செயற்பட்டதாகவுஞ் சொல்லப் பட்டது. அவர்களிடையே தீவிரமான கெல்ற்றிக் இனத்தவர்கள் மீதான கடும் வெறுப்பும் இருந்து வந்தது. பெரிய அமைப்புக்களாக வளர முடியாத போதும் சிங்கங்களில் ஒரு சிலருடன் தொடர்பு களை வைத்திருந்தார்கள். அவற்றைப் பற்றித் தலைமைச் சிங்கங்கள் அறியக் கூடும் என்பதை அந்த இயக்கத்தினர் அறிந்திருக்கவில்லை.

கண்ணன் ஆ.வி.போ.சியில் இணை வதற்குத் தடையாக மேற்குறிப்பிட்ட விதமான முரண்பாடுகளும் அமைந்திருந்தன. வவுனியா வுக்குப் போகும் போது கண்ணனிடம் இருந்த

தமிழர் விரோத உணர்வு கொஞ்சம் மாறி இப்போது தமிழ் ஏகாதிபத்திய விரோத உணர்வாக மட்டுமே இருந்தது. அதற்கு அவனது தனிப்பட்ட சில அனுபவங்களும் தமிழரின் பண்பான நடத்தையுங் காரணமாக இருந்தன என்று நான் விளக்க வேண்டியதில்லை.

கண்ணனுடைய அடுத்த சில வாரங்கள் அமைதியாகவே கழிந்தன. தன்னுடைய ஆங்கில விஞ்ஞானக் கலைச் சொற் தேடல்களிலும் ஆங்கில விஞ்ஞானச் சிந்தனையின் வளர்ச்சி பற்றிய ஆய்வுகளிலும் அவனது பொழுது கழிந்தது. பேராசிரியர் பெருமுடிக்கோவுடன் ஓரிருமுறை இணையத் தளத்தின் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொண்டான்.

பெருமுடிக்கோ இன்னொரு முறை இங்கிலாந்துக்கு வர விரும்புவாரோ என்று அவனால் நிச்சயமாக அறிய முடியவில்லை. அவரிடம் அதைப் பற்றிக் கேட்கவே அவனுக்கு வெட்கமாக இருந்தது. ஆங்கிலேயர்கட்கு என்று ஒழுங்கான, ஒற்றுமையான, ஒரே குரலிற் பேசுகிற விடுதலை இயக்கம் ஒன்று இருந்தால் அடுக்குக்கடவையூர் அசம்பாவிதம் நடந்தே இராது என்று நினைத்தான்.

தமிழ் ஏகாதிபத்தியவாதிகளை எவ்வளவு தூரம் நம்புவது என்பதிலேயே தங்களுக்குள் எவ்வளவு வேறுபாடுகள்? அதைவிடவுஞ் சுதந்திர ஆங்கில நாடு என்றால் என்ன என்பதிலும் எத்தனை கருத்து முரண்பாடுகள். வடக்கிலும் மேற்கிலும் தென்மேற்கிலும் எல்லைகள் குறுக்கப்பட்ட ஆங்கில நாடா, அல்லது பிரித்தானியா எனப் புகழ் பெற்ற ஆங்கிலத் தீவுப் பிரதேசமா, அல்லது அதற்கும் அப்பால் வட அயர்லாந்து முழுவதையும் இணைத்த பழைய பெரிய பிரித்தானியாவா? ஆங்கிலம் தமது தாய் மொழியல்ல என்று கூறுகிற சமூகங்களை என்ன செய்வது? மொழிவழித் தேசியமா, இனவழித் தேசியமா? பண்பாட்டு வழித் தேசியமா, அரசியல் வரலாற்று வழித் தேசியமா?

ஆங்கிலேயரால் ஏன் தமிழர்களைப் போல ஒற்றுமையாகச் செயற்பட முடியவில்லை? இரண்டு ஆங்கிலேயர் சேர்ந்தால் ஒரு சங்கம் வைப்பார்கள். மூன்றாம் ஆள் வந்துவிட்டால் மூன்று சங்கங்களாகி ஆளோடு ஆள் மோதுகிறார்கள்.

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த  
நெஞ்சு பொறுக்குதில்லையே  
திசை கெட்ட ஆங்கிலர் தமை நினைத்தால்  
நெஞ்சு பொறுக்குதில்லையே  
தமிழர்தம் பகைவர் என்பார் - பின்பு  
தடம்மாறிப் பிரான்சியர் பகைவர் என்பார்  
அயர் இனம் பகைவர் என்பார் - மாற்றி  
ஐரோப்பா என்றென்றும் எதிரி என்பார்  
நெஞ்சு பொறுக்குதில்லையே  
தமக்குள்ளே சமர்புரிவார் - அதைத்  
தீர்த்திடத் தமிழரைத் துணைக்கழைப்பார்  
தமக்கென்றோர் பொதுநெறியாய் - ஒன்றுந்  
தேராமல் ஆங்கிலர் அழிகின்றாரே  
நெஞ்சு பொறுக்குதில்லையே

ஆங்கில விடுதலை இயக்கங்களைப் பற்றி நினைக்கிற போதலெல்லாம் ஒரு ஆங்கில மகாகவி ஐம்பது ஆண்டுகள் முன்னம் மனம் நொந்து எழுதிச் சென்ற மேற்படி வரிகளை அவனது உதடுகள் முணுமுணுக்கும்.

பழைய தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்தி முதலில் ஆங்கில விடுதலைப் போராளிச் சிங்கங்களை ஒன்றுபடுத்துவதற்கு முயல வேண்டும் என்று நினைத்தான். அதேவேளை குடும்பத்தில் ஏற்படக் கூடிய சிக்கல்களும் தனது ஆங்கில ஆராய்ச்சிப் பணி தமிழராட்சியிலிருந்து கிடைக்கும் உதவி நிதி மீது தங்கியிருப்பதும்

பற்றியும் யோசனை ஓடியது.

யோவானுடன் தொடர்பு கொள்ள வழி யுண்டா என்றும் யோசித்தான். இப்படி அவன் செயலின்றிப் பலவற்றையும் நினைத்துக் குழம் பிக் கொண்டிருந்த போது மேகலை அவனிடம் "அண்ணா உன்னைத் தேடி யாரோ இரண்டு பேர் வந்திருக்கிறார்கள் போலிருக்கிறது. நீ இருக்கிறாயா என்று விசாரித்தார்கள். ஆனாற் படலைக்கு இப்புறம் வராமல் நிற்கிறார்கள். ஆட்களைப் பார்த்தால் படித்தவர்கள் போலத் தெரியவில்லை" என்றாள்.

கண்ணன் தோளிற் துண்டைப் போட்டுக் கொண்டு வீட்டுக் கதவைத் திறந்து வெளியே போக முன்பு, "கவனமாயிரு அண்ணா" என்று மேகலை எச்சரித்தாள்.

(மேகலை கண்ணனை அப்படி எச்சரிக்கும்படியான காரணம் என்ன? கண்ணனைத் தேடி வந்தவர்கள் யாராயிருக்கக் கூடும்? அவனைக் கடத்திச் சென்ற கூட்டத்தவரா? சிங்களவரா? ஏன் வந்தார்கள்? கண்ணனை அழைத்துச் செல்ல வந்தார்களா? எங்கே? இப்படியான கேள்விகள் உங்கள் மனதில் எழுவது இயல்பானது தான். கண்ணனின் வாழ்க்கைத் தடம் எதிர்பாராத திசைகளிற் திரும்புகிற போது கண்டதையும் நினைத்து மனதைக் குழப்பிக் கொள்வதை விட அடுத்த படலத்தை வாசிப்பது உடலுக்கும் மனத்திற்கும் நல்லது.)

## முட்கம்பித் தீவு - 9

தீவுகளில் மழை விழுகிறது
தீவுகளில் மழைநீர் திரளுகிறது
தீவுகளை மழைநீர் நிறைக்கிறது
தீவுகளையும் திடல்களையும்
முட்கம்பி வேலி பிரிக்கிறது
திடல்களில் நிற்போர்
தீவுகளில் மிதப்போரையும்
அமிழ்வோரையும்
முட்கம்பிகளினூடாக
வேடிக்கை பார்க்கின்றனர்.

## முட்கம்பித் தீவு - 10

தடித்த நெடுச்சுவர்ச் சிறைகளை மீறி
இடித்தும் துளைத்தும் அகழ்ந்துந் தாவியும்
கடந்து செல்லலாம்.
கடவா வண்ணம் கம்பி வேலிகள்
தாண்டவும் தகர்க்கவும் இயலாதனவாய்
வலுத்து நிற்பதன் காரணம் என்ன?
காவலின் வலிமையா?
கொடுமதி யுடையோர் கைகளின் ஆற்றலா -
கொடுமையை அறிவோர் கையறு நிலையா?

## முட்கம்பித் தீவு - 11

தேவகியின் மகனுக்காக
ஆற்றுப் பெருவெள்ளம் அடங்கி வழிவிட்டது.
மோசஸின் மக்களுக்காக
ஆழக் கடல் பிரிந்து போக வழிவிட்டது.
வன்னியின் மக்களுக்காகக்
காடும் இரங்கவில்லை,
கடலும் இரங்கவில்லை -
முட்கம்பிக் கொடியொன்று
முளைத்து அவர்களைச் சூழ்ந்தது.



# தாய் நாட்டுக்கு

நீ எங்களைப் போலவே குருடாயிருக்கிறாய்
உனது காயங்கள் எந்த மனிதனும் திட்டமிட்டதல்ல
உன்னுடைய மண்ணை வெல்வதற்கு
எந்த மனிதனும் உரிமை கோரவில்லை
ஆனாலும் நாம் இருவருமே
சிறைப்படுத்தப்பட்ட சிந்தனை வெளிகளூடு
தட்டுத்தடுமாறுகிறோம்.
நமக்கு எதுவும் விளங்குவதில்லை.
பெரிதாகக் திட்டமிட்ட உன் எதிர்காலத்தை மட்டுமே நீ காண்கிறாய்
எங்கள் உள்ளங்களின் ஒடுங்கும் பாதைகளாக நாம்
அவரவருக்கு இனிதான வழிகளில் நின்றபடி
சீறிச் சினக்கிறோம். குருடர் குருடருடன் மோதுகின்றனர்.
அமைதி தோன்றியதும்
புதிதாகப் பெற்ற கண்களால்
ஒருவர் மற்றவரின் உண்மையான வடிவை
மீளவும் நோக்கி வியப்போம்.
அமைதி தோன்றியதும் அன்பும், கருணையும் நட்புணர்வும் மேவ
உறுதியான கைகள் கோர்த்து.
பழைய வேதனையைப் பார்த்துச் சிரிப்போம்
அமைதி வரும் வரை இருப்பன
பெருங்காற்றும் இருளும் இடியும் மழையுமே

ஆங்கிலத்தில் : சார்ள்ஸ் ஸோர்லி (Charles Sorley 1895-1915)
முதலாம் உலகப் போரில் இறந்த ஆங்கிலக் கவிஞர்
தமிழில் : வே. தினகரன்

# முருகையன் எங்கள் பிள்ளை

- சோ.தேவராஜா



ஐய,
முருகைய,
'பையவே சென்று பாண்டியர்க்காகவே'யென்று
பெய்யவில்லை நின்கவி, பழி தீர்க்கவில்லை உன்கவி
உய்யவிளை உலகத்தார் உண்மை யுணர்கவென
மெய்யானாய்
பொய்யெல்லாம் போயகல மையானாய்கவிக்
கையானாய்
பொய்யழகே கவிதையெனும் போலிகளோ
வேலிகளானார்
வேலிகளே எங்கள் வளவுகளை மேய்ந்தார் - அந்தச்
சோலிகளே எங்கள் வாழ்வாய் போனதனால்
'ஆர் பெற்ற பிள்ளையோ பிணமானார் - எந்த
அன்னையின் தனிமகளோ சவமானாள்;
ஊர் பெற்ற பிள்ளைகளை உன் பிள்ளையென
ஒப்பாரி பாடினாய்
புல்லுக்கும் உயிர் சொன்னாய்
பூவுக்கும் உயிர் சொன்னாய்
பிள்ளையும் புல்லென்றாய் பூவென்றாய்
எல்லாஞ் சரிவரும் நல்லாய் நடிக்கவென
நாடகம் ஆக்கி வைத்தாய்

ஐய,
முருகைய,
சொல்லாமற் கொள்ளாமற் செல்லவில்லை நீ
கடைசியாய்க் கட்டிலிற் கிடந்து
சொண்டுச் சுழிப்பிற் சொன்னாய்
கண்களின் ஒளித் தெறிப்பிற் சொன்னாய்
சாவுக்குச் சாவு சொன்னாய்
நாவுக்குச் சுவையானாய்
நம்மெல்லோர்க்கும் நன்நிலமானாய்
தாயகமானாய் நம் பயில் நிலமானாய்

செத்தவர்கள் வரிசையிலே நீ செல்லவில்லை — அதி
உத்தமர்கள் வரிசையிலே
உள்ளொளி பெருக்கி ஆனந்த வெள்ளமாயானாய்
நாவலன் ஆனாய் நாமகளானாய்
கிருத்திகன் ஆனாய் அபிராமியானாய்
தவமணி தேவியின் உயிரானாய் நீயானாய்
நெஞ்சென்றிருப் போரனைவரின் நினைவானாய்
அஞ்ச வேண்டாம் மிஞ்சியென்ன வரப் போகுது
பஞ்சி வேண்டாம்
"பண்பாட்டின் பேரால் பலசோலி கொண்டேன் அலைகிறீர"
"இரண்டாயிரமாண்டுப் பழைய சுமையேன் சுமந்து
அலைக்கழிகிறீர்" என்றீர்



# முருகையன் எங்கள் பிள்ளை

ஐய,
முருகைய,
உண்ணாணை,
ஆரைக் குறை சொல்லி என்னபயன்?
கடவுளுக்கு விளையாட்டு
கவுண்மேந்துக்கு சீவன் போகுது
ஐ.நாவை ஏன் கோவிப்பான்
அயலாரை ஏன் நாம் சபிப்பான்
எல்லாஞ் சரிவரும்
நாங்கள் மனிதர்
அப்பரும் சுப்பரும் ஆளுங்கதை மாறும்
வம்பரும் தும்பரும் வீழுங்கதை ஆகும்

ஐய,
முருகைய,
தமிழானாய், தமிழ் மொழியானாய்
மக்களானாய் மக்கள் மனமேயானாய்
உலகானாய் உண்மையானாய்
இன்பமே எங்கள் இலக்கென்றாய்
சங்கடங்கள் தொலைப்பனெனச் செய்தாய்
பொற்பதக்கம் போட்டுப் புனைந்த மணிச்
சங்கிலியின் போலிப் புகழாரம் தூற்றினாய்
விலங்குகளில் மாட்டியிருக்கும் மனிதத்தை
விளக்கம் பெறுகவென
கந்தபுராண கதாபாத்திரங்களூடு
கடூழியம் நாடகம் தந்தாய்

சாமானியர் நாம்,
நாம் அனுபவிக்கும் ஆடை, அணிகலன்
அலங்காரம், பெருமெடுப்பு, உடுப்பு, நடப்பு,
பொன், மணி, சடங்கு, சம்பிரதாயம் என்றெல்லாம்
எங்கள் அகங்காரம் அறிவிக்கும் அடிமை விலங்குகள் - அவை
என்றோதினாய் நீதி கூறினாய்
எங்களுக்கு ஏனோ எதுவுமே புரியவில்லை
நுகர்வுப் பண்பாட்டின் நுகத்தடியில் நாம் நாசமாய்ப் போறோம்

ஐய,
முருகையா,
என்ன ஐயா, சேர், கௌரவ,
மதிப்பிற்குரிய, மாண்புக்குரிய, அதி உத்தம,
என்று விளிக்கவா?
அது உங்களுக்குப் பிடிக்காது
நீங்கள், நாங்கள், உங்கள், தங்கள் என்பதும்
எம் உறவை எங்கோ தூரத்தில் தொலைவில்
வைத்துவிடும் என்றோ ஐயனே ஏனோ பார்க்கிறீர்

ஆம், புரிகிறது
முருகையன்
'ன' எனும் விகுதியில் நீ ஒரு சிறு பொடியன்
2009 – யூன் - 27 நீ மகனாய் பிறந்தாய்
யாருக்கு மகனாய் பிறந்தாய்?
எனக்கா, அவனுக்கா, அவளுக்கா? ஆருக்குப் பிறந்தாய்
எங்களுக்குப் பிறந்தாய்
அவர்களுக்குப் பிறந்தாய்
ஆராருக்கோ வெல்லாம் பிறந்தாய்
அங்கிங்கென்னாதபடி எம் எல்லோருக்குமாய்ப் பிறந்தாய்!
இன்று நீ பிறந்த துடக்கு கழிவு
நேற்று ஒரு வாத்தியார் தமிழ்ச் சங்கத்தில்
'ஆரிந்த முருகையன' என்றார்
இரகசியமாக 'உங்கடை கட்சியாளோ' என்றார்
முருகையனின் சொண்டுச் சுழிப்பும்
கண் வீச்சும் என் நெஞ்சில் சுழித்தன

தேசிய கலை இலக்கியப்
பேரவைத் தலைவர், தமிழின் மூத்த தனையன்
ஈழத் தமிழரின் ஈனம் துடைத்தோன்
வாழுந் தமிழை வளப்படுத்தியோன்
வல்லமை எமக்கு அவன் சொல்லெல்லாம் எனும்
'கவிஞருக்குக் கவிஞன்' எனும் அவன் அண்ணன் கைலாசின்
கருத்தை எடுத்துச் சொல்லவா,
என் செய்வேன்? என் அப்பனே!

ஐய, முருகையா
என் தப்பா இது? ஏது செய்வேன், என் செய்வேன்,
எடு தடி, பிரம்படி ஒன்று போடவா,

வெட்கத்தில் தலை குனிந்தேன்
முருகையனின் மென்சிரிப்பு என்
சொண்டுச் சுழிப்பில் தெறித்ததறிந்தேன்

முருகையன் எமது பொடியன்
முப்பத்தொண்டு நாளைக்குச் செய்யிறம்
கோழிக்கறி, ஆட்டிறைச்சி, மொட்டைக் கறுப்பன், புழுங்கலரிசிச் சாதம்
ஒடியல் கூழ் ஒண்டுமில்லை

வெறுந் தேத்தண்ணியும் உழுந்து வடையுந்தான்
ஊரிப்ப கெட்டுக் கிடக்குது
கொண்டாடப் பொருத்தமில்லை
'எளிமை' தான் எங்கடை பொடிக்கு விருப்பம்
இவன்ரை அண்ணை கைலாஸ்தான்

ஓடி ஆடி அலுவல் பார்க்கிறான்
அவன்ரை இருவத்தாறாவது பிறந்த தினமும்
எளிமையாய்த்தான் கொண்டாடினனாங்கள்
கைலாஸ் அவர் இப்ப இளைஞன்
அவனும் அவன்ரை சினேகிதருந்தான்
இண்டைய நிகழ்ச்சிக்குப் பொறுப்பு

ஏதோ, எங்கடை பிள்ளை முருகையன்
நல்லாய் வருவான், வளருவான்
தவளுவான், உடும்பு பிடிப்பான்
ஏணையிலை தூங்கினாலும் எழுந்து
நடப்பான்,
இரண்டு கையும் விசுக்கி விசுக்கி வீரனாய் நடப்பான்
இரண்டாயிரம் வருஷப் பழஞ்சுமை விலக்குவான்
மணிகள் பொறுக்கி அணியாய் நடப்பான்
திரண்டு வரும் சனம் கண்டு பொறுமையாய் நடப்பான்
தன் புகழ் பாடான் தரணிபுகழ் சேர்ப்பான்
இல்லை என்பதை இல்லை செய்வான்
மேல்நிலை எய்துவான்
விரிந்த விண்ணிடை மேல் உலாவுவான்

என்ரை குஞ்சு, என்ரை குறுமுனி,
என்ரை செல்லப்பிள்ளை
முருகையன் டேய் வாடா
என்ரை தோழிலை ஏறு
எல்லாருமாய் நாங்கள்
ஊர்வலம் போவம்
உலகெலாம் சுத்துவம்
உன்ரை சின்னக் கொண்ணை சிவா
கனடாவுக்குன்னைக் கொண்டு போனவனாம்
கள்ளன் எனக்குத் தெரியாமல்
பிறகுதான் சொன்னவன் பரவாயில்லை

நீ என்ரை அச்சாப்பிள்ளை
வா, நாங்கள் எல்லாரும் ஒண்டாச் சுத்துவம்
வெறியாட்டு வேண்டாம் குஞ்சு
பொய்க்காலும் வேண்டாம் குஞ்சு
தற்கொடை வேண்டாம் ஐயன்

வேற்படை கொண்டு மயிலேறி
உலா வருவோம் வா முருகா,
உன்ரை கோச்சிக்கு இப்ப எல்லாம் விளங்குது
அப்ப முந்தி தன்ரை பாக்கு வெட்டியை
பிள்ளையானிட்டைக் குடுத்ததாலை

அவன் ஆச்சியின்ரை காதை வெட்டி
அப்பளம் பொரிச்சதும்
பாக்கு வெட்டியின்ரை கூரைப் பரிசோதிச்சதும்
ஆச்சிக்கு இப்ப அவன்பற்றி நல்ல அனுபவம்

கறுத்தக் கொழும்பானை அவனிட்டைக் குடா இனி
ஆறுதலாய் நாங்கள் அகிலம் சுத்துவம்
ஆச்சியின்ரை சொல்லை அப்புவும் மீறார்
அதாலை பயமில்லை
மாம்பழம் கட்டாயம் கிடைக்கும்

சூரசங்காரத் திருவிழாச் செய்யலாம்
சூரன்ரை மாறுவேடமெல்லாம்
மனிசருக்குத் தெரிஞ்சு போச்சு
கடவுளின்ரை வேசத்திலையல்லே கபடிகள் வருகினம்
கள்ளன் பொலீசு விளையாட்டு வேண்டாம் இனி

உள்ளம் எல்லாம் உண்மை விளங்க
இனி எல்லாரும் சுத்துவம்.

("முருகையன் என்னும் முடியா நெடும் பகல்" எனும் பெயரில் கவிஞர் இ.முருகையன்
நினைவுமலர் வெளியீடும் முருகையன் அஞ்சலிக் கூட்டமும்
கொழும்பில் நடைபெற்றபொழுது இடம்பெற்ற கவியரங்கில் வாசிக்கப்பெற்றது)

---

## முட்கம்பித் தீவு - 16

படுந்துயர்கள் மாய்க்கவொரு பாதை தோன்றும்
கொடுஞ்செயல்கள் முடிந்தழியும் தேவை தோன்றும்
விடுதலைக்கு என்று ஒரு வேட்கை தோன்றும்
முடிந்தவற்றை மீளாயும் சிந்தை தோன்றும்
நடப்பவற்றை நெறிப்படுத்தும் நோக்கம் தோன்றும்
கொடியொன்று செந்நிறமாய் வானில் தோன்றும்
நடந்தவற்றில் மனம் ஒடுங்கி மாயும் நாளில்
விடியலுக்கோர் செம்மைநெறி தோன்றுமாறே.


சின்ன வயதில் சீக்காய் அடித்தபடி சீறும் வாணம் விடுவோம்
அந்திப் பொழுது வந்தால் அழகாய் பட்டம் கட்டி பறக்க விடுவோம்
விண் சுவிப் பறக்கும் பட்டத்தை கைதட்டி ஊக்குவிப்போம்
சுண்டல் கடலையை சுருளில் சுவைத்து தூர ஓடி –
கடல் மணலில் வீடு கட்டி விளையாடினோம்... அன்று

அந்தக்காலம் கரைந்தோடி ஆழிப்பேரலையாய் அடித்துச் சென்றாலும்
மலரும் நினைவாய் நினைவில் நிற்கும்
இருப்புக்கே கேள்விப் பத்திரம் கோரும் கொடுமை
எம்மக்களுக்கு. இன்று...

"எத்தனையோ வித்தகர்கள்" இடம்பெயர்ந்து விட்டார்
மற்றவையள் படுமோசமாய் கொன்று ஒழிக்கப்பட்டார்
கோரமாக படு அகோரமாக...

கட்டை வரம்பிலே கடகத்தை தாங்கி களிப்பாய்...
நடை போட்ட கார்த்திகாவோ... இன்று
கட்டாக் காலி நாய்களைப் போல சோதிக்கப்படுகிறாள்
காலி வீதியில்... என்றும்

கண்ணுக்கு குளிர்ச்சியாய் பச்சை மணம் கமழும்
செழிப்பு வயல் வெளிகள் இனியும் வருமா?
கண்ணி வெடிக்கஞ்சாமல் பிஞ்சுப் பாதத்தை தரையில் வைத்து
நீண்ட தூரம் சுதந்திரமாய்
நடை போட்ட அந்த அந்திப் பொழுது இன்றும் வருமா?
இனியும் வருமா!!!



# அந்த அந்தி நேரம் இன்றும் வருமா...?

– க. செந்தில்குமார் –

# எங்களது தெய்வங்கள்



- த. ஜெயசீலன் -


எங்கள் பிரார்த்தனைக்கு எப் பலனும் கிட்டாதா?
எங்களது வேண்டுதலுக்கு எவ் வரமும் சேராதா?
நாம் வைத்த நேர்த்திகளால் நன்மையெதும் நேராதா?
நாம் இட்ட சாபங்கள் எவையும் பலிக்காதா?
எங்களது நம்பிக்கை எல்லாம தகர்கையிலே
எங்கள் எதிர்பார்ப் பெதுவும் கை நழுவையிலே
எங்களது தெய்வங்கள் என் செய்து கொண்டுளன?
எங்களது தெய்வங்கள் ஏன் கண்ணை மூடியன?
எங்களது தெய்வங்கள் எங்களை ஏன்
கைகழுவி விட்டு...
மௌனத்துள் வீழ்ந்து உறைந்துளன?
சுட்டுப் பொசுக்கும் தொடர்துயரைச் சாய்க்காமல்
கல்லாகி எம் மீதேன் கனல் மூழவைத்துளன?
பாரா முகமாயிப் பாவிகள் துடிதுடிக்க
வேரும் கருக விழுதெல்லாம் தொடர்ந்து அற
தேரும் எரியஎம் தெய்வங்கள்...
எம் மரண ஓலத்தைக் கூடவா
உதாசீனஞ் செய்துளன?
எங்கள் பிரார்த்தனைகள்
எங்களது வேண்டுதல்கள்
எங்களது நேர்த்திகள்
எங்களது சாபங்கள்
ஒன்றுமே பலிக்காமல் ஓர் அதர்மம் சூழுதென்றால்
எங்கள் கடவுளரைப் பேய்களா ஜெயித்துளன?

# இன்னொரு ஹிரோஷிமா

**– பதுளை சேனாதிராஜா**

நூறு வருஷப் பழமையில் சயனித் திருக்கும் இந்த தோட்டப் பாடசாலை யைப்பற்றி சொல்லாவிட்டால் எப்படி? சுப் பர்மார்க்கட் போல ஒரே கூரையின் கீழ் ஐந்தாறு வகுப்புக்கள். மேசை மட்டுமே அமைந்த அதிபரின் அறை. மண்டபத் தடுப்புச்சுவர், கதவு, சாளரம் என்று ஒன்றுமே இல்லாத அந்தக் காலத்துப் பாழடைந்த மண்டபத்தை கண்முன்னே கொண்டுவரும் கைங்காரியத்தை இந்தப் பாடசாலை இதுகாறும் செய்து வருகிறது என்றால் சும்மாவா!

பாடசாலையின் கிழக்குச் சுவரின் வெளிப்புறமாக நடுப்பகுதியில் ஆயிரத்து தொளாயிரத்து ஒன்பது என்று தூக்கலாகத் தெரியும்விதமாக எழுதப்பட்டு இருக்கும். பழுத்த பலாப் பழத்தைப்போல மேற்கு சுவரிலும் கிழக்குச் சுவரிலும் கூரைப்பகுதியில் இருந்து நிலப் பகுதியை நோக்கி ஓடிவரும் வெடிப்புக்கள்.



அங்கிருந்தவர்கள் அதைப்பற்றி கவலைப்பட்டதாகவோ கண்டு கொண்டதாகவோ சரியாகத் தெரியவில்லை. வழமையான காட்சிகளில் அதுவும் ஒன்று. அவ்வளவுதான்.

பாடசாலையை மேட்டு நிலத்தில் அந்தக்காலத்து வெள்ளைக்காரன் அமைத்திருக்கிறான். கல்வி மட்டமாக இருந்தாலும் கல்விக் கூடமாவது உயரத்தில் இருக்க வேண்டும் என்று நினைத்தானோ என்னவோ. சாணத்தால் பூசிமெழுகிய அடுப்பங்கரையின் நிறத்தைப் போலவோ சுரைக்காய் முட்டியைப் போலவோ பழுப்பு நிறத்தில் சாயல் அடிக்கும் பாடசாலை. கருத்த றோட்டில் இருந்து தெற்குப்பக்கமாக சிவனொளி பாதம் கிளம்புகிற மாதிரியான படிகள், பாடசாலை எல்லை வரை நூறு மீற்றருக்கு நீண்டிருக்கும். ஆசையாக நான்கு முறை காலை எட்டி வைத்து நடந்தால் பாடசாலைச் சுவர் முகத்தில் "நச்" என்று மோத வாய்ப்பிருக்கிறது. அடுத்த பக்கத்துக்கு நடந்தால் அதைவிடக் கொடுமை. ஐந்தாறு எட்டில் பள்ளத்தில் தொப்பென்று போய் விழவேண்டியதுதான். ஆக வேறு ஒரு கட்டிடத்திற்கு அங்கு இடமேயில்லை. வேறு ஒரு இடமும் அந்த தோட்டத்தில் யாரும் தருவதாக இல்லை.

ரவி மாஸ்டர் இந்தப் பாடசாலைக்கு அதிபர். சக ஆசிரியர் ஒருவரும் அவருடன் படிப்பித்து வருகிறார். எப்போது மனக்குழப்பத்திற்கு ரவிமாஸ்டர் உள்ளாகிறாரோ அப்போதெல்லாம் பாடசாலை கட்டிடத்திற்கு பின்னால் நிலம் முடிவடையும் விளிம்பிற்கு வந்து நிற்பது அங்கிருந்தவர்களுக்கு அநேகமாகத் தெரிந்திருக்கும். அவ்விடத்திலிருந்து பத்துப் பதினைந்து நிமிட நேரம் இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருக்கும் போது மனதின் பாரம் குறையும் என்பது அவரது கணிப்பு. அன்றும் அப்படிதான் அவர் விளிம்பில் நின்றுக்கொண்டிருந்தார். இன்னும் ஒரு கிழமைக்குள் பாடசாலைக்கு வருகை தர இருக்கும் பிரபல அரசியல் பிரதிநிதியிடம் புதிய கட்டிடம் கட்டுவது பற்றிய அவசியத்தை எவ்வாறு எடுத்துரைப்பது எனும் சிந்தனையை மனதிலே குடைந்து கொண்டே கண்கள் போன அத்தனை பாதைகளிலும் பரவசமாகிப் போகும் ரம்மியத்தை ரசித்தார் அவர். நின்றிருந்த இடத்தில் யாரோ இயற்கை அழகை ஒட்டு மொத்தமாகக் கொட்டிவிட்ட பிரக்ஞை அவருக்கு அப்போது ஏற்படும். அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. பதுளை நகரத்தின் மேற்குப் புறத்தில் ஐயாயிரம் அடி உயரத்தில் அமைந்த மலைப்பகுதி அது. விளிம்பில் இருந்து பார்த்தால் மிகத் தூரத்தில் நமுனுகுல மலையின் உச்சி மட்டுமே வானத்தைக் கிழித்துக் கொண்டும் முகில்களை அப்பிக்கொண்டும் இருப்பது தெரியும். மற்ற மலைகள் இந்த பாடசாலை ஒத்த மாதிரி மட்டத்தில் தான் ரவிமாஸ்டர் நின்ற இடம்.

வானத்தில் விளிம்புக்கு வந்துவிட்டதைப்போல இருக்கும். இரண்டு திசைகளில் மளமளவென சரிந்துபோகிற பள்ளம். தலையைக் குனிந்து பார்த்தால் பரவசமும் ஒருவகை பய உணர்வும் மனதை வருடும். கண்ணுக்கு எட்டிய தூரத்தில் பெரட்டுக்களத்தில் கொட்டி விடப்பட்ட தேயிலைக் குவியல்களைப் போலவும் அசைவற்றுக்கிடக்கும் மலைகள். அதனிடையே சின்னச்சின்ன வெண் புள்ளிகளாக மின்னிக் காண்பிக்கும் நாரங்கலை, புது மலைத்தோட்ட லயங்கள், பிக்னிக்கில் தரையில் விரிக்கும் பச்சைக் கம்பளங்களைப்போல துரை பங்களாக்கள்.

மலைகளை ஊடறுத்து யாழ்ப்பாணப் போயிலை நரம்புகளைப் போல அங்கும் இங்கும் ஓடித்திரியும் மண் பாதைகள். ரௌடிகளைப்போல அலைந்து திரியும் முகில்கள். பொருளாதாரத்தை தாங்கிப் பிடிக்கும் தோட்டத் தொழிலாளர்களைப் போல வானத்தின் அத்தனை பாரத்தையும் மலைகள் தாங்கிப்பிடிப்பது வெகு தூரத்தில் எங்கேயோ எல்லையில் தெரிகிறது. "இந்த அற்புதமான இயற்கை எழிலின் ரம்மியத்தை தோட்டமக்களுக்கு இலவசமாக அனுபவிக்க கொடுத்துவிட்டு அதற்கு பரிகாரமாக ஏனைய அத்தனை சுகத்தையும் படைத்தவன் பறித்துக்

கொண்டான்'' என ரவி மாஸ்டரின் எண்ணத்தை அவரின் முகத்திலும் கைகளிலும் விழுந்த நீர் துளிகள் கலைந்தன. அவர் நின்ற திசையில் வானத்தை கண்களினால் துழாவினார். கருத்த மேகங்கள் வானத்தை நிரப்பப்பார்த்தன. இரண்டு மாதங்களாக ஒரே நாட்களைப்போல பல மாலைப்பொழுதுகள். வெயிலின் தாண்டவம் இந்த தோட்டத்தையும் தாக்கிற்று. ஐந்து நாள் வேலை நான்கு நாட்களாகக் குறைந்து போனது. மழைவந்தால் தான் சம்பளக்காசும் கூடும். அதைத்தான் எல்லோரும் எதிர்ப்பார்த்தார்கள்.

ரவி மாஸ்டர் வேறு ஒரு திசையில் இருந்தார்.

நெடிய துயரங்களை சுமந்துகொண்டு கால ஓட்டத்தின் தயார்ப்படுத்தலை நிராகரித்துக் கொண்டும் வாழும் மக்களையும் அவர்களின் கையாலாகாதத் தனத்தைப் பங்குபோட்டுக் கொண்டு ஊளையிடும் நரிகளாக நிற்கும் அரசியல் பிரதிநிதிகள். அவர்களின் எதிர்காலக் கனவுகளை கசக்கி எறியும் கடின முயற்சியில் அவர்கள் இருப்பதைத் தெரிவிக்கும் ஏகாந்தமான கண்கள் சிறந்த பாடசாலைக்கே உரியதொன்று என்பதை ரவி மாஸ்டர் நன்கு புரிந்து கொண்டிருந்தார். கோவில் சிலைகளுக்கும், கோவில் பணிகளுக்கும், மணிகளுக்குமாக அரசநிதியைச் செலவிட்டு ஏதோ சமூகப்பணியைச் செய்கிறோம் எனும் மனமகிழ்வில் நடமாடும் அவர்களை எதைக்கொண்டு தடுத்துவிடுவது என்பதே பெரிய கேள்விக்குறி தான். இந்த லட்சணத்தில் கல்வியைப் பற்றியும் பாடசாலையைப் பற்றியும் கூறினால் செவிடன் காதில் ஊதிய சங்காய் போகும் என்பது ரவி மாஸ்டருக்குத் தெரியாததல்ல. இருந்தும் சகமனிதன் மீதான அன்பும் அக்கறையும் காரணமாக அவர் எத்தனையோ அரசியல் நடத்தும் பிரதிநிதிகளையும் கல்வி அமைச்சுகளையும் சந்தித்து ஏறி இறங்கி வந்தாயிற்று. பாடசாலை ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சை பெறுபேற்றைப்போல எப்போதும் பூஜ்ஜியம்தான். பாடசாலைக் கட்டிடத்தின் அபாய நிலைக் குறித்தும், பழமை குறித்தும் புதிய கட்டிடத் தேவை குறித்தும் பேனா மை தீரும்வரை எழுதியாயிற்று. திருவிழா முடிந்த கோவிலைப் போல எவரும் அதை கவனிக்கத் தவறிவிட்டனர்.

ரவி மாஸ்டர் சக ஆசிரியருடன் லயங்களுக்கு ஏறி இறங்கினார். செருப்புகள் தேய்ந்தமாதிரி தோட்ட மக்களின் மன இறுக்கங்களும் இப்போது கரையைத் தொடங்கின. மழை வருவதற்கான அறிகுறிபோல நல்ல சகுனமாக அவை மாறிவிட்டிருந்தன.

இப்போது மழைத்துளிகள் பருத்து வருகின்றன. அவை காய்ந்த தரையில் பட்டு, தூசியைக் கிளப்பி மறைந்தும் போகின்றன. மண்வாசனை அவரின் நாசிக்கும் வருகின்றது. பாடசாலை மண்டபத்துக்குள் எட்டி நடந்தார்.

பாடசாலை மண்டபத்துக்குள் சக ஆசிரியர் பிள்ளைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர்கள் பத்துப்பேர் இருக்கலாம். ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சைக்கான விசேட மாலை வகுப்புக்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருந்தன.

உடைந்துபோன துண்டுப் பென்சில்களுடனும் தேய்ந்துபோன அழிறப்பர்களுடனும் பிள்ளைகள் போராடிக் கொண்டிருந்தார்கள்.

"என்னா புள்ளக எழுதிட்டாங்களா" ரவி மாஸ்டர் சக ஆரிசியர்களைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமா சேர்.."

"சீக்கிரம் புள்ளகள வீட்டுக்கு அனுப்பிட்டா நல்லது. மழ பெருசா பெய்யும் போல இருக்கு" என்றார் ரவி மாஸ்டர்.

"இன்னும் பத்து நிமிஷத்துல முடிஞ்சிடும்'' சக ஆசிரியர் பதிலளித்தார்.

"இல்ல... மழ பெரிசா வந்திருச்சினா இவங்களுக்கு போய்கிற முடியாது. இப்பவே அனுப்பிடுவோம்'' என்ற ரவி மாஸ்டர் பிள்ளைகளுக்குச் சொன்னார். பிள்ளைகள் சந்தோஷத்தில் விழுந்தடித்துக் கொண்டு ஓடினார்கள். அன்று அவர்க

ளுக்கு பாடசாலையில் இருந்து விடுதலை என்பது மட்டுமல்ல மழையில் நனைந்த படி வீட்டுக்கு ஓடுவது என்றால் சும்மாவா? கரும்பு தின்னக் கூலியா அந்த பிள்ளை களுக்கு!

ரவி மாஸ்டர் பிள்ளைகள் ஓடுவதைப் பரவசமாகப் பார்த்தார். இந்த பிள்ளை களுக்கு நல்லகாலம் பிறக்காதா என ஏங் கினார். அன்றைய பாடசாலையில் எஞ்சி யிருந்த வேலைகளை அவர்கள் முடித் துக் கொண்டார்கள். ரவி மாஸ்டர் வரவு இடாப்பைச் சரிபார்த்துக் கொண்டு சொன் னார்.

"இப்ப பரவாயில்ல. புள்ளக வாரது கூடிக்கிட்டே வருது. இன்னைக்கு நூத் தித்தொண்ணூறு பேரு வந்திருக்காங்க. இன்னோம் தண்ணிகான் லயத்திலயும் புள்ளகாம்புரா லய பக்கத்திலயும் ரெண்டு மூனு புள்ளக ஸ்கூலுக்கு ஒழுங்கா வார தில்லனு ராமசாமி சொன்னான். நாளைக்கு சனிக்கெழமதானே. வீட்டுக்கு காலயில வந்திடுங்க. போய் என்னானு பார்த்துகிட்டு வந்திரலாம்." என்று அவ ரின் சக ஆசிரியரிடம் சொன்னார் ரவி மாஸ்டர்.

"சரி... சேர்..." அவர் ஒப்புக்கொண டார். இதற்கிடையில் மழை பெருமெடுப் பில் பெய்யத் தொடங்கியது.

"கொஞ்சம் இருந்துட்டு போவோம்" என்றவர் ஆசுவாசமாக தனது மேசைக்கு போடப்பட்ட நாற்காலியில் உட்கார்ந்த படி நாளை நடைபெறப் போகும் விசேட வகுப்பிற்கான பாடத்தை தயார் செய்ய ஆயத்தமானார். சக ஆசிரியரும் ஏதோ செய்து கொண்டிருந்தார். பத்து பதி னைந்து நிமிட நேரம் கடந்திருக்கும். ரவி மாஸ்டர் செருப்புகளின் ஊடாக ஈரம் மிதிபடுவதை உணர்ந்து விருட்டென்று எழும்பி தரையைப் பார்த்தார். மழைநீர் மண்டபத்துக்குள் கசிந்து வருகிறது. வெடிப்புகண்ட சுவர்ப் பகுதி நனைந்து வருகின்றது. மேலே கூரையை அவர் அண்ணாந்து பார்த்தார் கூரையில் பழைய தகரத்துண்டு விலகி மழைநீர் உள்ளே புக இடம்விட்டுக் கொண்டிருக்கிறது.

சக ஆசிரியர் பதற்றமானார்.

"சேர்... மழத்தண்ணி உள்ள வருது. அதுவும் இந்த செவுருல. தகரத்த சரி செஞ்சா போச்சி" அவர் பிதற்றினார். கண்களில் பய உணர்ச்சி வெளிப்பட்டது. சலனமில்லாது மழைநீர் கசிந்து வருவதைப் பார்த்துக் கொண்டிருந்த ரவி மாஸ்டருக்கு சடாரென ஒரு யோசனை தோன்றியது.

விரைவாக தனது மேசையில் இருந்த ஆவணங்களை விருட்டென்று எடுத்துக் கொண்டார். சக ஆசிரியரை ஊடுருவும் கண்களினால் பார்த்தார். பிறகு சொன் னார். "மாஸ்டர் ஒங்கட நோட்ஸ்கள எடுத் துக்கிருங்க. நாம வீட்டுக்குப் போவோம்"

சக ஆசிரியர் மீண்டும் குழம்பி போனார்.

"சேர்... என்னா பேச்சு பேசுறீங்க. மழவருதுனு நின்னிங்க. இப்ப மழயில போகனுமுனு சொல்றீங்க. ஸ்கூல் ஒழுகுதுனா ஒன்னுமே பேசாம இருக் கிறீங்க. என்ன சேர் ஒங்களுக்கு நடந் திருச்சி" என சக ஆசிரியர் குரல் அடை படச் சொல்லிவிட்டு அதிர்ச்சியில் ஆழ்ந் தார். ரவிமாஸ்டர் ஆவணங்களைத் தனது பையில் போட்டுக் கொண்டு ஏதும் பேசாது வெளியில் விரைவாக இறங்கி நடந்தார். சுயநினைவுக்கு வந்த சக ஆசிரியர் அவரின் பின்னால் வெளியில் ஓடினார்.

* * * *

ரவிமாஸ்டரின் துணைவியார் ஆழ்ந்த நித்திரைக்குப் போய் விட்டாள். ரவி மாஸ்டருக்கு நித்திரை பிடிபடவில்லை. ஸ்தோப்பில் அந்த மூலைக்கும் இந்த மூலைக்குமாக எத்தனைதரம் போய்வந் திருப்பாரோ தெரியாது. நிகழ்வு ஒன்றுக் காய் காத்திருக்கும் அவருக்கு எப்படி இருக்கப்பிடிக்கும். ஆயிரமாயிரம் எண் ணங்கள் மனத்திரையில் இழையோடு கிறதே. அவருக்கு இப்போது வீட்டின் உள்ளேயும் இருக்கப் பிடிக்கவில்லை. முன் வாசல் கதவை படாரென்று திறந்து வெளிக்காற்றை சுவாசித்தப்படி நின்றார்.

அவருக்கு இதமாக இருந்தது. மந்திரம் போல "சோ" வென உச்சாடனம் செய்யும் மழை. "விர் விர்" என ஒலியெழுப்பி இரவிலும் தூங்காத குளிர் காற்று. ஈரத்தின் நெடி. கருநிழலைப் போர்த்திக் கொண்டிருக்கும் தேயிலை மலை. எதையுமே அவரால் ரசிக்க முடியவில்லை. எவ்வளவு நேரம் அப்படி நின்றாரோ தெரியாது. ஒரு கட்டத்தில், கதவைத் தாழிட்டு படுக்கையில் விழுந்து அப்படியே நித்திரையாகிப் போனார்.

* * * *

"எழும்புங்க... ரெண்டுமூனு பேர் ஒங்களபாக்க வந்திருக்காங்க. ஏதோ அவசரமாம்." என்ற ரவி மாஸ்டரின் துணைவியாரின் சத்தத்தில் அவர் விருட்டென்று கட்டிலில் இருந்து எழும்பி முகத்தைக் கழுவி உடைகளை மாற்றிக்கொண்டு ஸ்தோப்புக்கு வந்தார்.

அவரின் துணைவியார் அவரை தடுப்பது போல நின்றுகொண்டு சொன்னாள்.

"என்னங்க டீ குடிச்சிட்டு போங்க. என்னா ஏதும் பெரச்சனையா?"

"வந்து குடிக்கிறேன். ஸ்கூல் வச்சி அவங்களோட போயிட்டு வாரேன்" என்று கூறிக்கொண்டே ஸ்தோப்பு கதவை திறந்து வெளியில் வந்தார் ரவிமாஸ்டர்.

மழை விட்டிருந்தது. ராமசாமி, எஞ்சின் ட்ரைவர் மாரிமுத்து, இளங்கோ, ரஜனி, பிரியதர்ஷன் என ஒரு பட்டாளமே கலவரத்தோடு மாஸ்டரைப் பார்க்க நின்றிருந்தார்கள்.

"குட் மோனிங் சேர். நம்ம ஸ்கூல்ல ஒரு விசயம் நடந்து போச்சி" என்று ராமசாமி உடைந்த குரலில் சொன்னான்.

"குட் மோனிங். இன்னக்கி சொல்ல முடியாத மாதிரி என்னா நடந்திருச்சி" ரவி மாஸ்டர் இயல்பாகவே கேட்டார்.

"சேர்.....ஸ்கூல்....." இளங்கோ சொல்ல முடியாது வார்த்தைகளை இழுத்தான்.

"சரி சொல்லுங்க. என்னா அங்க நடந்திருச்சி?" என்றார் ரவி மாஸ்டர்.

ராமசாமி பதற்றத்துடன் சொன்னான் "நம்ம ஸ்கூல் செவரு ஒடைஞ்சி போய்" அவனின் குரல்வளை அடைத்து "ஸ்கூலே சரிஞ்சி போச்சி." என்றான் விம்மலோடு சுருதிபேதத்தைக் காட்டாது.

"சரி வாங்க. போய்ப் பார்ப்போம்" என்ற ரவிமாஸ்டர் வந்தவர்களை அழைத்துக்கொண்டு விரைவாக நடந்து போனார்.

"புதிய கட்டடம் கட்டித் தரச்சொல்லி எத்தனத் தரம் ஏறி இறங்கி களைச்சிப் போயிட்டேன். ஒவ்வொரு முறையும் ஏதாவது காரணத்த சொல்லி சமாளிச்சிக்கிட்டே வந்தாங்க. நம்ம ஊரு மந்திரி ஸ்கூல ஒடச்சிட்டா பெறகு புள்ளக எங்க படிக்குமுனு எங்கக்கிட்டேயே கேள்வி கேக்கிறாரு. ஸ்கூலுக்கு வேற எடம் இருந்தா அதுலயாவது எதாவது செஞ்சிருக்கலாம். இவ்வளவு காலமும் இந்த விசயமா ஒன்னும் பண்ண முடியலனு கையை கசக்கிட்டு இருந்த எனக்கு இப்படி ஒரு நல்ல நெலம வரனுமுனுதானே எதிர் பார்த்தேன். இனிச் செய்ய வேண்டிய வேலய சட்டுபுட்டுனு கெஞ்சிட வேண்டியதுதா." என ரவி மாஸ்டர் ஆழ்ந்த சிந்தனையுடன் அடுத்த கட்ட நகர்விற்கு தயாரானவர் போல நம்பிக்கையுடன் காலை எட்டி வைத்து நடந்து போகிறார்.

"டேய் மச்சான் கவனிச்சியா. மாஸ்டர் என்னா கொஞ்சமும் அலட்டிக்கிறாம வாராரு" என்றான்.

"ஆமாடா. இருந்த ஸ்கூலும் போயிருச்சேனு நாங்க எல்லாம் கத்தி கதறிக்கிட்டு கெடக்கறோம். இவரு என்னடானு ஒன்னுமே நடக்காதமாதி செம கூலா இருக்காரு" என்றான் மற்றவன்.

"இதுவர பட்ட துன்பங்களெல்லாம் போதும். இனி சரி நல்ல எடமா நல்ல ஸ்கூலா பார்த்து போயிடலாமுனு நெனைச்சி சந்தோஷப்படுராறோ என்னவோ" என்றான் இடையில் ஒருவன்.'

பின்னால் வந்தவர்களின் சம்பாஷனைகள் ரவி மாஸ்டருக்கு கேட்கவில்லை என்று யார் சொன்னது? (நிறைவு)

# பித்தராய் அலைகின்றார்

- புசல்லாவை குறிஞ்சிநாடன்

நெஞ்சமதும் பதைபதைக்க
நெடுமூச்சும் சுட்டெரிக்க
பிஞ்சுஇளம் மொட்டுக்களை
பித்துமனம் கொண்டவர்கள்
நெஞ்சினிலே ஈவிரக்கம்
எள்ளளவும் இல்லாத
வஞ்சகரும் பாலர்களை
வதைத்துமே கொல்கின்றார்

நெஞ்சத்துள் கனவுகளை
நெடுநாளாய்த் தேக்கிவைத்து
பஞ்சத்தில் வருந்திடினும்
பக்குவமாய் மதலைகளை
நெஞ்சத்தில் சுமந்தவரும்
நேசமாய் வளர்த்தின்று
பிஞ்சுகளைப் பறிகொடுத்து
பித்தர்களாய் அலைகின்றார்.

பணவெறியால் கூத்தாடும்
பயங்கரப் பேய்களிங்கு
குணம்கெட்டுக் கொல்லையராய்
கொடும்பாவம் புரிகின்றார்
கணமேயும் இவர்செயலைப்
பொறுத்திடுதல் நலமென்று
துணைவேண்டாம் புறப்படுவீர்
தொல்லையரைத் தொலைப்பதற்கு



கழுத்தினையும் முறித்தவர்கள்
பாழ்ங்கிணற்றில் எறிந்துவிட்டு
எளிதாகத் தப்பிவிட்டார்
எதற்குமொரு சாட்சியில்லை
அழுதழுது அரட்டுகின்ற
அன்னையரின் பேரொலியை
எழுத்தினால் வடித்திடவோ
இங்கெவர்க்கும் முடியாது


நீதிக்காய்ப் போராடும்
நிலைகுலைந்த அன்னையரும்
சாதித்து வெற்றிபெற
தயங்காமல் எல்லோரும்
சேதிக்க எழுகவென
செந்தமிழின் இளைஞர்களை
வீதிக்கு அழைக்கின்ற
வீரவுரை மறுத்திடவோ?

# தமிழ்த் துரோகி எண்டா என்ன?

- ஆதவா அ. சிந்தாமணி -

நான் சின்னப் பொடியனா இருக்கிற காலத்திலை கேள்விப்படாத சொல்லுகளையெல்லாம் கொஞ்சம் வளந்ததுக்குப் பிறகு தான் அடிக்கடி கேள்விப்படத் துவங்கினன். அப்பிடி, முதலிலை "தமிழ்த்துரோகி" எண்டு ஒண்டு வந்துது. தமிழுக்கு எப்பிடித் துரோகம் பண்ணேலும் எண்டு எனக்கு விளங்கேல்லை. அந்த நேரத் திலை கேட்டு விசாரிக்கிற மாதிரியான வாத்தி மாரும் ஊரிலை இல்லை. எல்லாரையும் இட மாற்றம் பண்ணிப் போட டினை.

வேதாள சிங்கன் இருந்திருந்தால் அவனிட்டைக் கேட்டிருக்கேலும். அவனும் ஊரிலை இல்லை. நானா யோசிச்சு ஒரு முடிவுக்கு வரப் பாத்தன். அந்த நாளையிலை சுதந்திரன் எண்டு ஒரு பேப்பர் ஒவ்வொரு கிழமையும் வரும். ராசசிங்கம் மாமா எண்டு எங்கடை அயலிலை இருக்கிறவர் ஒழுங்கா வாங்குவார். முன் பக்கம், அடியிலை தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைக் குரல் எண்டு போட்டிருக்கும். அதிலை தமிழ்த் துரோகியளைப் பற்றிப் பல மாதிரியும் ஏசி எழுதுவினம். அதிலை சிங்களம் படிக்கிறவையைத் தமிழ்த் துரோகியள் எண்டு கிடந்துது. அப்ப இங்கிலிஸ் படிக்கிறவை தமிழ்த் துரோகியள் இல்லையா? எண்டு ராசசிங்கம் மாமாவைக் கேட்டன். அவர் இங்கிலிஸ்காரரர் எங்கடை சினேகிதர் எண்ட படியாலை இங்கிலிஸ் படிக்கிறது பிழையில்லை. சிங்களவர் எதிரியள் எண்டதாலை சிங்களம் படிக்கிறது தமிழ்த் துரோகம் எண்டார். பிறகு ஒரு நாள் சிங்களம் படியாதை எண்டு சொன்ன ஒரு



தலைவரின்டை மகள் சிங்களம் படிச்சு நல்ல உத்தியோகத்திலை இருக்கிறா எண்டு ஒரு கூட்டத்திலை யாரோ சொன்னதைக் கேட்டு ராசசிங்கம் மாமாவிட்டை அது தமிழ்த் துரோகமா எண்டு கேட்டன். என்டை அடுத்த கேள்வி என்னவாயிருக்கும் எண்டு அவருக்கு விளங்கி யிருக்குமாக்கும். "போ, போ. நீ சின்னப் பெடியன். உனக்கு உதெல்லாம் விளங்காது" எண்டு என்னைக் கழட்டிப் போட்டார்.

இந்தப் பாளிமென்ற் இலக்சன் வந்தால் தமிழ்த் துரோகி எண்ட சொல்லு இல்லாமை யாராலையுங் கதைக்க ஏலாது - கொம்யூனிஸ்ற் காறரை விட. ஏனெண்டால் அவை தான் தமிழ்த் துரோகியள் எண்டு மற்றவை சொல்லுகிறதாலை யாக்கும். எதை வைச்சு ஆரையுந் தமிழ்த் துரோகி எண்டு சொல்லுகினை எண்டு எனக்கு அப்பவும் விளங்கேல்லை. இப்பவும் விளங் கேல்லை. யோசிச்சுப் பார்த்தாத், தங்களுக்கு மாறாக் கதைக்கிறவையையும் இலக்சனிலை வோட்டுப் போடுகிறவையையும் தமிழ்த் துரோகியள் எண்டு சொல்லலாம் எண்டும் விளங்கிச்சுது. நிச்சயமில்லை. பிறகு பிறகு ஆரும் ஆரையும் தமிழ்த் துரோகி எண்டு சொல்லலாம் எண்டு நிலைமையள் மாறிப் போட்டுது.

ஒரு காலத்திலை தமிழ்த் துரோகி எண்டு ஆரையும் ஏசுகிறது ஆக மிஞ்சினாத் தூசணத் தாலை ஏசுகிற மாதிரியாத் தான் இருந்தது. கடு மையான கோவத்திலை பாவிக்கிற ஒரு ஒரு சொல்லு மாதிரி. பிறகு பிறகு தமிழ்த் துரோகி எண்டு சொல்லுகிறது, கோட்டு வீட்டிலை நீதவான் குற்றவாளியெண்டு சொல்லுகிற மாதிரியாப் போச்சுது.

எங்கடை அரசியல் நீதவான்மார் பொது மேடையிலை ஏறி நிண்டு ஆரையேன் தமிழ்த் துரோகி எண்டு சொல்லுவினை. பிறகு அவை சொன்னதின்டை கருத்து தமிழ்த் துரோகிக்கு மரண தண்டனை வழங்குகிறது தான் சரி எண்ட மாதிரி, ஆவேசம் வந்த யாராவது போய்ச் சாக்கொண்டு போடுவினை.

இப்பிடித்தான் எங்கடை தலைவர் மாரிலை ஒருத்தர், இலக்சன் தோத்த கொதியிலை மற்றக் கட்சியிலை வெண்டு தங்களுக்கு மாறான பக்கம் நிண்டவை சிலபேரின்டை பேரைச் சொல்லி இன்னார் இன்னாருக்கெல்லாம் இயற்கையான சாவு வரக் கூடாது எண்டு சனங்களுக்கு நடு விலை நேத்திக்கடன் வைச்சுப் போட்டார். அதைச் சாமி செய்து வைக்குமோ என்னவோ சண்டியர் செய்து வைப்பினை தானே. அப்பிடிக் கன பேரை மாறிமாறிச் சாக்கொண்டு போட்டி னம். பிறகு, இயற்கையான சாவுக்குத் தடை விதிச்ச தலைவருக்கும் இயற்கையான சாவு இல்லாமப் போட்டுது.

அதன் பிறகு சமூக விரோதி எண்டு ஒண்டு வந்துது. அந்த இயக்கம் இந்த இயக்கம் எண்டு சொல்லிக் கோயில் வழியையும் சங்கக்கடை வழியையும் வங்கியளிலையும் கொள்ளையடிக் கிற இயக்கக்காறர் கோழி களவெடுத்தவனையும் வாழைக்குலையை வெட்டினவனையுங் கொண்டு போய்ச் சமூக விரோதி எண்டு சாக் கொண்டு போட்டு விளக்குக் கம்பத்திலை தொங் கப் போடுவினை. இதையெல்லாம் பிழை யெண்டு நினைச்சாலும் ஆரும் வெளியிலை கதையாயினை. கதைச்சால் அவையும் தமிழ்த் துரோகியளாகுவினை. இல்லாட்டிச் சமூக விரோ திகளாவினை. பேந்து, அவைக்காகக் கதைக்க ஆரும் இராயினை. அவையுமே இருக்க மாட்டினை.

எங்களின்டை தமிழ்ப் பற்று இப்பிடியெல்லாம் வளந்து வளந்து கடைசியிலை ஒரு இயக்கக் காறர் மற்ற இயக்கக்காறரையும் இயக்கங்களுக் குள்ளையும் ஆளையாள் சாக்கொல்லுகிற அள வுக்கு வந்து விட்டுது. பாவிக்கா விட்டாத் துவக்குக் கறள் கட்டிப் போமெண்டு தான் ஆக்களைச் சுட்டுத் தள்ளுகினமோ எண்டு நினைக்கிற அளவுக்குப் போய், இண்டைக்குத் தமிழ்ச்சனம் இருக்கிற நிலவரத்தை யோசிச்சுப் பாத்தா அழுகை அழுகையா வரும்.

எண்டாலும் இண்டைக்குத் தன்னும் என்ன பிழையாப் போச்செண்டு யோசிச்சு முன்னேறு றதுக்கு வழியைத் தேடாமை அவையின்டை துரோகம் இவையின்டை துரோகம் எண்டு தான் கதை நடக்குது. பிறகு துரோகஞ் செய்தவை எண்டு சொல்லுகிற ஆக்களுக்குப் பின்னாலை இன்னொருக்கால் ஓடுகிற வேலையும் நடக்குது.

ஈரானிலை கொமெய்னி எண்டு முந்தி இருந்த ஒரு தலைவர் எங்கடை ஆக்களிட்டை இருந்து தான் படிச்சிருக்க வேணும். அவர் 'பத்துவா' எண்டு சொல்லி ஒரு கட்டளை போட் டாப் போட்டது தான். அவர் செத்துப் போனாலும் அவர் போட்ட கட்டளை சாகாது. அவர் விதிச்ச தண்டனையை அவரின்டை ஆக்களிலை ஆரேன் ஒப்பேத்துகிற ஒரு புனிதக் கடமையைச் செய்கிற மாதிரி.

எங்களின்டை கடவுள்மாரும் இப்பிடித்தான். முனிவர்மாரும் இப்பிடித்தான். சாபம் போட்டாப் போட்டது தான். தப்புகிறதுக்கு வழி கிடையாது.

தமிழ்ச் சனத்துக்கு ஆர் போட்ட சாபமோ தெரியாது. இப்பிடி ஆளையாள் நாசமாக்கி ஏன் அழியுது எண்டு விளங்கேல்லை.

துரோகி எண்டு சொல்லி ஒருத்தரை அழிக்கிற அதிகாரத்தை ஒவ்வொருத்தரும் தங் கடை தங்கடை கையிலை எடுத்துக் கொண்டாக், கடைசியிலை ஒருத்தரும் மிஞ்ச மாட்டம். இல்லையா, இனியேன் ஆரையும் இந்த மாதிரித் துரோகி, சமூக விரோதிப் பட்டஞ் சூட்ட முன்னம் ஆர் என்ன செய்தினம், செய்ததுக்கு என்ன ஆதாரம், அதைப் பற்றிச் சனம் என்ன சொல்லுது எண்டு வெளிவெளியாப் பேசுகிறதுக்கும் பேசி முடிவெடுக்கிறதுக்கும் நாங்கள் பழக வேணும் எண்டு நினைக்கிறன்.

அநியாயமா ஒரு உயிரைக் கொல்லுகிறது லேசான காரியம். முன்பின் யோசியாமைக் கொண்ட பிறகு செத்தவையைத் திரும்பக் கொண்டு வர ஏலுமா? என்ன சொல்லுறியள்?

## முட்கம்பித் தீவு - 13

தப்பிச் செல்லுவது இயலாததல்ல
செலவிடப் பணமும் செல்வாக்கும்
இருந்தால் ஒரு வழி,
இல்லாவிட்டால் இன்னொரு வழி.
ஒன்று மண்வழி.
மற்றது விண்வழி.

## முட்கம்பித் தீவு - 14

குற்றஞ் செய்தவர்கள்
சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி விடுகிறார்கள்
குற்றஞ் சாட்டப்பட்டவர்கள்
பிணையில் விடுவிக்கப் படுகிறார்கள்
சந்தேக நபர்கள், சிலரேனும்,
நீதிமன்றால் விடுவிக்கப்படுகிறார்கள்
சந்தேகிக்க நியாயமே இல்லாதவர்கள்
முட்கம்பித் தீவிற் குடியமர்த்தப்படுகிறார்கள்.

## முட்கம்பித் தீவு - 15

கொடுவெயிலும் சுடுமணலுந்
தோன்றும் தோன்றும்
கொடுங்கோலர் கொலை வெறியும்
கண்முன் தோன்றும்
வெடியோடும் மிதிவெடியும்
சிதறல் தோன்றும்
கடிதாக விரையேவு
கணைகள் தோன்றும்
படுகொலைகள் துயில்கலைக்கும்
கனவும் தோன்றும்
துடிதுடிப்பும் பரிதவிப்பும்
நிதமுந் தோன்றும்
கடுமழையின் புதைசேற்றில்
அமிழும் நாளும்
முடிவின்றி ராப்பகலும் தோன்றுமாறே

ஆச்சிரமம் போன்ற, அந்தச் சின்னஞ்சிறு வீட்டின், நிழல்களிடையே கரை ஒதுங்கி மறைந்து போன, முழுவதும் பெருமையிழந்து மனம் வாடுகிற ஒரு தனிமனிதனைப் போல, இன்னும் நந்தன் அந்த மூலையிலே முடங்கிக் கிடந்தான். முன் வராந்தா மூலையிலே, ஒரு பழைய கிழட்டு வாங்கு. அது கூட அப்பாவின் சொத்துத் தான். இப்படி ஒவ்வொரு நிலையிலுமே, வாழ்வைப் பெறுமதி மிக்கதாய், கட்டிக் காக்க முடியாமல் போன அவனது இயலாமையும், கையாலாகாமல் இருக்கிற புருஷலட்சணமிழந்த வெறுமை நிலையும் சமூக தனிமனித பார்வையில் அப்பட்டமாகவே பிடிபடும்.

அப்படிப் பிடிபடுவதாலோ என்னவோ, அவன் முன்னால் பரந்து விரிந்து வியாபித்துக் கிடக்கும் சமூக மேடையில், ஒளி கொண்டு கைவீசி நடக்கும் கம்பீர புருஷனாய் நெஞ்சு நிமிர்த்தித் தலை உயர்த்திப் போகிற பாக்கியம், அவனுக்கு இன்று வரை கிட்டவில்லை. இப்படி இயல்பாக வரக் கூடிய முன்வினைப் பூர்வ புண்ணிய பலன்கள் குறித்து அதற்காக இப்போது சிலுவை சுமந்து வருந்துவதில் பலனில்லை என்று அவனுக்குப்படும். அதுகூட அவன் தூக்கிய சிலுவையல்ல.



# யாருக்காக அழுதாள்?

– ஆனந்தி

காலை கண்விழிக்கிற சமயத்தில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை, சூரியனின் இருள் படியாத ஒளிக் கதிர்களினூடே பார்க்கும் திசையெல்லாம், வாழ்கிற வாழ்ந்து சிறக்கிற மனிதர்களின் ஒளிச்சுவடுகள் கண்ட பசுமைக் காட்சி தான். அவனால் அப்படி இருக்க முடியாமல் போனதற்காக அவன் மீது கல்லெறியத் துணிந்ததே இந்தச் சமூகம்.

அவனுக்குப் பிறவியிலேயே, இடது கண்ணில் சற்றுக் குறைபாடுண்டு. வலது கண்ணை விடச் சற்றுச் சிறியதாய் பார்க்கும் போது, அரைவாக்கு மாதிரித் தெரியும். இதனால் முகமும் சற்று விகாரமுற்றது போல், களையிழந்து தோன்றும். அவனை இதற்காகவே கல்லெறிந்து துரத்த, வரிந்து கட்டிக் கொண்டு சமூகத்தில் தனியாக ஒரு கூட்டமே காத்திருந்தது. இந்தக் குறைபாடு காரணமாக அவனுக்கு ஒன்றரைக் கண்ணென்ற பட்டம் வேறு. இந்தப் பட்டத்தையே நக்கல் மொழியாகப் பெசி, அவர்கள் பகிடி பண்ணி வக்கணையாகப் பேச நேர்ந்ததாலே உலகின் கண்களில் விழிக்க அஞ்சித்தான் அவன் தினமும் கரை ஒதுங்கிப் போன ஒரு தனிமனிதனாக வீட்டில் அடைபட்டுப் கிடக்கிறான்.

எப்படியோ இக் குரூரமான கல்லெறிகளுக்கெல்லாம் முகம் கொடுத்துத் தப்பிப் பிழைத்து பத்தாம் வகுப்பு வரை பாஸ் செய்துவிட்டு, அரச பணிமனை ஒன்றில் பியூனாகப் பணி புரிந்தான். விளைவாகப் பென்ஷன் எடுத்துக் கொண்டு அவனது கடைசிக் காலம் வீட்டிலேயே ஒரு சிறைக் கைதி போல இப்படிக் கழிந்து போகிறது. அவன் செய்த புண்ணியமோ என்னவோ அவனின் குறையைப் பொருட்படுத்தாது அவனை மனப்பூர்வமாகக் கணவனாக ஏற்றுக் கொண்டு வாழ வைக்கவும் இப்படி ஒரு பெண். மங்கை என்று பெயர். குழைந்து குழைந்து இனிமை சொட்டப் பேசுகிற மிக மென்மையான சுபாவம் அவளுக்கு. அவனின் குறைபாடு அவளுக்குப் பெரிதாகப்படுவதில்லை. பரஸ்பரம் அவனோடு ஒன்றுபட்டு ஒவ்வொரு சமயமும் அப்பழுக்கற்ற அவளின் மனதிலிருந்து பெருகி வழிகிற அன்பு மழையில் நனைந்து அவன் வெகுவாகப் புல்லரித்து மெய் மறந்து போய்விடுகிறான்.

அவனது இருள் படிந்த வாழ்வில் அவனுக்குக் கிடைத்த மிகப் பெரிய ஆறுதல் இது ஒன்று தான். மங்கையுடனான அந்தத் தாம்பத்திய உறவின் புனிதத்தினால் தன் வாழ்வின் கறை போகக் கங்கையில் குளித்து மீண்டு வந்திருக்கிற மாதிரி இவ்வளவு சலனங்களுக்கு நடுவிலும் ஒரு சிறிய மனத்திருப்தி அவனுக்கு. ஊரிலே எவர் வீட்டில் என்ன கொண்டாட்டம் நடந்தாலும் அவன் போக மாட்டான்.அவன் சார்பாக மங்கையே தனியாகப் போய்வருவாள்.

கோவில் திருவிழா வந்து ஊரே ஒன்று திரண்டு கூடிக் களிக்கையில் அதைக் கூடப் புறம் தள்ளி மறந்துவிட்டு ஒரு நித்திய சிறைக் கைதி போல அவன் தனியாக வீட்டிலேயே அடைந்து கிடப்பான். மிகச் சின்ன வயதில் கோவில் படியேறிப் போன வெறும் ஞாபகச் சுவடு மட்டுந்தான் இப்போது அவனுக்கு. ஆனால் மங்கையோ இதற்கெல்லாம் விதிவிலக்காய் இந்தக் கோவில் வழிபாடு பூசை தொண்டு என்பவற்றில் முற்று முழுதாகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டு விட்ட ஒரு தபஸ்வினி மாதிரியே இப்போது அவள் இருக்கிறாள்.

அவனைக் கட்டிக் கொண்டு விட்ட பாவத்திற்காகத் தோலுரித்து, வறுத்தெடுக்கிற பாவிகளிலான உலகம் ஒருபுறம். அதைவிட்டு நீங்க விரும்பியே அவள் தேடிக் கொண்டிருக்கிற சாந்தி பரிகாரமான இந்த இறை உலகம். மாலையாகி விட்டால் போதும். வீட்டிற்கு மிக அண்மையில் இருக்கிற பிள்ளையார் கோவிலிலிருந்து ரீங்காரமாக விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருக்கிற அகன்ற மணியோசையே அவளை எழுப்பி விடும். அதன் பிறகு அவளுக்கு வீட்டில் இருப்புக் கொள்ளாது. தொண்டு செய்ய அவசரம் அவசரமாகப் புறப்பட்டு விடுவாள். ஒரு தினம் அவள் அப்படிப் புறப்படும் போது தான் வழக்கத்திற்கு மாறாகக் குரலை உயர்த்தி அவன் கேட்டான்.

"நில் மங்கை. நானும் வாறனே!"

அவள் இதை எதிர்பார்க்கவில்லை. வழக்கமாக ஜன்னலடியில் மாலை வெய்யில் குளித்தபடி அவன் அந்த வாங்கிலேயே சரிந்து கிடப்பான். கோவில் பக்கமே தலை வைத்துப் படுப்பதில்லை. இன்று என்ன இப்படிக் கேட்கிறான். கூடவே அவள் வந்தால் என்ன நடக்கும்? அவன் மீது விழுகிற கல்லெறியில், அவளின் தலையும் போகும். அதை அவன் விரும்புகிறானா? விரும்புகிறதென்றால், நடக்கட்டும். எனக்கென்ன வந்தது? எல்லாம் கடவுள் சித்தம்.

திடீரென்று ஏதோ நினைத்துக் கொண்டு மனம் அவதியுற்று, அவள் கேட்டாள்.

"கோவிலுக்கு வாற ஆட்கள் சும்மா இருப்பினமென்று, நீங்கள் நம்புகிறியளே?"

"அதை விடு" என்றான் அவன் மேலோட்டமாக. அவளுக்குப் புரிந்தது. நன்மை தீமையென்பது இறைவன் வசம். தான் இதற்குப் பொறுப்பில்லை என்று அவன் எண்ணுகிறானா? அப்படி எண்ண முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அவள் அதையே மனதில் உருப்போட்டு எண்ணியவாறு, கண்கள் புல்லரிக்க எதுவும் பேசவராமல் அவனை ஏறிட்டு நோக்கினாள்.

இப்போது அவன் சாரத்திலிருந்து வெள்ளை வேட்டி உடுத்து முற்றாக மாறிவிட்ட ஒரு பளிங்கு மனிதன் போல், அவளின் பார்வையில் ஒளிர்ந்தான். அதில் மாற்றம் நேராது போல் தோன்றவே, அவனோடு தோள் சேர்ந்தவாறே, அவள் கோவிலுக்குப் போக நேர்ந்தது. அவள் கூட்டும் போது கூடவே குப்பை அள்ளி அவனும் ஒத்தாசை செய்தான். இனி இதுவே அவனின் நிலைப்பாடாகும். சின்ன வயதில் பார்த்த கோவில் தான்.

அந்தக் கோவில் மண்டபத்தில் இருந்து கொண்டு தன்னை மறந்து புராணபடனம் கேட்கும் அம்மா மடியில் படுத்தபடி தூங்கிய ஞாபகம் இன்னும் அவனுக்கு மறக்கவில்லை. ஆனால் கோவில்தான் மாறிவிட்டது. செப்பனிடாமலே, களையிழந்து கிடக்கிறது. மடப்பள்ளி வேறு, இடிந்துவிழும் தறுவாயில் இருக்கிறது. இதையெல்லாம் புதிதாகப் புதுப்பித்து, புனருத்தாரணம் செய்து, கும்பாபிஷேகம் செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். இந்தத் திருப்பணியை நானும் மங்கையுமாக முன்னின்று செய்தாலென்ன. நான் செய்வதாக அறிந்தால், ஊர் சும்மா விடுமே. வெளிப்படையாக ஒரு புதுமனிதனாக இதைச் செய்வதற்காக மனம் துணிந்து நான் வெளிக்கிட்டால் என் கழுத்துக்கு விழப் போறது மாலைகளல்ல. கல்லெறிகள் தான். விழட்டுமே.

அவன் துணிந்து விட்டான். மங்கையை முன்னிறுத்தி அவன் விரும்பியபடியே எல்லாக் காரியங்களும் பக்தி சிரத்தையோடு துரிதமாக நடந்தேறின. இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்று உள்ளூரிலும், வெளிநாட்டிலும் பணம் திரட்டி அவர்கள் இருவருமாகப் பாடுபட்டு உழைத்து அழகாக அவர்கள் கட்டி முடித்த கோவிலும் மடப்பள்ளியும் என்ன அழகானவொரு தெய்வீகக் களையுடன் தலை நிமிர்ந்து நிற்கின்றன. இதற்கெல்லாம் ஆரம்பப்புள்ளி போட்டவனே அவன்தான். மங்கைக்குத் தான் இதில் எவ்வளவு பெரிய மகிழ்ச்சி. அவனுக்கு மட்டுமென்ன சந்தோஷத் தேர் ஏறிப் போகாத குறைதான். ஆனால் மனதளவில் இப்போது கண்டிருப்பது வெறும் மாயையாய் கிடைக்கிற அற்ப சந்தோஷமல்ல. அதற்கும் மேலான பூரண ஆத்ம சாந்தியே பெற்றது போல் முழுவதும் சந்தோஷமயமான ஒளி உலகமல்லவா. இப்போது அவனுள் கண் மலர்ந்திருக்கிறது.

பாவம் அவன். அந்தச் சின்னஞ்சிறு வீடே கதியென்று கிடந்தவன், இப்போது இந்தக் கோவில் காரியமென்ற நற்பணியினால் பறப்பதற்குச் செக்கவ்செவேரென்று ஒளி பிரகாசிக்கின்ற இரு பொன்னிறக்கைகளோடு என்னமாய் மிளிர்கிறான். இதைக் கண் நிறையத் தரிசித்து உச்சி குளிர்ந்த மகிழ்ச்சி மங்கை ஒருத்திக்கு மட்டுந்தான். அவன் கண்ட கனவின்படி மடப்பள்ளியே அழகிய மாளிகை போலாகி எல்லாவற்றுக்குமாக வருகிற மாதம் தான் கும்பாபிஷேகமென்று தீர்மானமாகியுள்ளது. அதற்குள் இப்படியொரு

விபரீத நிலை வருமென்று யார் கண்டார்கள்.

அவனுக்கு முன்னதாகவே திருத்தொண்டு செய்ய ஒரு நாள் மாலை நேரம் கோவிலுக்குப் போன மங்கை பதறியடித்துக் கொண்டு திரும்பி வந்திருக்கிறாள். அதைப் பொருட்படுத்தாமல் அவனும் கோவிலுக்குப் போக ஆயத்தமாகி வெளியே வரும் போது, அவனை வழி மறித்தபடி அவள் ஆவேசமும் அழுகையுமாக உணர்ச்சியில் கரைந்து போய் நின்றிருந்தாள்.

"நீங்கள் இனிமேல் கோவிலுக்கு வர வேண்டாம். அதையும் மீறி வந்தால் அந்தப் பாவிகள் சொன்னதெல்லாம் நிஜமாகி விடுமே! இதற்காகவா நாங்கள் கோவில் கட்டினது? சொல்லுங்கோ?"

அவள் கதறிக் கதறிக் கூறுவதையெல்லாம் உணர்ச்சி மரத்துக் கேட்டபடி அவன் உறைந்து போய் நின்றிருந்தான். அவள் யாருக்காக அழுகிறாளென்று பிடிபடாமல் அவனுள் மௌனம் கனத்தது. நிச்சயம் இது அவனுக்காகத் தான். அவளது இந்த மிகப் பெரிய அழுகை அவன் பொருட்டுத் தான். அந்த அழுகை வெள்ளத்தில் மூழ்கி அலை அடித்துக் கொண்டு போவது போல் அவனும் திணறினான்.

மனிதர்கள் எவ்வளவோ விடயங்களுக்காக முட்டி மோதி அடித்துக் கொள்வார்கள். அது வாழ்வுக்காக வாழ்வு பற்றிய வரட்டுப் போக்குக்காகவே. அந்த மோதல்களும் ரணங்களும் ஏன் சாவுகளும் கூட.

ஆனால் இது அப்படியில்லையே. வாழ்க்கையென்ற அந்த மாயையை விட்டு விலகி வந்தே நந்தன் தனியொரு மனிதனாய் நின்று, முழுக் கோவிலுக்குமாகத் தன்னை அர்ப்பணித்து உழைத்திருக்கிறான். ஊரால் தூக்கி யெறியப்பட்டுத் துவம்சம் செய்யப்பட்டு விட்ட ஒரு பாவப்பட்ட மனிதன் போல் இருந்த அவனை, மலர் மேடையில் தூக்கி வைத்துக் காயங்கள் ஆறவும் பூரண ஒளியில் கண் விழிக்கவும் ஓர் சாந்தி பரிகாரமாகவல்லவா இது நடந்தேறியது. ஆனால் உலகம் அப்படிச் சொல்லவில்லையே. அப்படியானால் என்ன சொன்னது? இது மங்கையே அறிந்து கொண்ட ரகசியம். அவனுக்குத் தெரியவில்லை.

அவன் இன்னும் ஏகப் பரப்பான வீடு என்ற அந்த மாய நிழலில் ஒதுங்கி வெகுவாக நிம்மதியிழந்து நின்று கொண்டிருந்தான். மங்கையின் அழுகை வெள்ளம் அவனின் காலுக் கடியில். பொறுமையிழந்து அவன் கேட்டான்.

"சொல்லு மங்கை! என்ன நடந்தது?"

அவள் அழுகையினிடையே குரல் கம்பிக் கூறினாள்.

"அவையள் சொல்லுகினம். இதெல்லாம் நாங்கள் குடியேறத்தானாம் இப்படிக் கோவில் கட்டினது, மடப்பள்ளி திருத்தினது எல்லாம்"

அவனுக்கு அதைக் கேட்டு மூச்சு நின்று போனது. அது இதற்காகவா என்று. அடித்து அடித்து அவர்களை அந்தப் பாவிகளைக் கேட்க வேண்டும் போல் ஆவேசம் வந்தது.

இங்கு நல்ல வீடு வாசல் குடும்பமென்று உச்ச நிலையில் சமூக அந்தஸ்து பெற்றுக் கொடி கட்டிப் பறக்கிற வாழக் கொடுத்து வைத்த மனிதர்கள் போலில்லாமல் ஒரு சிறிய மண் குடிசை போன்ற வீட்டில் அவன் ஒரு வெறும் மனிதனாய் இருக்க நேர்ந்ததன் விளைவாகவே தன்மீது இந்தக் கல்லெறி விழுவதாக அவன் ஆழ்நத மனவருத்தத்தோடு நினைவு கூர்ந்தான். அதிலும் அவன் வீடு மட்டும் இதற்குக் காரண மல்ல. உடம்பிலேயே ஊனத்தைச் சுமக்கும் தான் ஒரு குறைப்பிறவி என்பதாலும் இது நடந்திருக்கலாமென்று அவனுக்குப் பட்டது.


அவர்களின் இவ்வாறான விபரீத கற்பனைகளுடன் கூடிய மனதில் புகைகின்ற வயித்தெரிச்சல் என்ற அக்கினி குண்டத்தில் விழுந்து, மனசளவில் காயப்பட்டு வருந்தி அழுகிற மங்கையினது இந்த வெள்ளத்தில் மூழ்கி தானும் அலை அடித்து அள்ளுண்டு போகிற சிறு துரும்பாய் உணர்விழந்து நிற்பதாக அவனுக்கும் பிரமை தட்டிற்று.

மங்கையும் தானுமாகக் குடியேறவே இந்த இறைபணியை நிறைவேற்றியிருப்பதாகப் பேசப் புறப்பட்ட அம்மனிதர்களினது பொய்யின் கறை குடித்த குரூர வார்த்தைகளின் பாவத் தீட்டுப் போக இப்போது அவன் முன்னால் தன்னை மறந்து அழுகிற மங்கையின் மனதிலிருந்து பெருகிவழியும் கண்ணீர் நதியே போதுமென அவன் பெரும் மனவருத்தத்தோடு நினைவு கூர்ந்தான். அவனது திடுமென்ற நேர்ந்த இந்த ஆலய வழிபாடும் இறை தொண்டும் அவனுக்கொரு சாந்தி பரிகாரமாகவே அவர்கள் வாழ்வில் நடந்தேறின. இப்படியெல்லாமான பிறகு. குறைகள் தீர்ந்த ஒரு மனிதன் போல் அவன் முகத்தில் தான் துயரம் ஒழிந்து போன என்னவொரு தெய்வீகச் சிரிப்பும் களையும்.


இந்தக் கனவு கூடப் பாவிகளுக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறதென்றால் மனம் கதறி அழாமல் வேறென்ன செய்வாள் மங்கை என்ற இந்தப் பேதை. அவள் யாருக்காக அழுகிறாள்? கடவுளுக்கே வெளிச்சம்.

**யாவும் கற்பனை.**

"எங்களுடன் இன்னமும் வாழும் மாவை வரோதயன்" என்ற பெயரில் மாவை வரோதயனின் நினைவு மலர் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையில் அண்மையில் வெளியிடப்பட்டது. அதில் மாவை வரோதயன் பற்றிய அஞ்சலிக் குறிப்புக்களும் மாவை வரோதயன் பற்றிய கவிதாஞ்சலிகளும் மாவை வரோதயனின் ஆக்கங்களும் இடம்பெற்றுள்ளன. இந் நினைவு மலரைப் பெற விரும்புவோர் தலைமைப் பணிமனையில் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.




தலைமைப் பணிமனை
தேசிய கலை இலக்கியப் பேரவை
571/15, காலி வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு - 06. தொ.பே. - 0112381603




" முருகையன் என்னும் முடியா நெடும் பகல்" என்ற பெயரில் மக்கள் கவிஞர் இ.முருகையனின் நினைவு மலர் கொழும்பில் அண்மையில் வெளியிடப்பட்டது. அதில் இ.முருகையன் பற்றிய அஞ்சலிக் குறிப்புக்களும் முருகையன் பற்றிய கவிதாஞ்சலிகளும் முருகையனின் படைப்புக்கள் சிலவும் இடம்பெற்றுள்ளன. இந் நினைவு மலரைப் பெற விரும்புவோர் தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைமைப் பணிமனையில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.



# செந்நீரும் கண்ணீரும்...

'சமரபாகு' சீனா - உதயகுமார்

மயில்வாகனத்தாரின் மனம் உருக் குலைந்து சின்னாபின்னமாகி இருந்தது. அவர் மனச் சுமைகள் கனமானவை என் பதை இருண்டு கிடந்த அவரது முகம் வலு துல்லியமாகக் காட்டியது. நல்ல சாப்பாடு சாப்பிட்டு இன்றோடு ஒரு மாதத்திற்கும் மேலாகிவிட்டது. அவர் மட்டுமா? அவரு டன் அவர் மனைவி மோகனம்பாளும் தான்.

மயில்வாகனத்தாரும் மோகனம்பாளும் நினைத்திருந்தால் வாழ்வின் உச்ச சுதியைப் பிடித்து வாழ்ந்திருக்கலாம். மயில்வாகனத் தார் ஒரு சுயநலக்காரனாக இருந்திருந்தால் அப்படி வாழ்ந்திருப்பார். அவரது சிந்தனை களும் செயல்களும் வித்தியாமானவையா கவே எப்போதும் இருக்கும்.

தான் தன் குடும்பம் என்ற ஒருவரை யறைகள் அவருக்குள் எப்போதும் இருந்த தில்லை. பொதுநலம் சார்ந்தவையாகவே அவை யாவும் இருக்கும். அவரது எந்த ஒரு நன்மை தீமைகளிலும் ஒத்து போகிறவளாக மோகனம்பாளும் வாழ்ந்து வந்தாள்.

மாமரத்தின் கீழ் கொப்பிலிருந்து காகம் ஒன்று கரைந்து கொண்டிருந்தது. காலை உணவு காகத்திற்கும் இல்லைப் போலும். வலு வில்லங்கமாகவே அது கரைந்து கொண்டிருந்தது.

மயில்வாகனத்தார் எழுந்து சென்று அதைக் கலைத்து விட்டு வந்து அந்தத் திண்ணைக் குந்தில் அமர்ந்தார். ஓரளவான

கல்வீடு அவர்களுக்கென்று இருந்த போதும் ஓலையால் வேய்ந்து அரையடி உயரத்திற்கு சுற்றி வர மண்ணினால் வலு அழகாகக் கட்டப்பட்டிருந்த அந்த ஒரு மால்தான் அவருக்கும் அவளுக்கும் எப்போதும் ஓர் ஆறுதலைக் கொடுக்கும். அந்தளவுக்கு அது மிக நல்ல குளிர்மையாகவும் ஆனந்தமாக வும் இருக்கும்.

திண்ணைக் குந்திலே அமர்ந்து கொண் டவரின் உள நினைவுகள் எங்கேயோ அலை பாய்ந்து சென்றுவிட்டு மீண்டு கொண்டிருந் தன. அந்த நினைவுகளை மறந்துவிட நினைக்கிறார். அதுகூட பெரிய முள்ளாக வந்து அவர் நெஞ்சினை கீறிக் கிழித்துக் கொண்டிருந்தது.

மோகனாம்பாள் தேனீர் கொண்டு வந்து கொடுக்கிறாள். அவரின் சிந்தனைகள் கலைந்தோடுகின்றன... "தேனீரை அவளிட மிருந்து வாங்கிக் கொண்டே...."

"மோகனம் வவுனியா முகாமிலையி ருந்து கொஞ்சம் கொஞ்சமாய்ச் சனங்களை விடப் போறாங்களாம்" என்று கூறிக்கொண்ட வர் தேனீரை ஒரு உறிஞ்சி உறிஞ்சுகிறார். அது நாவுக்குச் சுவையாக இருந்திருக்க வேண்டும் மேல் உதட்டினால் கீழ் உதட் டினை தொட்டு மெல்லியதாக வாயைத் திறந்து கடவாயினை வெளியே இழுத்து சுவையை ருசித்துக் கொண்டார்.

"என்னப்பா சொல்லிறியள்?"

தேத்தண்ணி கொடுத்துவிட்டுச் சென்ற மோகனம்..... புருசன் சொல்லிவிட்ட புதினச் செய்தியைத் திடுக்கிட்டு.... அவசரமாய் கேட் டுக் கொண்டாள்.

நான் ஒருக்கால் டீயோறோ ஒவ்வீசுக் குப் போய் வரப்போறன். அங்கை ஃபோம் குடுக்கினமாம்....."

மயிலர் இப்படிச் சொல்லிக்கொண்டு குடித்து முடித்துவிட்ட தேனீக் கோப்பையை திண்ணைக் குந்தின் அடியில் வைக்கிறார். பின்னர் எழுந்து கிணற்றடிப் பக்கம் சென்று கொண்டிருந்தார். அந்தத் திண்ணைக் குந் தில் மோகனம் குந்திக் கொண்டாள்.

அவள் வவுனியா முகாமில் அடை பட்டிருக்கும் மகள் குடும்பத்தை நினைத்து ஆவல் கொள்கிறாள். அதை நினைக்கையில் கண்களும் பனிந்து விடுகின்றன.

இருவரும் முகாம் சென்று மகள் குடும் பத்தைப் பார்த்து வந்த நாள் தொடக்கம் சித்த சுயாதினமற்றவர்களாய் நடைப்பிண மானார்கள். அவர்களைச் சந்தித்ததும் சந் திக்காததுமாக காத்துக்கிடந்து, அந்தச் செலவு, இந்தச் செலவு என்று எல்லாத்திற்கு மாகச் சேர்த்து கொண்டுபோன பணமும் தீர்ந்துபோக, போதாக்குறைக்கு நகைகளெல் லாம் வித்து மகளுக்கும் கொடுத்து கடைசி யாக வெறுங்கை முழங்கை என யாழ்பாணம் வந்து சேர்ந்துவிட்டனர்.

மோகனம் திண்ணைக் குந்துக் கட்டில் இருந்து கொண்டவள் முகாம் மக்களின் அல்லோல கல்லோல அலங்கோலங்களை நினைத்துவிட்டு பெரும் மூச்சொன்று விட்டு விடுகிறாள். இறுகிவிட்ட மனச் சுமைகளை இந்த பெருமூச்சு ஓரளவு இழக்கி விட்டிருக்க வேண்டும். பின்னர் எழுந்து அடுக்களை நோக்கி நடந்தாள். அங்கே அவள் பாத்திர மொன்றினுள் நீரினை விட்டு அடுப்பு மூட்டி சுடு தண்ணி ஆக்குவதற்கு தயாராகினாள் அடுப்பு நல்ல சுவாலையுடன் எரிந்து கொண் டிருந்தது...

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்குப் முன்பு மயிலரும் மோகனமும் கல்யாணம் செய்து நீண்ட காலங்களாகியும் பிள்ளைகள் என்று எதுவும் அவர்களுக்குக் கிடைத் திருக்கவில்லை .

மயிலர் ஊருக்குச் செய்துவரும் தொண் டுகளுக்காவது மோகனத்திற்கு ஒரு பிள்ளை கிடைத்துவிட வேண்டும் என்று பலரும் அவ ளுக்காக பெருமூச்சு விட்டனர்.

எத்தனை கோயில்கள்! எத்தனை எத்தனை நேத்திக் கடன்கள்! ஏதும் செய்தும் பலன் கிடைக்காது போகவே பெண் பிள்ளை ஒன்றை தத்தெடுத்து வளர்த்து வந்தனர். தாங்கள் நேர்ந்துவிட்ட நேர்த்திகளுக்குக் கடவுள் தந்த பரிசு என்று ஓரளவு ஆறுதல் அடைந்து கொண்டனர் இருவரும் .

ஒரு பிள்ளை. அழகான பிள்ளை. செல் லப் பிள்ளை. ஊரவரின் அன்புப் பிணைப்பில் கட்டுண்டு செல்வச் செழிப்பாய் வளர்ந்து வந்தாள் குழந்தை சுகந்தி.

ஊரவரின் பிள்ளைகளை தன் பிள்ளைகள் போல் கனம் பண்ணி வளர்த்தார்கள். அதுதான் அவர்கள் பிள்ளைக்கும் ஊரவரின் அன்பான அரவணைப்புகள் தாராளமாக கிடைத்திருந்தன. மனித சமுதாயத்தின் இறுகிய அழுக்காறுகள் எவை என்பதை மறந்து அன்பாகவும் ஆதரவாகவும் அரவணைக்கப்பட்டு வளர்ந்து வந்தாள்.

அந்த இரண்டரைப் பரப்புக் காணிக்குள் அமைந்து விட்ட அந்த சிறிய கல் வீடும் அந்த மாலும் எப்பவும் பசுமையாகவே இருக்கும். ஒன்றிரண்டு பனைமரங்கள் இருந்து விட்டபோதும் தென்னை மரங்கள் கொஞ்சம் அதிகமாகவே செழித்து வளர்ந்து நின்றன.

கறுத்தக்கொழும்பான் மாமரம் ஒன்று. ஆளைக் கொய்ய மரம் ஒன்று. மாதுளை மரம் இரண்டு. இப்படி அந்த வளவு பசுமையாக காட்சி கொடுத்துக்கொண்டே இருக்கும். மணலும் பால் போன்ற மணல் தான்.

அயல் வீட்டுப் பிள்ளைகள் சுகந்தியைத் தேடி எப்போதும் வருவார்கள். வெயில் பட்டு விடாத பால் போன்ற மணலில் விளையாடுவதென்றால் பிள்ளைகளுக்கு கொள்ளை ஆசையாகத்தானே இருக்கும்.

அங்குள்ள பழங்களில் ஏதாவதொன்றை மோகனம் கொண்டுவந்து சமமாக பங்கிட்டு கொடுப்பாள். மோகனத்தின் அந்த ஒரு உபசரிப்பே போதும் பிள்ளைகளுக்கிடையில் பகைமை என்ன வென்று தெரியாதிருப்பதற்கு.

பள்ளிக்கூடம் இல்லாத நாட்களில் நீண்ட நேரமாக விளையாடிக் கொள்ளும் அந்தப் பிள்ளைகளுக்கும் மதிய உணவினை மோகனம் பரிமாறி மகிழ்வாள்.

மோகனத்தின் கையால் உணவு வாங்கிச் சாப்பிடுவதென்றால் சுகந்தியின் சிநேகிதிகளுக்கும் நிறைந்த இன்பமாக இருக்கும். மோகனம் அன்பாக அரவணைப்பது போலவே அவள் பரிமாறும் உணவும் எப்போதும் சுவையாகவே இருக்கும்.

வளவுக்குள் நிற்கும் தென்னை மரங்கள் குலை குலையாக காய்த்திருக்கும். காய் - பழுத்து காய்ந்து விழும். விழுந்து விட்ட தேங்காய்களை மோகனம் எடுத்து அதற்கான இடத்தில் பக்குவமாய் போடுவாள்.

காலை அல்லது மாலை நேரங்களில் மரங்களுக்கு நீர் பாய்ச்சும் மயில் வாகனத்தாரின் கம்பீரமும் மிடுக்கும் ஊரில் வேறு யாருக்கு இருக்கும். அவருக்கு ஒத்துபோகிறவளாக மோகனம் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருப்பாள்.

தேங்காய்களை அயலிலுள்ளவர்கள் ஒரு சிலருக்கு கொடுத்து உதவுவார்கள். சிலர் தாங்களாகவே வந்து எடுத்துச் செல்வார்கள். எஞ்சியவற்றை விற்று காசாக்கி அதில் ஒரு பகுதியை அந்த ஊர் கோயிலுக்குக் கொடுத்துவிடுவார்கள்.

விழுந்து கொள்ளும் பழங்களை பொறுக்குவதற்கும் பழங்களை பிடுங்கிச் சாப்பிடுவதற்கும் என்று ஒரு சின்னக் கூட்டமே அங்கு வந்து போகும். சிறுவர்கள் மரக் கொப்புகளை முறித்து விடாத வண்ணம் மயிலர் பார்த்து நிற்பார். எட்டாத உயரத்தில் உள்ள பழங்களை பிடுங்குவதற்கு சிறுவர்கள் மரத்தில் ஏறுவதை கண்டால் ஓடிப்போய் தடுத்து நிறத்திவிடுவார். கொக்கத்தடியை கொண்டு வந்து அந்தப் பழங்களை தானே பிடுங்கி கொடுத்து அனுப்பிவிடுவார்.

சின்னதுகள் முதல் பெரியதுகள் வரை அந்த ஊரே அவர்களை மதித்து மகிழும்.

அளவான வருமானம் இருந்தாலே போதுமானதென்று நினைப்பவர்கள். ஆக உச்ச மகிழ்சியும் வேண்டாம். அதி கூடிய தரித்திரமும் வேண்டாம். இதுவே மயிலரின் எண்ண அலைகள். அவரின் வாழ்வு வளமானது என்று மட்டுமே நினைத்து வருபவர்.

இப்படியே காலங்கள் உருண்டோடின சுகந்தி கட்டிளங் குமாரியாகி கல்யாண வயதடைந்திருந்தாள்.

மயிலரும், மோகனமும் நல்ல எண்ணங்களை தங்கள் மனங்களுக்குள் புதைத்து வைத்திருந்தவர்களல்லவா? அது பசுமையாய் வளர்ந்து தோப்பாகி சந்தியின் இல்லற வாழ்வை குளிர்மை செய்திருந்தது.

சுகந்தி க.பொ.த.(உயர்தர) வகுப்பு கல்வி கற்றிருந்தாலும் வாழ்வியலுக்குரிய அத்தனை அம்சங்களும் நிறையவே தாய் மோகனத்திடமிருந்தது கற்றுத் தெளிந்

திருந்தாள்.

பட்டதாரி மாப்பிள்ளையை கரம் பிடித்துக் கொண்டாள். சுகந்திக்கேற்ற, சுகந்தியின் தாய் தகப்பனுக்கேற்ற நல்ல குணமான மாப்பிள்ளை கிளிநொச்சியிலுள்ள ஒரு பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றுகிறார். குறைந்தது ஐந்து வருடங்களாவது அங்கு கல்வி கற்பிக்க வேண்டும். கல்யாணம் செய்து அடுத்த மாதமே மாப்பிள்ளையுடன் சுகந்தியும் கிளிநொச்சி சென்றுவிட்டாள்.

இந்தப் பிரிவு நிலையினை மயிலராலும் மோகனத்தாலும் ஜீரணிக்க முடியவில்லை. அதுவே அவர்களின் வாழ்க்கையில் பேரிடி என நினைத்திருந்தனர்.

ஏ-9 வீதியும் திறந்துதானே இருந்தது. மாத்திற்கு ஒரு தடவை எனச் சென்று சுகந்தியை பார்த்து வந்தனர்.

சுகந்தி கர்ப்பமாயிருந்தாள். மூன்று மாதம் ஆனதும் அவள் யாழ்ப்பாணத்தில் தன் தாய் வீடு வந்தாள். பிரசவ காலம் வரை அவள் தாயின் பராமரிப்பில் பக்குவமாய் பராமரிக்கப்பட்டாள்.

இந்தக் காலங்களில் சுகந்தியின் கணவன் வெள்ளி பிந்நேரம் வந்து ஞாயிறு பிந்நேரம் கிளிநொச்சிக்குப் புறப்பட்டுவிடுவான். பாடசாலை தவணை லீவு என்று வந்தால் மூன்றுகிழமைக்கு குறையாத நாட்கள் அவன் சுகந்தியோடு நிற்பான். இது சுகந்திக்கும் ஓர் ஆறுதலாகவே இருக்கும்.

பிள்ளை பெற்றெடுத்து நான்கு மாதம் கழித்து தன் கணவருடன் மீண்டும் கிளிநொச்சிக்கு சுகந்தி சென்றாள்.

என்ன கொடுமை இது. சுகந்தி கிளிநொச்சி சென்று மூன்றாம் நாளே ஏ-9 பாதையும் மூடப்பட்டுவிட்டது.

அன்றிலிருந்து பிடித்த தரித்திரம். மயிலரையும் மோகனத்தையும் துரத்திக் கொண்டது. வன்னி நிலவரம் சோகத்தின் உச்சத்தை தொட்டு தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

நாளாந்த பத்திரிகைகளில் வரும் செய்திகளை வாசிக்க வாசிக்க மயிலருக்கும் மோகனத்திற்கும் தலை வெடிப்பதாகவே இருந்தது.

மரணமடைந்துகொள்ளும் மக்களின் அவலங்களை நினைத்து நினைத்து கண்ணீர் விட்டு நாளாந்தம் மனம் உடைந்து துவண்டு போயிருந்தனர்.

பக்கத்து வீடு சென்று ரீ.வி செய்தி பார்ப்பதும், தன் வீட்டு றேடியோவில் செய்தி கேட்பதுமாக அலைந்து உலைந்து திரிந்து கொண்டார் மயிலர்.

"ஆண்டவா... இதென்ன கொடுமை! தமிழன் என்ன பாவப்பட்ட ஜென்மம்! ஏன் இப்படி வதைபட வேண்டும்" இப்படி மயிலர் அலுத்துக் கொண்டார்.

சண்டை ஓய்ந்து, ஒரு தொகை சனங்கள் முகாம்களில் வந்து தங்கியுள்ளனர் என்ற செய்தியால் ஓரளவு அமைதி கண்டது மயிலரின் மனது. இத்தனைக்கும் மோகனம் நல்லாகவே இளைத்துப் போயிருந்தாள்.

விதானை வீடு, டீ எஸ் ஒவ்வீஸ் என ஓடி ஓடித் திரிந்து, ஆமிக்காம்பில் வரிசை கட்டி தூங்கி நின்று ஒரு மாதிரி கிளியரன்ஸ் எடுத்து திருகோணமலை போய்ச் சேர்ந்தாள்.

திருகோணமலையில் இருந்து வவுனியாவுக்குச் சென்று, அங்கு மகள் குடும்பத்தை பார்த்துவிட வேண்டும் என்ற அந்த அவா... எத்தனை கால தாமதத்தை உண்டு பண்ணியிருக்கும்.

மனம் துடியாய் துடித்துக்கொள்ள உணவின்றி, உறக்கமின்றி காத்துக் கிடந்து உள்ளே சென்று மனித அவல வாழ்வுதனை கண்டபோது மோகனம் ஒப்பாரி வைத்து அழத் தொடங்கிவிட்டாள்.

தாயையும் தந்தையையும் கட்டி அணைத்து பெரிதாக அழுதுவிட்டாள் சுகந்தி.

துரத்தும் செல்லுக்கும், விமானத்தின் குண்டுக்கும் பயந்து தப்பி ஓடி வரும் வழியில் செல் சன்னம் ஒன்று வந்து சுகந்தியின் கணவர் கால் தொடையை சீவித் துளைத்தெறிந்த சம்பவம். சுகந்தி அதையே நினைத்து நினைத்து பிரமை பிடித்தவளானாள்.

இத்தனை விடயங்களையும் நினைத்துப் பார்த்த மோகனத்தின் கண்கள் கலங்கி விடுகின்றன. கொதித்து எழுந்த மனக் கவ

லைகள் கண்ணீர்த் துளிகளாகி கன்னங் களை நனைத்த வண்ணம் இருந்தன. சேலைத் தலைப்பால் கண்ணீரை துடைத் துக்கொண்டாள்.

அடுப்பிலே தண்ணீர் நல்லாகவே கொதித்து குமிழிகளை வெளியே சிந்திக் கொண்டிருந்தது. அடுப்புக்கு முன்னால் இருந்துகொண்ட மோகனத்தின் நெஞ்சும் புகைந்துகொண்டது. கொதித்துவிட்ட நீரை இறக்கிவிடுவதற்காகப் பிடித்திறக்கும் சேலை யைத் தேடிக் கொண்டிருந்தாள்.

இதற்கிடையில் தேத்தண்ணி மட்டும் குடித்துவிட்டு, அலுவலகம் சென்ற மயிலர் அலுவலகம் சென்று அங்கேயும் வரிசை கட்டி நின்று ∴போம் எடுத்து வீடு வந்து சேர்ந்து விட்டார். அவருக்குச் சரியான களைப்பு.

மயக்கம் வருவது போன்ற ஒரு பிரமை. அதற்குள் மயங்கி நிலத்தில் விழுந்துவிட் டார். என்ன ஏதென்று கேட்பதற்குள் "ஐயோ... என்ர ராசா..." என்று குளறிக் கொண்டாள் மோகனம்.

சில நிமிடங்களுக்குள் அயல் வீடெல் லாம் மோகனம் வீட்டுக்கு ஓடி வந்துவிட்டனர்.

திருநீறும் வெள்ளைப் பூடும் சேர்த்து சூடாக வறுத்த திருநீற்றுப் பவுடர் குளிர்ந்து விட்ட அவரின் உள்ளங்கால்களையும், உள் ளங் கைகளையும் தெம்பேற்றிக் கொண்டிருந் தது.

மோகனம் மயிலரின் தலையை தூக்கி தன் மடி மேல் வைத்துக் கொண்டாள். தன் இடது கையினால் அவரின் தலை மயிரினை உள்கோதி விட்டவண்ணம், வலது கையி னால் ஓலை விசிறி ஒன்றினால் பலமாகவும், அவசரமாகவும் விசிக்கிக் கொண்டிருந்தாள்.

கொஞ்ச நேரம் சென்றதும் மயிலர் கண் களை திறந்து அக்கம் பக்கம் பார்க்கிறார். திகைப்படைந்துவிட்டார். 'எனக்கு என்ன நடந் தது? ஏன் இவ்வளவு சனம் நின்று கொண்டி ருக்கினம்...?' என நினைத்தவாறு எழுந்து இருந்து கொண்டார்.

நல்ல காற்று வரும் வண்ணம் மோகனம் விசிறியை விசிக்கி கொண்டேயிருந்தாள். அது அவருக்கு கொஞ்சம் சுகமாகவும் இருந் தது. இருந்தும் அவரது சிந்தையில் வவுனியா முகாமில் கண்டு வெறுத்துப்போன சனங் களின் வாழ்வு நிலை பற்றியதாகவே இருந்து கொண்டது.

ஒரு நாள் மோகனம் தன்னால் இயன் றளவு மட்டும் வீட்டு வேலைகளை செய்து கொண்டிருந்தாள். உடல் ஓரளவு தெம்பா யிருந்தாலும் அவள் உளம் நல்லாகவே களைப்படைந்திருந்தது.

சாப்பாட்டில் மனம் நாட்டம் கொள்ளாது போக, மக்களின் அவலங்களுக்கான மயில ரின் நெஞ்சு பிய்ந்து உடைந்து கொண் டிருந்தது.

நோயும் மிக விரைவாக மயிலரை தொற்றிக் கொண்டது. படுத்த படுக்கையாகி விட்டார். இன்றைக்கோ....? நாளைக்கோ... என்று மயிலரின் உயிர் ஊசலாடிக் கொண் டிருந்தது.

இம்முறை கறுத்தக் கொழும்பான் மாம ரத்தில் அங்கும் இங்குமாக ஒரு சில பழங் களே தொங்குகின்றன. பக்கத்து வீட்டார் நினைத்திருந்தால் அந்த மரங்களை இன்னும் குளிர்மை செய்திருக்கலாம். நிறைந்த பழங் களையெல்லாம் பெற்றிருக்கலாம்.

பிடுங்கி வந்த மாம்பழங்களில் ஒன் றினை தோல் சீவி கீலங்களாக வெட்டினாள் மோகனம்.

இன்னொரு பழத்தை அவரது வலது கைகளுக்குள் வைக்கிறாள். அதை இறுக பற்றிக் கொண்டார் மயிலர். அது 'தன் பேத் திக்காக மட்டும்' என அவர் நினைத்திருக் கையில், வெட்டிச் சீவிய மாம்பழக் கீலங் களில் ஒன்றினை மயிலரின் வாய்க்குள் திணித்துவிட்டாள் மோகனம். அவர் வாயை இறுக்கமாக மூடிக் கொண்டார்.

இரண்டு தென்னை மரங்கள் வாடிச் சோர்ந்து போய் குளிர்மை இழந்து நின்றன. அவர் வீட்டு வளவில் பால் போன்ற மணலும் அதன் தன்மையை இழந்திருந்தது.

பனை ஓலைகள் காய்ந்து தொங்கிக் கொண்டிருந்தன. பலத்த காற்றும் வீசுகிறது காய்ந்த காவோலைகள் பனையைச் சுற்ற உரோஞ்சிக் கொண்டிருந்தன.

அவற்றுள் ஒன்று இன்றைக்கோ அல் லது நாளைக்கோ விழுந்தாலும் விழலாம்......?

## ஓசை எழுதும் கவிதை

# கோமன் மான்களும் கோவேறு கழுதைகளும்



கனவுகள் அனேகமாக மகிழ்வையும் கிளர்ச்சியையும் ஊட்டுபவை. அந்தப் புனைவுலகம் ரசிக்கத்க்கது, அலாதியானது. வாழ்கை என்னவோ அந்தப் புனைவுலகின் மறுகோடியில் இருப்பது போன்றே தோற்றமளிக்கிறது. வலி நிறைந்த உண்மையும் அதுவே. பொதுப்புத்தி மனநிலையில், கனவுலகில் இன்பமாக இருக்கவே எல்லோரும் விரும்புகிறார்கள்.

இந்த மனநிலையைச் சினிமா உலகம் நன்றாகவே தனக்கு வசதியாகப் பயன்படுத்துகிறது. குறிப்பாக தமிழ்த் திரையுலகு தனது ரசிகனை வெறும் அடிமட்டச் சிற்றின்ப நுகர்வோனாகவே வைத்திருக்க விரும்புகிறது. தமிழ்ச்சினிமா மிகவும் மோசமான சூழலால் கட்டுண்டிருக்கிறது. மறைமுகமாய்த் தமிழ்ச்சினிமா, பண்பாடு என்ற சொல்லாடலைப் பயன்படுத்தி மக்களிடையே ஏற்படுத்தி வைத்திருக்கும் கருத்தியல்களையும், கீழ்த்தரமான உணர்ச்சிகளையும், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, விகாரமாய் நிறுவி வைத்திருக்கும் கட்டமைப்புகளையும் அது உருவாக்குகின்ற அரசியல் பிம்பங்களையும் மறு விசாரணை செய்ய வேண்டிய அவசியத்தில் நாமிருக்கிறோம்.

தனக்குப்பிடித்த நாயகியின் பல்வேறு அரைகுறையாடைக் கோலங்களையும், கணவனின் முன் மனைவி செய்யத் தயங்கும் உடல் அசைவுகளையும், நாயகியின் அங்கங்களையும், காதல் விளையாட்டுகளையும் பார்த்துக் கிளர்ச்சியுறும் கூட்டமாய்த், தமிழ் சினிமா ஒரு சமூகத்தையே

மாற்றி வைத்திருக்கும் இந்த சூழலில், தமிழ் சினிமா, தனது ரசிகர்களுக்கு செய்த பெருந் "தொண்டு", அவர்களை "விசிலடிச்சான் குஞ்சுகளாக" மாற்றி வைத்திருப்பதுதான். இது வெறுமனே வியாபாரத்திற்கானது மட்டுமல்ல, தான் கட்டமைக்க நினைக்கின்ற அரசியலைப் பொதுப்புத்தி மனோநிலையில் உள்ளவர் களுக்குட் திணித்து அவர்களை மூளைச் சலவை செய்கின்ற பணியைத் திரைப் படங்கள் நன்றாகவே செய்கின்றன. எதை



யும் தனது "ஹீரோ" செய்து முடிப்பான் என்ற சினிமாத்தனமான நம்பிக்கை, சினி மாவையும் கடந்து நடைமுறை வாழ்க் கையில் எல்லாவற்றையும் தலைவன் ஒரு வனிடம் ஒப்படைத்து விட்டு தனிமனித வழிபாடு நடத்தியபடி எதிர்பார்த்திருக்கும் கூட்டங்களைத் தான் தமிழ் சினிமாவால் உருவாக்க முடிகிறது. இன்றும் உண்மை களை ஏற்றுக்கொள்ளவும் யாதார்த் தத்தை கண் திறந்து பார்க்கவும் மறுக் கிற மனநிலை உருவாக்கத்தில் சினிமா வும் எதையும் சாதித்து முடிக்கும் அதன் "ஹீரோ"வும் எவ்வளவு பங்களித்திருக் கிறார்கள் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும்.

தமிழ்ச் சினிமா கட்டமைக்கின்ற அறஞ்சார் பண்பாடுகள் எங்கிருந்து எப்படி உருவாகின்றன? கற்பனைகளில் இருந் தல்ல, மாறாக மனித வாழ்வியல் முறை களில் இருந்து உருவாகின்றன. உழைப் பில் ஈடுபடும் மக்கள் ஒரு புறமும், உழைப்பில் ஈடுபடாது, உழைப்பவனின் உழைப்பைத் திருடி வாழும் கூட்டம் மறுபுறமாக, இரண்டுமே பண்பாட்டின் மூல மாகவுள்ளன. உழைப்பைத் திருடி வாழ்ப வனுக்குத், தனது திருட்டை நியாயப் படுத்தும் சமூக ஒழுங்கு தான் ஜனநாய கம் என்னும் பண்பாடு. மற்றவனின் உழைப்பைத் திருடுவது மனித சுதந்திர மாகவும் அதை அங்கீகரிப்பது ஜனநாயக மாகவும் ஆகின்றன. மற்றவன் உழைப்பை அவனின் கண்ணுக்கே புலப் படாத வகையில் திருடும் சுதந்திரத்தை ஜனநாயகமாக்குகின்ற சமூக அமைப்பு ஒழுங்குகள் சட்டங்களாகின்றன. இதி லிருந்து "நுகர்வுக் கலாசாரம்" இதை ஒழுங்குபடுத்த மக்களிடம் இந்த ஜன நாயகமாக்கப்பட்ட திருட்டை அங்கீகார மாகக் கொண்டு சேர்க்கப் பயன்படுகிறது. மொத்தத்தில் உழைப்பை மட்டுமல்ல, மனித வாழ்வியலையே சுரண்டும் கட்ட மைப்பே நுகர்வு கலாசாரமாகின்றது.

பொருளாதாரச் சந்தையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவு, சினிமாவில் நிக ழும் மாற்றமாகின்றது. இன்றைய உலக மயமாதலின் நுகர்வுச் சந்தையை விளம் பரம் செய்யும் கலாசாரத் தரகுகளாகவே சினிமா இருக்கின்றது. பொதுப்புத்தி மட் டம் நாணம் கட்டிய மாடுகள் போன்று பழக்கப்படுத்தப்படுகின்றது. புதிய தலை முறைகளை கருவிலேயே இருந்து இதற்

குள் உற்பத்தி செய்கின்றனர். கருவி லேயே புகுத்தப்படுகின்ற நுகர்ச்சி வெறி சார்ந்த கவர்ச்சியும் ஆபாசமும் திமிரா கவே வெளிப்படுகின்றது. சமூகமே இதற் குள் சீரழிந்து விடுவதும் சினிமாவூடாக அதை கற்பனையில் நுகர்ந்து வாழ முனைவதும், அவற்றை நியாயப்படுத்து கின்ற எல்லைக்குள் அங்கீகரிக்கப்படு கின்றன. தமக்கு தாமே, தமது மனத் திரையில் இந்த மாயையை உற்பத்தி செய்கின்றனர். சில சமயங்களில் நாம் சிறிது நேரத்துக்குப் பகற்கனவுகளில் ஆழ்ந்துவிடுகிறோம். ஒருவகைத் திகில ளிக்கும் கற்பனைத் தோற்றம் சிறிது நேரத்திற்கு மட்டுமே. பிறகு மறுபடி நம் கடினமான அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டு விடுகிறோம். விருப்ப நிறை வேறல்கள், மாயக் கற்பனைகளின் சில கணங்கள் நமக்குப் புத்துணர்வு அளிக் கின்றன. சில சமயம், நம் நிறைவேறாத ஆசைகளை, அனுபவங்களை நினை வுக்குக் கொண்டுவருவதால் வருத்தமும் அளிக்கின்றன. இதையே சினிமா செய் கின்றது. தமிழ் சினிமாவில் கனவுக்கும் நடப்புக்குமிடையே செயற்பாடு அதீத வேறுபாடுகளாற் பின்னப்படுகிறது. யதார்த்தம் பற்றியோ நடைமுறை உலகு பற்றியோ எதுவித அக்கறையுமன்று உரு வாக்கப்படும் சினிமா, மனிதர்களை அந் தரத்தில் உலவும் மனிதர்களாகவே வாழ வைக்க விரும்புகிறது. சந்தைக்கு தேவை நுகர்வாளர்களே அன்றிச் சிந்திக்கும் மனிதர்களல்ல. ரேமோக்களையும், கந்த சாமிகளையும், அகோரிகளையும், கஜனி களையும் உருவாக்கும் தமிழ்ச் சினிமா வால் வேறெதை உற்பத்தி செய்யமுடி யும்? அதனால் தானோ "காமன் மேனும்" (Common Man) ஆதிமனிதனாக இருக்க சபிக்கப்பட்டிருக்கிறான் – இல்லை விதிக் கப்பட்டிருக்கிறான் – போலும். அடிப்படை யில் தான் ஒரு புரட்சிக்காரன் என்றும் வணிகச் சினிமாவின் நிர்ப்பந்தங்கள் கார ணமாகத்தான் சில சமரசங்கள் செய்ய நேர்ந்து விடுகிறது என்றும் தங்களை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் போலி கள் நிறைந்த தமிழ்த் திரையுலகில், இந்த மாதிரியான அபத்தங்கள் ஆபத்துக் கள் தொடர்ந்து நிகழும்.

இந்த இடத்தில் தான் "வன்னிஹாமி" என்கிற "கொமன் மான்" நினைவுக்கு வருகிறார். யார் இந்த வன்னிஹாமி? தனது மகனை இராணுவசேவைக்கு அனுப்பிவிட்டு வீட்டுக்கு வரும் சவப்பெட் டியை ஏற்க மறுக்கின்ற இலங்கைத்தீவின் பின்தங்கிய கிராமமொன்றில் வசிக்கும் வயோதிபத் தந்தை. பிரசன்னா விதானகே "புரகந்த களுவர" திரைப்படத்தில் முன் னிறுத்தும் "கொமன் மான்" தான் வன்னி ஹாமி. இங்கே தான் தமிழ்ச் சினிமாவின் "கொமன் மானுக்கும்" சிங்களத் திரை யுலகின் "கொமன் மானுக்கும்" இடை யிலான வேறுபாடு தெரிகிறது. "தீவிரவா தத்தை தீவிரவாதத்தால் தான் அழிக்க வேண்டும்" என்று வசனம் பேசுகிற கமல் ஹாசனின் "கொமன் மானும்" மகனின் இறப்பை ஏற்காது நட்டஈட்டை பெற மறுக் கின்ற பிரசன்னா விதானகேயின் "கொமன் மானும்" மிகவும் விலகித்தான் நிற் கிறார்கள்.

"புரஹந்த களுவர", "உன்னைப்போல் ஒருவன்" இரண்டுமே அரசியல் பேசும் படங்கள் என்று கொண்டால் ஒன்று யதார்த்தத்தைப் பட்டவர்த்தனமாக முகத் தில் அறைவதுபோல, ஆனாற் கலை யுணர்வுடன், பேசுகிறது. மற்றது உலகத் தரம் என்ற போர்வையில் ஃபாசிசத்தை வழிமொழிகிறது. ஆனால் இலங்கையி லும் இந்தியாவிலும் உன்னதமான பட மாக "உன்னைப்போல் ஒருவன்" போற்றப் படுகிறது. இது ஒரு சமூக வியாதி. புஷ்

முன்மொழிந்த பயங்கரவாதத்திற்கு எதிரான போரை வழிமொழிகிறார் கமலஹாசன். புஷ் கேட்ட அதே கேள்வியைத் தான் கமலின் "கொமன் மானும்" வேறு வகையில் கேட்கிறார். "நீங்கள் ஒன்றில் எங்களோடு இருக்கிறீர்கள், அல்லது எதிரிகளோடு இருக்கிறீர்கள். சொல்லுங்கள் யாரோடு இருக்கிறீர்கள்?" யாரோடும் இல்லை என்ற பதிலே அளிக்க முடியாத வண்ணம் கேள்வி கட்டமைக்கப்பட்டாயிற்று. இதுதான் கமலின் "கொமன் மான்" கட்டமைக்கிற அரசியல்.

"புரகந்த களுவர" நாட்டுக்காக போராடும் இராணுவத்தினரைக் கொச்சைப் படுத்துவதாகக் கூறித் தடைவிதிக்கப் பெற்றது. ஒரு கிராமத்து ஏழைக் குடும்பத்து இராணுவ வீரனின் வாழ்க்கையையும் அவர்களது அவல நிலையையும் அப்பட்டமாகப் படம்பிடித்துக் காட்டியதற்காக அதன் இயக்குனர் பிரசன்ன விதானகே பல்வேறு மிரட்டல்கட்கும் எதிர்ப்புகட்கும் ஆளானார்.இலங்கையில் மிகுந்த சர்ச்சைக்குரிய அதிகார பீடங்களில் உள்ளவர்களை, இன்றுவரை, கோபப்படுத்துகிற, சங்கடப்படுத்துகிற ஒரு திரைப்படமாக "புரஹந்த களுவர" இருந்து வருகிறது. யுத்தத்தின் பின்னரான இலங்கையிலும் "புரஹந்த களுவர" தனது தனித்துவத்தை இழந்துவிடவில்லை. ஏனெனில் எத்தனையோ வன்னிஹாமிக்கள் எந்தக் கமெராக்களுக்குமோ ஊடகங்களுக்குமோ தென்படாமல் மின்சாரமோ பேருந்துப் பாதையோ இல்லாத கிராமங்களில் துயரங்களைச் சுமந்தபடி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பற்றி அரசாங்கமோ ஊடகங்களோ கவனம் கொள்ளப் போவதில்லை. ஏனெனில் யுத்த வியாபாரம் நன்றாய் நடக்கையில் வியாபாரத்தைப் பெருக்க அவர்கள் எவ்விதத்திலும் பயன்படப் போவதில்லை.

"புரஹந்த களுவர" பற்றிப் பேசும் போது "கலையை நதியென உருவகித்துக் கொண்டால், மேற்பரப்பில் நீந்துகின்ற கலைஞர்களும் உள்ளனர். அதே வேளை அடியாழத்திற் சுழியோடும் கலைஞர்களும் உள்ளனர். இந்த ஆழத்திற் சுழியோடும் கலைஞர்களின் வரிசையில் இருக்கவே நான் விரும்புகிறேன். ஏனெனில் மனிதாபிமானம், உண்மை மற்றும் நீதி என்பனவற்றில் எப்போதுமே நான் பற்றுறுதி கொண்டுள்ளேன்" என்கிறார் பிரசன்ன விதானகே. இதையே கமலஹாசனும் சொல்லக்கூடும். வித்தியாசம் அசலுக்கும் போலிக்குமிடையிலானது.

"இன்றைய இலங்கைத் திரைப்பட இயக்குநர்கள் எதிர்நோக்குகின்ற மிகப் பெரிய சிக்கல், பொய் எது என்பதைக் கண்டறிவதே" எனச் சொல்லும் பிரசன்ன விதானகே "போர்வீரன் ஒருவன் விபச்சார விடுதிக்குச் செல்வதாகவும் அவனதும் உளவியல் பிரச்சனைகள் பற்றியும் காட்ட முற்படுகிறபோது கலாசாரக் காவலர்களும் தேசப்பற்றாளர்களும் மல்லுக்கு நிற்கிறார்கள், அவர்கள் விரும்புவது வீரம் நிறைந்த ஹீரோயிசத்தையே அன்றி யதார்த்தத்தையல்ல. ஏனெனில் யதார்த்தம் அவர்களது அரசியலின் அத்திவாரத்தையே அசைக்க வல்லது. எனவே ஒரு மையப்படுத்தப்பட்ட தேசத்தில் பொய்யைக் கண்டறிவதே சவாலானது" என்கிறார். அவர் சொல்வது இலங்கைத் திரைப்பட இயக்குனர்களிற்கான சவால் மட்டுமல்ல தமிழ் திரைப்படங்களைப் பார்க்கின்ற அனைத்துக் கொமன் மான்களுக்குமானது.

அந்தப் பொய்யைக் கண்டடைவதே குதிரையையும் கழுதையையும் வேறு பிரிக்க உதவக்கூடும்.

தொடர்ந்து பேசுவோம்...

– ஊர்சுற்றி

அழ. பகீரதன்

# மாண்டவர் யாரோ?

ஆண்ட பரம்பரை
ஆளநினைத்து
வீழ்ந்த போதும்
வீழ்ந்த போது
மாண்டவர் யார்
வரலாற்றின் பக்கங்களைத்
தோண்டத் தோண்ட
ஆண்டவர் அடிமையாய்
காலம் காலமாய்
ஆக்கியவரின் வழிவழி
வந்த பரம்பரையோர்
மூண்ட போரில்
ஆண்ட பரம்பரையினர்
கண்ட கனவினிற்காய்
மாண்டனரேல்
ஆண்ட பரம்பரையினர்
ஆளநினைப்பது
ஆரையென
மாண்டவர் உற்றவர்
அறிவரோ
உழைப்பே உயர்வென
வாழ்ந்த மனிதர்
இழைத்த கொடுமையென
எதைச் சொல்ல...
தாமுரைக்கும் மொழி
தமக்குள கூட்டின்
இணைப்பிற்கும்
இன்புற விழைந்த உறவிற்கும்
என்பதன்றி வேறொன்றறியார்
தேறியறிதற்கா அனைவர்க்கும் கல்வி
ஆண்டபரம்பரையோருக்கு சரணம்
எனச் சொல்லவே
அகர முதல எழுத்தெல்லாம்...
தத்தம் மொழிபேசிக்
கூடி இயல்பாய்
இன்புற வாழ்ந்த
இனமென உணரா மாந்தர்
காண்டற் கரியகருவியொடு
மாண்டனரேல்
மாண்டதன் காரணம்
அறிவரோ
ஆண்ட பரம்பரை
ஆள நினைத்தது
அவரையே என
உணர்வரோ?



**- அழ. பகீரதன்**



Design By: Design Lab, 0112 431 531 - www.dsignslab.com